# உதயன்

30°c – 25°c
மழைக்கான சாத்தியம் உண்டு

சுடர் 30 கதிர் 330 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 5, வியாழக்கிழமை 22.10.2015

# மாவீரர்களை அஞ்சலிக்க ஒருபோதும் இடமில்லை

## நல்லாட்சி அரசும் கடும் பிடியில்



கொழும்பு, ஒக்ரோர் 22
தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினக் கொண்டாட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.
நவம்பர் 14 ஆம் திகதி வடக்கில் ஒரு சிலர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் ஞாபகார்த்த வைபவங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அவ்வாறான எந்தவொரு வைபவத்துக்கும் இடமளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால், ஈழவிடுதலைக்காகப் போராடி வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில் வருடம்தோறும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதியிலிருந்து நவம்பர் 27 ஆம் திகதி வரையில் மாவீரர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருவது வழமை. கடந்த மகிந்த அரசின் காலத்தில் குறித்த காலப் பகுதிகளில் படையினர் – புலனாய்வாளர்களின் நெருக்குதல் – அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நினைவுகள் அனுஷ்டிக்

## பரணகமவின் அறிக்கையில் சாதகமான விடயங்கள்

*–கூட்டமைப்பு தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 22
நாங்கள் ஏற்றுக்கொள்ளாத ஜனாதிபதிஆணைக்குழுவேகலப்புவிசாரணையைப் பரிந்துரைத்துள்ள நிலையில், இலங்கை அரசு ஐ.நா. அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த நியமித்த மக்ஸ்வெல் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை ஜனாதிபதி மைத்திரியிடம் கடந்த ஓகஸ்ட் மாதம் கையளித்திருந்தது. குறித்த அறிக்கை நேற்றுமுன்தினம் நாடாளுமன் றத்தில் சமர்ப்பிக்

## 30 கிலோ கஞ்சா சிக்கியது மிருசுவிலில்

சாவகச்சேரி, ஒக். 22
30 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா அடங்கிய 3 பொதிகள் மிருசுவிலில் வைத்து, கொழும்பிலிருந்து வந்த போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் பிடிக்கப்பட்டது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் தொண்டமானாறைச் சேர்ந்த (வயது –61), (வயது – 47) உடைய இருவரை அவர்கள் கைது செய்துள்ளனர்.
கொடிகாமம் பகுதியில் கஞ்சா இருப்பதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அலுவலர் ஏ.ஆர்.லம்பேர்ட் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் வருகை தந்து கொடி

## ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### உதவிச் செயலர் நாயகத்திடம் சம்பந்தன் குழு வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 22
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளையும், அந்தப் பரிந்துரைகளை ஆதரித்து ஐ.நாவில் அமெரிக்காவின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளையும் செயற்படுத்துமாறு இலங்கை அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுங்கள்.
– இவ்வாறு அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் நாயகம் மிரோஸ்லாவ் ஜென்காவிடம் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று நேரில் வலியுறுத்தினர்.
அத்துடன் தமிழருக்கான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு – கிழக்கில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் காணிகளை முழுமையாக விடுவித்தல், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப விசேட திட்டத்தை ஏற்படுத்தல் ஆகிய முக்கிய

## இந்தியப் படையினரால் கொல்லப்பட்டோருக்கு வைத்தியசாலையில் அஞ்சலி



யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையின் போது இந்திய அமைதிப் படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டவர் களின் 28 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.
யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய அமைதிப் படை யினரால் நடத்தப்பட்ட தாக்குதலின்போது, யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.
இவ்வாறு கொல்லப்பட்ட 21 பேரின் உருவப்படங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் அலுவலகத்தை அண்மித்து வைக்கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் வருடாந்தம் இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்று

## சமத்துவமாக நடத்தினாலேயே இலங்கைக்கு இனிமேல் உதவி

*சீன அரசு அறிவிப்பு*

பீஜிங், ஒக்.22
சமத்துவமாக நடத்தப்படுவ தன் மூலமே, இலங்கையுடன் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த முடியும் என்று சீனா தெரிவித்துள்ளது.
பீஜிங்கில் செய்தியாளர்களிடம் பேசிய சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யிங், இலங்கையும் சீனாவும், பாரம்பரியமான நட்புறவைக் கொண்ட நெருங்கிய அயல் நாடுகள். இரு நாடுகளுக்கும் இடையிலான நடைமுறை ஒத்துழைப்பு, சமத்துவம் மற்றும் பரஸ்பரம் நன்மையை அடிப்படையாகக் கொண்டது. இரு நாடுகளுக்கும், மக்களுக்கும் நன்மை

## பொருளாதார நெருக்கடியை குறைக்க சீனா உதவவேண்டும்

### இலங்கை அவசர அழைப்பு



பீஜிங், ஒக்.22
சீன அரசு, இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு உதவவேண்டும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.
ராஜபக்ச அரசால் சீனாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அதிக வட்டியுடன் கூடிய கடன்களால், இலங்கை முன்னெப்போதும் இல்லாதவாறு தற்போது மிகமோமான நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.
சீனக் கடன்களால் எமது நாடு எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடியில் பெரியளவிலான பங்கு வகிக்கின்றது. இலங்கையின் பெருமளவான வருமா

## ஒஸ்லோ பிரதி முதல்வராக ஈழத் தமிழ்ப் பெண் ஹம்சா



ஒஸ்லோ, ஒக்.22
நோர்வேயின் ஒஸ்லோ நகரின் பிரதி முதல்வராக ஈழத் தமிழ்ப் பெண்ணான ஹம்சாயினி குணரட்ணம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
இலங்கையில் பிறந்த இவர், மூன்று வயதில் நோர்வேயில் குடியேறினார். தற்போது அவருக்கு (வயது –27) ஆகும்.
கொன்சர்வேட்டிவ் கட்சியின் ஆதிக்கத்தில் இருந்து ஒஸ்லோ நகரை, எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர், நோர்வேயின் தொழிற் கட்சி தலைமையிலான பசுமை, சோஷலிஸக் கட்சிகளின் கூட்டணி கைப்பற்றியுள்ளது.
சோஷலிஸ இடதுசாரிக் கட்சியின் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான மரியன் போகன், ஒஸ்லோ மாநகர முதல்வராகப் பொறுப் பேற்கவுள்ளார். அவருக்குக் அடுத்

## இறுதிக்கட்டப் போர் குறித்து சிதம்பரத்துடன் பேசவில்லை

### அவர் இப்போது அதிகாரத்தில் இல்லாமையே காரணம் என்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்கி



யாழ்ப்பாணம், ஒக். 22
இறுதிக்கட்டப் போரை நிறுத்த இந்தியா ஏன் அழுத்தம் கொடுக்கவில்லை என்பதை, சிதம்பரம் தற்போது அதிகாரத்தில் இருந்திருந்தால் கேட்டிருப்

## புலிகள் மீதும் குற்றச்சாட்டு

### பரணகமவின் அறிக்கையில்

கொழும்பு, ஒக்.22
இறுதிப் போரின் கடைசி 12 மணி நேரத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட அதிகளவான உயிரிழப்புக்களுக்கு, விடுதலைப் புலிகளே காரணம் என்று, மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
போரின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதியை கடத்தியோருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறை

கரணவாய், ஒக்.22

இளம் யுவதி ஒருவரை கொலை செய்யும் நோக்கில் கடத்தியதோடு அவரிடமிருந்து ஒரு லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட ஆபரணங்களை கொள்ளையிட்ட மூவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் நேற்று 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

2010 ஆம் ஆண்டு பொலிகண்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சியாமிளா (வயது-23) என்பவரை கொலை செய்யும் நோக்கில் கடத்திச் சென்று இராஜகிராமம் பகுதியில் அடைத்து வைத்து நைலோன் கயிற்றால் கழுத்தை நெரித்து காயமேற்படுத்தியதுடன் அவரிடம் இருந்து சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் யோகராசா ரவீந்திரன், தம்பிராசா சீமா மற்றும் கெரோமியஸ் ரகுபரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் இடம்பெற்றது.

குறித்த சந்தேக நபர்கள் மூவருக்கும் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான் மூவரையும்தலா ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாவைத் தண்டப் பணமாக செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ங-108)

# பெண் கடத்தல் விவகாரத்தில் தேடப்பட்டவர் மன்றில் சரண்

கரணவாய், ஒக.22

வடமராட்சி கம்பர்மலையில் குடும்பப்பெண்ணொருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த 11 ஆவது சந்தேக நபர் நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி ஊடாக சரணடைந்தார்.

வடமராட்சி கம்பர் மலைப்பகுதியைச் சேர்ந்த குடும்பப்பெண் கடந்த 16 ஆம் திகதி நீதிமன்றில் இருந்து வந்துகொண்டிருந்த போது வாகனம் ஒன்றில் வந்த மர்ம நபர்களால் கடத்திச்செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் பெண்ணின் கணவன் உட்பட 10பேர் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 11 ஆவது சந்தேக நபரைப் பொலிஸார் வலை விரித்துத் தேடிவந்தனர். குறித்த நபர் நேற்று தனது சட்டத்தரணியூடாக பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் சரணடைந்தார்.

ஜெயமோகன் கஜேந்திரன் என்ற சரணடைந்த குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டார். (ங-108)

# அச்சுறுத்திப் பணம் பறித்தவருக்கு 1 வருட கடூழியச் சிறைத் தண்டனை

குடும்பப் பெண்ணைப் பயமுறுத்தி அவரிடம் இருந்து சுமார் 3 லட்சம் ரூபாவை பலவந்தமாகப் பெற்ற நபருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன் நட்ட ஈடாக ஒரு லட்சம் ரூபாவைச் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு தும்பளைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அந்தப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் தன்னுடன் தொடர்பு வைத்திருக்கின்றார் என்றும் அதனைக் கணவனிடம் சொல்லப் போவதாகவும் மிரட்டி 3 லட்சம் ரூபா பணத்தை கப்பமாகப் பெற்றுள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராசா முன்னிலையில் இடம்பெற்றது.

குறித்த சந்தேக நபர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான் நட்ட ஈடாக பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்துமாறும் செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வருட சிறை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ங-108)



மலையகத்தில் கடந்த சில நாள்களாக பிற்பகல் வேளைகளில் பெய்துவரும் மழை காரணமாக பிரதான வீதிகளும் சேதமடைந்துள்ளன. ஹற்றன் நகரில் இரண்டாவது பிரதான வீதியில் ஹற்றன் முஸ்லிம் பள்ளிக்கு முன்பாக உள்ள வீதியின் ஒரு பகுதி தாழ்ந்து இறங்கியுள்ளது. அதனால் அந்தப் பகுதியில் தொடர்ந் தும் அபாயகரமான சூழலே நிலவுகிறது. மலையகத்தில் நுவரெலியா, ஹற்றன், கினிகத்தேன முதலிய பகுதிகளில் குறிப்பாக ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் மற்றும் ஹற்றன் - நுவரெலியா வீதியில் அதிக பனிமூட்டம் காணப்படுகின்றமையால் குறித்த வீதியில் பயணம் செய்யும் வாகன சாரதிகளை மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்திவுள்ளனர். (ற)

# வடக்கு அமைச்சர்களைச் சந்தித்த மலேசிய தூதரக உயர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,ஒக் 22

மலேசிய தூதரக அதிகாரிகள் மற்றும் மலேசிய முன்னாள் அமைச்சர் சாமுவெல் ஆகியோர் அடங்கிய குழு நேற்று வடமாகாண அமைச்சர்களை வட மாகாண முதலமைச்சர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். வடக்கில் தாம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள வீட்டுத்திட்டம் தொடர்பிலேயே அவர்கள் பேச்சு நடத்தியுள்ளனர்.



இந்தச் சந்திப்பின் போது உயர்மட்டக் குழுவினர் மலேசியா மற்றும் பல்வேறு நாடுகளில் மேற்கொண்டு வருகின்ற வீட்டுத்திட்ட செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளனர். தங்கள் திட்ட நடைமுறைப்படுத்தலில் உள்ள குறிப்பாக தொடர் வீடுகளை அமைப்பது தொடர்பிலும் அதில் காணப்படுகின்ற செலவினங்களின் மட்டுப்பாடுகள் தொடர்பிலும் இந்த வீடமைப்பு செயற்றிட்டம் குறித்து மக்களின் விருப்பம் எவ்வாறு உள்ளது என்பது குறித்தும் கலந்துரையாடினர். அத்துடன் வடமாகாணத்திலே தற்போது 66 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இருப்பது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் அமைக்கப்படும் வீடுகள் சமையலறை மற்றும் இரண்டு அறைகளை கொண்டிருப்பதுடன் அதற்கான செலவு இலங்கைப் பெறுமதியில் 8 லட்சத்து 40 ஆயிரம் ஆக இருக்கும் எனவும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் விருப்பத்தை அறிந்து அதனடிப்படையிலே உருவாக்கப்பட்ட செயற்றிட்ட அறிக்கை ஒன்றைத் தங்களிடம் சமர்ப்பிக்குமாறு உயர்மட்ட குழுவினர் கேட்டுக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-[illegible])

# புதிய சட்ட திட்டங்களில் தெளிவின்மையாலே மரம் தறிப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டது

## தறிக்கப்பட்ட மரங்கள் வனத் திணைக்களத்தினால் பறிக்கப்பட்டமை தொடர்பில் பண்டியன்குளம் பிரதேச செயலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.22

2015ஆம் ஆண்டின் புதிய சட்ட திட்டங்கள் தனக்கு தெரியாது. தெரிந்திருந்தால் மரம் தறிப்பதற்கு அனுமதித்திருக்க மாட்டேன். இவ்வாறு தெரிவித்தார் பண்டியன் குளம் பிரதேச செயலாளர்.

முல்லைதீவு பாண்டியன் குளம் பகுதியில் அண்மையில் குறித்த பிரதேச செயலருடைய அனுமதியுடன் தறிக்கப்பட்ட மரங்கள் வனத் திணைக்கள அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒருவர் தனது காணியில் உள்ள மரங்களை முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது தறித்துள்ளார். இதனை அடுத்து அப்பகுதிக்குரிய கிராம சேவகர் மரம் தறிக்கப்படும் இடத்துக்கு சென்று பரிசீலித்த வேளை பிறிதொரு கிராம சேவகரின் ஒப்பத்துடன் பிரதேச செயலாளரின் அனுமதி பெறப்பட்ட பத்திரம் ஒன்று காணி உரிமையாளரிடம் இருந்தது. அத்தோடு பிரதேச செயலாளரின் அனுமதியின் பெயரிலேயே குறித்த மரங்களை தறிப்பதாக காணி உரிமையாளரால் கூறப்பட்டது.

இதனை அடுத்து குறித்த கிராம சேவகர் உடனேயே பிரதேச செயலாளரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது மரம் தறிப்பதற்கான அதிகாரங்கள் தனக்கு உள்ளன என்று தெரிவித்ததுடன் கிராம சேவகருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தார் என்றும் இதுதொடர்பாக தம்மால் முல்லைதீவு மாவட்ட அரச அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கிராம சேவகர் தெரிவித்தார்.

இவ்வாறு கிராம சேவகரை மீறி தறித்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகள் தொடர்பாக வனத் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டது. தறிக்கப்பட்ட மரக் குற்றிகள் அனைத்தும் கொண்டு செல்லும் வழியில் வனத் திணைக்களத்தினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டன.

இதன் போது பிரதேச செயலகரால் அனுமதிக்கப்பட்ட மரம் தறிப்பதற்கான பத்திரம் காணி உரிமையாளரால் வனத் திணைக்களத்தினரிடம் காட்டப்பட்டது. ஆனால் அது செல்லுபடி அற்றது எனவும் மரம் தறிப்பதானால் குறித்த பகுதியில் உள்ள கிராமசேவகர் மற்றும் வனத் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றே மரங்கள் தறிக்கப்படலாம் என்று வனத் திணைக்களத்தினரால் பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டதோடு மரங்கள் யாவும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாண்டியன் குளம் பிரதேச செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது:-

2015ம் ஆண்டு சட்டதிட்டங்கள் எனக்கு தெரியாது. முன்னைய சட்டத்துக்கு அமைவாகத்தான் நான் மரம் தறிப்பதற்கான அனுமதியைக் கொடுத்தேன். புதியசட்டம் தொடர்பாக எனக்கு யாரும் தெரியப்படுத்தவில்லை. இந்த விடயம் தொடர்பாக எனக்குத் தெரியப்படுத்தியவுடன் நான் மரங்களைத் தடுத்து வைக்குமாறு கூறினேன். அனுமதிப் பத்திரத்தையும் ரத்துச் செய்யுமாறு கூறியுள்ளேன். உயிர் அச்சுறுத்தல் தொடர்பாக நான் எதுவும் கதைக்கவில்லை. அலுவலகத்தில் கண்காணிப்புக் கமரா பூட்டப்பட்டுள்ளது . - என்று அவர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

சம்பவம் தொடர்பில் கிராமசேவகர் எனது கவனத்திற்கும் கொண்டுவந்தார். இது தொடர்பில் நாமும் ஆராய்ந்து வருகின்றோம். இருப்பினும் இது ஒரு பின் தங்கிய மாவட்டம். இங்கு பணி புரிய அதிகாரிகள் பின்னடிக்கும் சந்தர்ப்பத்தில் உள்ள அதிகாரிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். முறைப்பாடுகள் தெரிவிப்பதற்கும் ஒரு நடமுறை உண்டு. - என்றார். (ங-21,101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# குளம் புனரமைப்பு மோசடி விசாரணை முடியவில்லை

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
வன்னியில் ஆயிரத்து 141 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட மூன்று குளங்களின் புனரமைப்பு வேலைகளில் மோசடிகள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் விசாரணை இன்னமும் நிறைவுபெறவில்லை என்று வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

**வன்னி பிராந்தியத்தில், தண்ணிமுறிப்புக் குளம் – உடையார் கட்டுக்குளம் – வவுனிக் குளம் ஆகிய வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் கடந்த காலங்களில் புனரமைப்புச் செய்யப்பட்டன. அதன்போதே மோசடிகள் இடம்பெற்றன என்று கூறப்படுகின்றது.**

வன்னி பிராந்தியத்தில், தண்ணிமுறிப்புக்குளம் - உடையார் கட்டுக்குளம் - வவுனிக்குளம் ஆகிய வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் கடந்த காலங்களில் புனரமைப்புச் செய்யப்பட்டன. தண்ணிமுறிப்புக்குளம் 390, மில்லியன் ரூபாவிலும், உடையார்கட்டுகுள்ம் 151 மில்லியன் ரூபாவிலும், வவுனிக்குளம் 600 மில்லியன் ரூபாவிலும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

குறித்த குளத்தின் புனரமைப்பு வேலைகள் ஒழுங்காக இடம்பெறவில்லை என்றும், இந்தக் குளம் புனரமைக்கப்பட்ட பின்னர் அந்தக் குளத்தை நம்பியிருந்த விவசாயிகள் மேலும் பாதிப்புக்குள்ளாகியதாகவும் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், இது தொடர்பில் கடந்த ஆண்டு மாகாண சபையில் ஓர் பிரேரணையையும் கொண்டுவந்திருந்தார்.

மூன்று குளங்களின் புனரமைப்பின் போதும் மோசடிகள் இடம்பெற்றன என்று அந்தக் குளங்களின் கமக்கார அமைப்புக்கள் தன்னிடம் ஆதாரங்களுடன் சமர்ப்பித்துள்ளன என்று தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மாகாணசபையில் பிரேரணையை நிறைவேற்றியிருந்தார்.

இதற்கமைய பிரதம செயலாளரின் பணிப்புக்கு அமைய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. குறித்த விசாரணைக் குழுவுக்கு, வடக்கு மாகாணத்துக்கு வெளியில் இருந்து விசாரணை அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அதற்கு அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெறாத நிலையில், வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இரண்டு பொறியியலாளர்கள், ஓர் கணக்காளர் உள்ளிட்ட மூவர் கொண்ட குழு இதற்காக நியமிக்கப்பட்டது. அவர்களினால் கடந்த சில மாதங்களாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. விசாரணை அறிக்கை இன்னமும் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவித்த பிரதம செயலாளர், அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும் அது பேரவைச் செயலகத்தில் கையளிக்கப்படும் - என்றார்.

(ற-5,21)

# சாவகச்சேரியில் நால்வருக்கு டெங்கு தொற்று

சாவகச்சேரி, ஒக்.22
சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் ஒரு வாரத்துக்குள் நான்கு பேருக்கு டெங்கு பீடித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து நேற்று சுகாதாரப் பகுதியினர் விசேட டெங்கு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த இந்தப் பகுதியைச் சேர்ந்த மருத்துவ பீட மாணவன், வர்த்தகர், அரச பணியாளர், பெண்மணி ஆகியோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றனர்.

அதையடுத்து சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், சாவகச்சேரி நகர சபையினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து நேற்று அந்தப் பகுதியில் உள்ள 166 குடியிருப்புக்களில் டெங்கு பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.

மழை பெய்த பின்னர் உரிய பராமரிப்பு இல்லாததால் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய நிலையில் பல குடியிருப்புகள் மற்றும் காணிகள் காணப்பட்ட 7 குடியிருப்பாளர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளன என்று பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையின் 11ஆம் வட்டாரமான சங்கத்தானைப் பிரதேசம் குடியிருப்புகள் செறிந்த பகுதியென்பதால் சாவகச்சேரி நகரசபையின் அனுசரணையுடன் அந்தப் பகுதியில் புகையூட்டல் மேற்கொள்ளப்பட்டது.

(ற-9)

# யாழ். பிராந்திய மருத்துவர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்துள்ளார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.பிராந்தியக் கிளை தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்-தற்காலத் தேவைகளுக்கு ஏற்ப ஆளணி மதிப்பீட்டைச் செய்வதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

**அடுத்த வருடம் வடமாகாண சுகாதார சேவைகளின் உட்கட்டுமான மற்றும் உபகரண மேம்படுத்தலுக்காக விசேடமாகக் கணிசமான அளவு நிதி ஒதுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட கிளையின் பிரதிநிதிகளுக்கும் சுகாதார அமைச்சருக்குமான சந்திப்பு ஒன்று கொழும்பில் இடம்பெற்றது. அதில் சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்க யாழ்.பிராந்தியக் கிளையின் தலைவர் மருத்துவர் த.பாலமுரளி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில், பொதுச் சுகாதார சேவைகளில் நிலவும் சகல தரத்துக்குமான மருத்துவ அதிகாரிகளுக்கான ஆளணித் தட்டுப்பாடுகள், உட்கட்டமைப்பு மற்றும் உபகரணத் தேவைகள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் சில வருடங்களாக மருத்துவர்களின் நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களின்போது இடம்பெற்ற பாகுபாடுகள், முறைகேடுகள் தொடர்பாக அந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இவை தவிர, உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து அடுத்து வரும் மாதங்களில் ஒருதொகுதி மருத்துவர்கள் வெளியேறவுள்ளனர். அவர்களில் கணிசமானோரை யாழ்.மாவட்டத்தில் நியமிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் வடமாகாண சுகாதார சேவைகளின் உட்கட்டுமான மற்றும் உபகரண மேம்படுத்தலுக்காக விசேடமாகக் கணிசமான அளவு நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் - எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தின் தேவைகள் கருத்தில் கொள்ளப்படும் என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி பல வருடங்களாக வடக்கு - கிழக்கில் நடைமுறையில் உள்ள மருத்துவர்களுக்கான விசேட இடமாற்றத்தை மீள் பரிசீலனை செய்து தற்கால நிலமைகளுக்கு ஏற்றவாறு புதிய திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்தார் – என்றுள்ளது.

(ற-4)

# தரம் 11 மாணவருக்கான கருத்தமர்வை பிற்போடலாம்

யாழ்ப்பாணம், ஒக். 22
சரஸ்வதி பூசையின் இறுதிநாள் விஜயதசமி வழிபாடுகள் இன்று நடைபெறவுள்ளதால் இன்று நடைபெறவுள்ள தரம் 11 மாணவர்களுக்கான பரீட்சையைத் தத்தமது பாடசாலைகளில் இன்றையதினமே நடத்திவிட்டு விரும்பும் பட்சத்தில் கருத்தமர்வை வேறு நாளில் நடத்த முடியும் என்று வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலைகள் உள்ளிட்ட பல இடங்களிலும் விஜயதசமி பூசை வழிபாடுகள் இன்று நடைபெறவுள்ள நிலையில், மத்திய கல்வி அமைச்சால் இன்று பரீட்சையும் கருத்தமர்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனால் மாணவர்கள் குறித்த பரீட்சைக்குப் பின்னர் கருத்தமர்வில் பங்கு கொள்வதா? அல்லது விஜயதசமி பூசையில் பங்குகொள்வதா? என்ற சிக்கல் ஏற்பட்டுள்ளது. இன்று குறித்த பரீட்சையை வைப்பதானது கல்வி அமைச்சின் திட்டமிடாத செயல் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளது.

இந்த நிலைமை தொடர்பில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

குறித்த பரீட்சை மத்திய அமைச்சால் வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் இன்று நடத்தப்படுகிறது. அதனால் குறித்த பரீட்சையை நடத்தாது விடமுடியாது. ஆனால் பரீட்சையை எத்தனை மணிக்கு நடத்துவது என்பதை குறித்த பாடசாலைகள் தீர்மானிக்கலாம். அந்தந்தப் பாடசாலைகளில் குறித்த பரீட்சை நடைபெறும். ஏதாவது ஒரு நேரத்தில் குறித்த பரீட்சையைக் கட்டாயம் நடத்த வேண்டும். தேவையேற்படின் அது பற்றிய கருத்தமர்வை பிறிதொரு நாளில் நடத்தமுடியும் - என்றார்.

(ற-4)

# பிரதமர் ரணிலின் அறிவிப்புக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 22
அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிவிப்பை வரவேற்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் மேற்கொள்ளப்படும் பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் அனைத்தும் தொழிற்சங்கங்களின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் திணைக்களத் தலைவர்கள் தாம் விரும்பியபடியே இடமாற்றங்கள் பதவியுயர்வுகளை முன்னெடுத்தனர். அதனால் அரச உத்தியோகத்தர்கள் பலர் பாதிக்கப்பட்டனர். அது பற்றி யாரிடம் முறையிட்டுத் தீர்வு பெறுவது என்றும் ஏங்கியிருந்தனர். தமது பிரச்சினைகள் தொடர்பில் தொழிற்சங்கங்களின் ஊடாகத் தெரியப்படுத்தினாலும், அவை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. பதவியுயர்வு, இடமாற்றங்கள் அனைத் [illegible] அரசியல் செல்வாக்கு இல்லாதவர்கள் பாதிக்கப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் பிரதமரின் இந்த அறிவிப்பு அரச உத்தியோகத்தர்களுக்கு நிவாரணம் கிடைப்பதாக அமையும். இதனை சங்கம் பாராட்டுகிறது. புதிய அரசின் நல்லாட்சியில் அரச திணைக்களங்கள் சீராக ஒழுங்கமைக்கப்பட்டு, அரச உத்தியோகத்தர்கள் பழிவாங்கப்படுவது நிறுத்தப்பட்டு சீராக சேவை இடம்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றுள்ளது.

(ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிரந்தர வைத்தியரை உடன் நியமியுங்கள்

## நட்டாங்கண்டலில் நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்

முள்ளியவளை, ஒக்.22
முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு கோரி அந்தப் பிரதேச மக்கள் வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
குறித்த பிரதேசத்தில் நிரந்தர வைத்தியர் இல்லாததால் 2 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வைத்தியத் தேவைகளுக்காக வவுனியா மற்றும் மல்லாவி வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.
இதுகுறித்து மாகாண சுகாதார அமைச்சுக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
இதுதொடர்பில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் தெரிவித்தாவது:-
மீள்குடியேற்றத்தின் பின்னர் குறித்த பிரதேசத்தில் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் முயற்சியால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த தமிழ் மொழியை சரளமாக பேசும் வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் மாகாண சபை ஆட்சிக்கு வந்ததும் குறித்த வைத்தியர் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டார்.
அதன் பின்னர் இந்த வைத்திய சாலைக்கு இதுவரையிலும் நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.
அதன் பின்னர் மல்லாவி வைத்தியசாலையிலிருந்து வைத்தியர் ஒருவர் அம்புலன்ஸ் வண்டியில் வந்து நோயாளர்களை பார்வையிட்டு உடனே சென்று விடுவார். எனினும் போக்குவரத்து உள்ளிட்ட பிரச்சினையால் அந்த வைத்தியரும் தற்போது வருவதை நிறுத்திவிட்டார்.
இதுகுறித்து மாகாண சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தோம். இந்த வைத்தியசாலைக்கு மாகாண சுகாதார அமைச்சர் இரண்டு, மூன்று தடவைகள் நேரில் சென்று நிலைமைகளை பார்வையிட்டார். இங்கு காணப்படும் வெற்றிடத்துக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிப்பதாகவும் வாக்குறுதியளித்தார்.
எனினும் இன்றுவரை இந்த பிரதேச வைத்தியசாலையின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவில்லை. வைத்தியசாலையின் நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் நடைபெறாமையால் இங்குள்ள மக்கள் உளரீதியாக பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். - என்றனர். (ற-433)

## 20 அடி பள்ளத்தில் விழுந்த யானையும், குட்டியும் மீட்பு



அம்பாறை, ஒக்.22
அம்பாறை, திருக்கோவில் வன ஜீவராசி திணைக்களப் பிரிவுக் குட்பட்ட தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் கிராமத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தாய் யானையும் அதன் குட்டியும் சுமார் 20 அடி குழியில் விழுந்துள்ளன. யானைகள் இரண்டும் பிளிறும் சத்தம் கேட்டு விரைந்து வந்த கிராமவாசிகள் திருக்கோவில் வன ஜீவராசிகள் திணைக் கள அதிகாரிகளுக்கு தெரியப் படுத்தியதையடுத்து வன ஜீவராசிகள் திணைக்களஅதிகாரிகள் இவ்விடத்துக்குச் சென்று யானைகளை குழியில் இருந்து மீட்கும் பணியில் ஈடு பட்டனர்.
தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடிச்சாறு பகுதியில் இவ்வாறு சுமார் 20 க்கும் மேற்பட்ட பாரிய குழிகள் வெட்டப் பட்டுள்ளன என்று அதன் காரணமாக கடந்த காலங்களில் யானைகள் பல விழுந்து இவ்வாறு மீட்டுள்ளன என்றும் தெரி வித்த கிராம வாசிகள் இவ்வாறான குழிகளால் மிருகங்களுக்கு மட்டு மல்ல இனிவரும் காலம் மழைக் காலமாக இருப்பதனால் மனிதர்க ளுக்கும் உயிராபத்தினை ஏற் படுத்தக் கூடும். எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(ற)

## குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் கைது

திருகோணமலை, ஒக்.22
பெருங்குற்றங்களில் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தின்பேரில் திருகோணமலை பொலிஸ் தலைமைக் காரியாலய மற்றும் உப்புவெளி பொலிஸ் பிரிவின் பெருங்குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள் கொள்ளையிடுவதற்கு உபயோகித்த மோட்டார் சைக்கிள் உட்பட 3 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான பல பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
குறித்த சந்தேகநபர்கள் லிங்க நகர் மற்றும் சீனக்குடா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் சந்தேகநபர்கள் அளித்த வாக்குமூலத்தில் மேலும் இராணுவ அதிகாரி ஒருவரும் இக்குற்றச் செயல்களில் தொடர்பு டையவர் எனவும் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்



கொள்ளப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
குறித்த சந்தேகநபர்கள் உப்புவெளி பொலிஸ் பிரிவின் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜனக ஜெயரத்ன அடங்கிய குழுவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## விவசாயிகளுக்கு உர விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்,22
முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு உர விநியோகம், துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் இன்று மற்றும் நாளை இடம்பெறவுள்ளது என்று கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவசுப்பிரமணியம் பிரபாகரன் தெரிவித்தார்.
வவுனிக்குளத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் யோகபுரம் மேற்கு கமக்காரர் அமைப்பின் விவசாயிகளுக்கு 22ஆம் திகதியும் அம்பலப்பெருமாள் கமக்காரர் அமைப்பின் கீழான விவசாயிகளுக்கு 23ஆம் திகதியும் உர விநியோகம் செய்யப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

## எடுத்துக்காட்டாக திகழும் கிழக்கு மாகாண சபை

### முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவிப்பு

அம்பாறை, ஒக்.22
இலங்கையில் உள்ள அனைத்து சபைகளுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக கிழக்கு மாகாண சபை திகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்காக ஒத்துழைப்பு வழங்கி கொண்டிருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். - இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கிழக்கு மாகாண சபையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஒன்றிணைந்து ஆட்சியமைத்திருக்கும் இந்த வேளையில், எதிர்க்கட்சியில் மீதமாக இருக்கும் உறுப்பினர்களும் ஆளும்தரப்பின் பக்கம் வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.
கிழக்கு மாகாண ஆட்சியில் நடுநிலை தவறாது மூவின மக்களையும் ஒரே பார்வையில் ஒரே நோக்கில் விகிதாசார முறையில் ஒவ்வொரு நடவடிக்கையும்



நகர்வுகளும் சரியாக இடம்பெற வேண்டும் என்பதில் உறுதியாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கிறேன்.
கிழக்கில் சேவைகள், வேலை வாய்ப்புக்கள் என்றாலும் விகிதாசாரம் பேணப்படுகிறது. நல்லாட்சியில் அனைவரும் பயன்பெற வேண்டும். சுயநலமாக எந்தத் தீர்மானமும் எடுக்காது, கலந்தாலோசனை மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் அனைத்து உறுப்பினர்களும் இந்நல்லாட்சியை விரும்புகின்றனர். ஆகவே, அனைத்து உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் செயற்பட்டால்தான் இன் [illegible] [illegible] களுக்காக செய்து கொடுக்க முடியும். - என்றார். (ற)

## தாக்குதலில் பெண்கள் காயம்

சாவகச்சேரி, ஒக்.22
தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இரண்டு பெண்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
நாவற்குளி தச்சன்தோப்பைச் சேர்ந்த சற்குணநாதன் சிபானி (வயது-23), எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பரமேஸ்வரி (வயது-68) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ற-9)

## கண்ட பெரிய வெளி பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை



மட்டக்களப்பு, ஒக்.22
2009 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் முற்றாக அழிந்த நெடியமடு கண்ட பெரிய வெளிப் பாலம் மற்றும் வயல்வெளிப் பிரதான பாதை என்பன ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாது அழிவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன.
பாலம் உடைந்துள்ளதால் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வேளாண்மை செய்யும் விவசாயிகள் வயல்வெளிகளுக்குச் செல்ல முடியாமலும் அறுவடைசெய்த நெல்லை ஏற்றிவர முடியாமலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
குறித்த பாலம் உடைந்துள்ள தால் சுமார் பல மைல்தூரம் சுற்றியே வரவேண்டியுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். மாவட்டத்தின் பிரதான வருமானத்தை ஈட்டித் தரும் இந்த மக்களின் பிரதான போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்குலகவாதிகள் கால்களில் விழுந்து நாட்டைக் காப்பாற்ற தேவையில்லை

**சீறுகின்றார் தினேஸ் குணவர்த்தன எம்.பி.**

கொழும்பு, ஒக்.22

நாட்டைக் காப்பாற்றுவதற்காக இலங்கை மேற்குலகவாதிகளின் கால்களில் விழவேண்டிய அவசியம் இல்லை என்று கூறியுள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன.

ஆனாலும் புதிய அரசு தன்னைக் காப்பாற்றிக்கொள்ள சர்வதேச நாடுகளின் கால்களில் விழுந்துள்ளது என்றும் அவர் குற்றம் சுமத்தினார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மகிந்த ஆதரவு அணி கடந்த திங்கட்கிழமை விகாரமகாதேவி பூங்கா திறந்த வெளி அரங்கில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைக்கு அமைய இலங்கையில் நடைபெறவிருப்பது உள்ளக விசாரணை அல்ல. மாறாக சர்வதேச விசாரணையேயாகும். ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையில் கலப்பு நீதிமன்ற முறையில் விசாரணைகளை நடத்துவதென்பது இறுதியில் முழுமையான சர்வதேச விசாரணையாகவே அமையும்.


இந்தச் செயற்பாடுகளின் மூலமாக அமெரிக்க, பிரித்தானிய நாடுகள் இலங்கையில் உள்ள வளங்களையும், பொருளாதார வளங்களையும் சூறையாடும் முயற்சியும் உள்ளது.

இந்த நாட்டில் ஏதேனும் விசாரணைகளை முன்னெடுப்பதாயின் அதை இலங்கையின் அமைப்புக்கள் மூலமாகவும் இலங்கையின் அதிகாரத்தற்கு உட்பட்ட வகையிலுமே மேற்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு நாட்டில் வாழும் அனைவருக்கும் உள்ளது. இதில் மத, மொழி, இன பேதம் இருத்தலாகாது. ஆனால் இந்நாட்டை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக மேற்குலகவாதிகளின் கால்களில் விழ வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இந்த அரசு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சர்வதேச நாடுகளின் கால்களில் விழுகின்றது. – என்றார். (ற)

# இலங்கையை மேற்குலகத்தின் அடிமையாக்குவதற்கு முயற்சி

## சாடுகின்றார் திஸ்ஸ விதாரண



கொழும்பு, ஒக்.22

இலங்கையையும், இந்த நாட்டு மக்களையும் மேற்குலகத்தின் அடிமைகளாக மாற்றுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு முனைகின்றது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவில் இலங்கை மீது முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மகிந்த ஆதரவு அணியினர் கடந்த திங்கட்கிழமை விகாரமகாதேவி பூங்கா திறந்தவெளி அரங்கில் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமைந்துள்ள தேசிய அரசு நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தரும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தெரிவித்துள்ளனர். இரண்டு வருடங்களில் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக இவர்கள் தெரிவித்தனர். ஆனால் இன்றுவரை நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையிலோ அல்லது நாட்டின் சுயாதீன செயற்பாடுகளை பலப்படுத்தும் வகையிலோ செயற்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வாக்குறுதிகளுக்கு மாறாக மேற்கத்தேய நாடுகளின் கொள்கையை பரப்பும் வகையிலும், மேற்கு வாதிகளின் அடிமைகளாக இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் மாற்றியமைக்கும் செயற்பாடுகளையுமே இந்த அரசு மேற்கொள்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானம் வெளிவந்துள்ளது. அதில் ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையிலான விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என்று அவர்கள் எமக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். இதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையில் குற்றங்கள் நடந்துள்ளன என சந்தேகம் இருக்குமாயின் அதை உள்ளக விசாரணைகள் மூலம் தீர்க்க வேண்டும்.

இலங்கையில் புகழ்வாய்ந்த நிபுணத்துவம் மிக்க சிறந்த நீதிபதிகள் உள்ளனர். சிறந்த சட்டத்தரணிகள் உள்ளனர். ஆய்வாளர்கள் உள்ளனர். இவர்கள் இன்று சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்று விளங்குகின்றனர்.

பலநாடுகள்தமதுசட்டரீதியானசெயற்பாடுகளில் இலங்கையின் சட்ட வல்லுநர்களின் உதவிகளை நாடுகின்றன. அவ்வாறான நிலையில் போர்க்குற்றச் சாட்டுகளில் இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை இலங்கையின் நீதிமன்றங்களின் மூலமாக கண்டறிய வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இலங்கையின் பிரச்சினைகளை சர்வதேசம் கையாள இடமளிக்கக் கூடாது. சர்வதேசத்தின் தலையீடு உள்ளதெனின் உடனடியாக அதைத் தடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் அதை அரசு செய்யாது. மேற்குலக சர்வாதிகாரிகளின் தலையீட்டில் இலங்கையில் தீர்வு காணவே இவர்கள் முயற்சிக்கின்றனர்.– என்றார். (ற)

# தற்போதுள்ள கலப்பு அரசு நீண்ட தூரம் பயணிக்காது

## மகிந்தானந்த அளுக்கமகே எம்.பி. கூறுகின்றார்.

கொழும்பு, ஒக்.22

தற்போதுள்ள கலப்பு அரசால் நீண்டதூரம் பயணிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுக்கமகே தெரிவித்துள்ளார்.

இராணுவப் பிரதானிகள் விசாரணைக்கு அழைக்கப்படுவார்கள் என்பது தமக்குத் தெரியாது என்று ஜனாதிபதி கூறுகின்றார். நிதி அமைச்சர் கடன் பற்றிப் பேசுகின்றார். 2005 ஆம் ஆண்டு நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அரச கடன் 105 வீதமாகும். நாம் இந்த அரசிடம் ஆட்சியை ஒப்படைக்கும்போது அது 85 வீதமாகும். – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இந்த அரசு கடன் பெற்றுக் கொள்வதற்காக நாடாளுமன்ற அனுமதியைக் கோருகின்றது. இலங்கை வரலாற்றில் முதன்முறையாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களுக்குச் சேவையாற்ற முடியாது பார்த்துக் கொண்டிருக்கின்றனர். முன்னெடுத்த அபிவிருத்தியை நிறுத்தக் கூடாது.

சிறுதோட்ட உரிமையாளர்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.– என்றார். (ற)



## வேலையில்லாப் பிரச்சினையை தீர்ப்பதற்கு முதலீடுகள் அவசியம்

**அமைச்சர் சஜித் சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஒக்.22

வேலையில்லாப் பிரச்சினை நாட்டில் பெருமளவு காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ள அமைச்சர் சஜித் பிரேமதாஸ 2000 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டின் முதலீடுகள் வெறும் 2 வீதத்தால் மட்டுமே உயர்ந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:– நாம் 7 வீதம் மற்றும் 8 வீத பொருளாதார வளர்ச்சி குறித்தே பேசி வருகின்றோம். பொருளாதார வளர்ச் சியை ஏற்படுத்த முதலீடுகள் மிக அவசியம்.

அரச வருமானத்தில் பெரும் பகுதி கடன்களை மீளச் செலுத்தவே பயன்படுகின்றது. தேசப்பற்றுள்ள கடந்த அரசு வரி ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிடவில்லை. அதை வெளியிட்டிருந்தால் அரச வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். கடந்த ஆட்சிக் காலத்தில் மொத்த வருமானத்தில் 50 வீதத்துக்கும் மேற்பட்ட தொகையை 20 வீத செல்வந்தர்கள் அனுபவித்தனர். உற்பத்திசார் கைத்தொழில்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார். (ற)

# ஈழப் போராட்டத்தைச் சிதைத்து சிங்கள தேசத்தை உருவாக்குவோம்

## சிங்கள மக்கள் அணிதிரள வேண்டும் என்கிறார் விமல்

கொழும்பு, ஒக்.22

வன்னியில் அன்று ஆரம்பிக்கப்பட்ட ஈழத்துக்கான போராட்டம் ஜெனிவாவில் பலப்படுத்தப்பட்டு அமெரிக்காவின் ஆதரவுடன் மீண்டும் இன்று நாட்டில் மீள் உருவாக்கம் பெற்றுள்ளது. அதற்கான முழுமையான ஆதரவை இந்த அரசு வழங்கி வருகின்றது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

அன்று சிங்கக்கொடிகளை ஏந்தி இந்த நாட்டை எவ்வாறு பாதுகாத்தோமோ அதேபோல் மீண்டும் சிங்கக்கொடிகளை ஏந்தி சிங்கள பௌத்தநாட்டைக்காப்பாற்றஅனைத்துச் சிங்களவர்களும் முன்வர வேண்டும். இந்த நாட்டைக் சிங்கள நாடாகவே கட்டியெழுப்பவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற போரில் புலிகளால் கொல்லப்பட்ட தமிழ் மக்கள், விரட்டியடிக்கப்பட முஸ்லிம் மக்கள், படுகொலை செய்யப்பட்ட சிங்கள மக்களின் இறப்புக்களுக்கு காரணம் கேட்காத சர்வதேச சமூகம் புலிகளின் இறப்புக்கு மாத்திரம் காரணம் கேட்கின்றது.

அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் புலி ஆதரவாளர்களுக்காகவே இன்று போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க முயல்கின்றன. அதே போல் நாட்டைக்காப்பாற்றிய இராணுவத்தை சிறைகளில் அடைத்து புலிகளை விடுதலை செய்யும் தீர்மானத்துக்கு இந்த அரசு முன்வந்துள்ளது. கைது செய்யப்பட்ட புலிகளை தண்டிக்காத வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் நீக்க அரசு முயற்சிக்கின்றது. அதேபோல் போர்க் குற்றச்சாட்டுகள் என்ற பெயரில் இவர்கள் முயற்சிப்பது வெறுமனே விசாரணைகளை மேற்கொள்ளவல்ல. அதையும் தாண்டி நாட்டில் பிரிவினையை உருவாக்கவே இவர்கள் முயற்சிக்கின்றனர்.

வடக்குக்குத் தேவையான அனைத்தையும் பெற்றுக்கொடுத்து வடக்குக் கிழக்கை ஒன்றிணைந்த மாகாணமாக மாற்றி அவர்களுக்கான பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதன் மூலமும், வடமாகாண சபையின் கீழான அதிகாரங்களை பலப்படுத்தி, விடுதலை செய்யப்போகும் புலிகளை வடக்கின் பொலிஸாக மாற்றி இறுதியில் புலிகளின் பாதுகாப்பின் கீழான தனி ஈழத்தையே அமைக்க முயற்சிக்கின்றனர்.

இப்போதும் சிங்கள பௌத்த மக்கள் அமைதியாக இருந்தால் இந்த நாட்டைக் கட்டிக்காப்பாற்ற முடியாது. சிங்கள பௌத்த நாட்டைக் காப்பாற்ற அனைத்துச் சிங்களவர்களும் முன்வரவேண்டும்.

இந்த நாட்டைச் சிங்கள நாடாகவே பாதுகாத்து எமது இராணுவத்தினரையும் எமது மக்களையும் பாதுகாக்க வேண்டும். சிங்கள நாட்டை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும்.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மதி நுட்பத்துடன் செயற்படுவீர்கள். முயற்சிகளுக்கான நற்பலன் கிடைக்கும். தொழில் வியாபாரம் செழித்து அந்தஸ்தில் உயர்வு காண்பீர்கள். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** உங்களின் பேச்சு செயலில் தயக்கம் ஏற்படலாம். பணிகளில் தற்காப்புடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** உங்களின் நல்ல கருத்துக்களை, சிலர் கேலி செய்யலாம். அவர்களிடம் இருந்து ஒதுங்கவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு கிடைக்கும். வீடு, வாகன வகையில், பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**கடகம்:** நற்குணம் உள்ள புதியவர்களின் நட்புக் கிடைக்கும்., பணிகளைக் குறித்த நேரத்தில் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். மேலதிக பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**சிங்கம்:** நண்பர்களுக்கு உதவி புரிந்து, அவர்களது அன்பைப் பெறுவீர்கள். தொழில் வியாபார நடைமுறை செழிக்க, தேவையான மாற்றங்கள் செய்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் பாராட்டு பெறுவர்

**கன்னி:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில் வியாபாரம் செழிக்க வாய்ப்புக் கிடைக்கும். பணத் தட்டுப்பாடு வரலாம். செலவு அதிகமாகும். சீரான ஓய்வு உடல்நலத்தைப் பாதுகாக்கும்.

**துலாம்:** சொந்தப் பிரச்சினை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். கூடுதல் உழைப்பால் தொழில் வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பணவரவுக்கேற்ப செலவும் கையைக் கடிக்கும். அதிக விலையுள்ள பொருள் இரவல் கொடுக்க, வாங்கவேண்டாம்.

**விருச்சிகம்:** நண்பரிடம் முன்னர் கேட்ட உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரித்து, மேலதிக வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பும் பொருள்களை வாங்கித் தருவீர்கள்.

**தனுசு:** இன்றைய சில சூழ்நிலைகளால், சிறு வருத்தம் இருக்கலாம். தொழில் வியாபாரத்தில் குளறுபடி ஏற்படலாம்; நேரடிக் கண்காணிப்புத் தேவை. சேமிப்புப் பணம் முக்கிய செலவுக்குப் பயன்படும். பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**மகரம்:** மனதில் இரக்கக் குணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு கூடுதலாகும். இஷ்ட தெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள். உடல் நலம் ஆரோக்கிய பலம் பெறும்.

**கும்பம்:** வெளி வட்டாரத் தொடர்பு தொந்தரவு தரலாம். தொழில் வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும். பொருள்கள் வாங்கும் போது தரம் அறிந்து வாங்கவும்.

**மீனம்:** உங்கள் செயல்களுக்கு குடும்ப உறுப்பினர்கள் ஊக்கம் தருவர். தொழில், வியாபார வளர்ச்சியில், முன்னேற்றகரமான பலன் உண்டு. மேலதிக பணவரவினால், விரும்பிய பொருள்கள் வாங்குவீர்கள். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

# சங்கத்தில் இணையும் ரஜனி கமல்



கடந்த வாரம் இடம்பெற்ற தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தலில் விஷால் அணி பெரு வெற்றி பெற்றுள்ளது. நடிகர் சங்கத்தின் புதிய தலைவராக நாசரும், பொதுச்செயலாளராக விஷாலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். விஷால் அணியைச் சேர்ந்த கார்த்தி பொருளாளராகவும், பொன் வண்ணன், கருணாஸ் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் வெற்றி பெற்றுள்ளனர். செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கு விஷால் அணியை சேர்ந்த ராஜேஷ், ஜூனியர் பாலையா, குட்டி பத்மினி, கோவை சரளா, பிரசன்னா, நந்தா, ரமணா, ஸ்ரீமன், பசுபதி, உதயா, பூச்சிமுருகன், சங்கீதா, சோனியா உட்பட 20 பேர் தேர்வாகியுள்ளார்கள்.

விரைவில் நடிகர் சங்கத்தின் பொதுக்குழு கூட உள்ள நிலையில், நடிகர் சங்கத்தில் ரஜினிகாந்த், கமல் ஹாசன் ஆகியோருக்கு முக்கிய பதவிகள் வழங்க புதிய நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர். ரஜினிகாந்தை நடிகர் சங்கத்தின் கௌரவ தலைவராகவும், கமல்ஹாசனை கௌரவ ஆலோசகராகவும் நியமிக்கலாமா? அல்லது இருவரையும் கௌரவ ஆலோசகர்களாக நியமிக்கலாமா? என்று நிர்வாகிகள் ஆலோசனை நடத்தி வருகிறார்களாம். விரைவில் கூடவுள்ள நடிகர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.



குளிக்க வேண்டாம் என்டு இருந்தவன இப்படி பூசி மொழுகிட்டீங்களே !




## ஐயோ ! அண்ணனுக்கு என்னா அறிவு !




தொழில்நுட்ப உலகை உருவாக்குவதை விட்டுவிட்டு பசுமை உலகை உருவாக்க முயற்சி செய்யுங்கள்... அங்கே விவசாயிதான் தொழில்நுட்பவாதி





ஆண்கள் எப்பவுமே கூந்தல் நீளமான பெண்ணைத்தான் தேடுறாங்க. ஆனால் கிடைப்பது என்னவோ வாய் நீளமான பெண் தான்...!

பொறியியல் பல்கலைக்கழகம்






## பேஸ் புக்கில் பிடித்தவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L இன் பின்னர்.....
## உயர் கல்விக்கான சிறந்த தெரிவு ESOFT



பாடசாலைக் கல்வி உயர்தரத்துடன் நிறைவடையும் போது மாணவர்கள் அடுத்த பரிமாணத்திற்கு தங்களை தயார்படுத்துகின்றனர். இதில் உயர் தரம் எழுதும் அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக்கழகத்திற்கான வாய்ப்புகிடைக்கும் என்பதை விட பட்டப்படிப்பிற்கான வாய்ப்பு என்பது சாத்தியமானதாகும். அந்தவகையில் அனைத்து மாணவர்களுக்கும் பட்டப்படிப்பு என்ற தமது அடுத்த பரிமாணத்திற்குள் நுழையும் போது IT, ஆங்கில அறிவு என்பது தவிர்க்க முடியாத விடையமாகும். ஏனெனில் பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கை நெறிகளில் இது கண்டிப்பாக வேண்டப்படுவதுடன் நவீன தொழில் சந்தையில் எதிர்பார்க்கப்படும் தகைமையாகவும் இருக்கின்றது. இதன் காரணமாக மாணவர்கள் உயர் தரத்தின் பின்னர் தமது சிறந்த எதிர் காலத்திற்கு IT, English கற்கைகளை தெரிவு செய்ய வேண்டியவர்களாக உள்ளனர் ஆகையால் பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் இந்தக் காலக் கட்டத்தை உயர் கல்விக்கு தயார்படுத்தவும் தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்தவும் பயன்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாதவிடயமாகும்.

இந்த சூழ்நிலையில் மாணவர்களுக்கு A/L இன் பின்னர் இக் கற்கைநெறிகளை வழங்க பெற்றோர்கள் முயற்சிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்வது முக்கியமாகும். அந்தவகையில் சிறப்பானகல்விக்காக சிறந்த நிறுவனத்தை முதலில் தெரிவு செய்யவேண்டியது கட்டாயமாகும். இவ்வாறு தெரிவுசெய்யப்படும் நிறுவனமானது பின்வரும் விடையங்களை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

1. நிறுவனத்திற்கு சமூகத்தில் மற்றும் அத்துறையில் இருக்கும் வரவேற்பு
2. நிறுவனத்தினால் வழங்கப்படும் தகைமைகளின் செல்லுபடியாகும் தன்மை
3. நிறுவனத்தின் நிதி நிலைமை (தொடர்ந்து நடாத்தக் கூடிய)
4. விரிவுரையாளர் குழுவின் தகைமை மற்றும் அனுபவம்

இதனைத் தொடர்ந்து பொருத்தமான பாட நெறியை தெரிவு செய்வது அடுத்த முக்கியமான பகுதியாகும் இதன் போது கருத்தில் கொள்ளப்பட வேண்டியவை

1. பாடநெறியின் உள்ளடக்கம் அதற்கான வரவேற்பு
2. தனக்குரிய எதிர்கால தொழில் இலக்கு
3. பாடநெறிக்காக செலவிடும் கட்டணத்தை முதலீடு செய்வதற்கான வசதி
4. இலகு தவணைக் கட்டண முறை

அந்த வகையில் ESOFT இலங்கையில் IT,ENGLISH கற்கைகளுக்காக நாடளாவிய ரீதியில் 45கிளைகளுக்கூடாக அறியப்பட்ட முதல் தர கல்வி நிறுவனமாக இருப்பதுடன் அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளமைக்கு காரணம் கடந்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட கல்விச் சாதனைகளைக் குறிப்பிடலாம். மேலும் இலங்கையில் வேறு எங்கும் இலகுவில் பெற்றுக்கொள்ள முடியாத 186 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்பதிற்கு மேற்பட்ட EDEXCEL-UK டிப்ளோமாக்களை அவரவர் சொந்த இடங்களிலே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இது வழங்குகின்றது. இதற்கும் மேலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கீகாரத்துவமும் கிடைக்கின்றது. இது அனைத்தும் நான்கே (4 மாதங்கள்) மாதங்களில் கிடைப்பதுதான் அடுத்த முக்கிய விடயமாகும்.

இதன் மூலம் மாணவர்கள் அடுத்த நகர்விற்கு தயாராக காலத்தை சேமிக்கவும் பெறுமதியான தகைமையை பெறவும் முடியும்.

இதனடிப்படையில் ESOFT உயர்ந்த நன்மதிப்பை இப்பாரிய கல்வி வலையமைப்பூடாக நாடளாவிய ரீதியில் கொண்டுள்ளது. இங்கு சிறந்த தகைமையும், நல் அனுபவமும் உள்ள விரிவுரையாளர்கள் மூலம் மாணவர்களுக்கு சிறந்த கல்வி வழங்கப்படுவதால் ESOFT இன் IT டிப்ளோமா மற்றும் ஏனைய டிப்ளோமாக்கள் நாட்டில் நன்கு அறியப்பட்டதொன்றாகும் கடந்த வருடத்தில் இவ்டிப்ளோமா மூலம் சிறுவயதினர் பட்டப்படிப்பு வரை சென்றுள்ளமை அனைவரையும் வியக்கவைத்துள்ளது. இதனால் வருடாந்தம் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இதனைத் தெரிவு செய்வது குறிபிடத்தக்கதாகும். மேலும் ENGLISH பாடநெறிகளுக்கும் EDEXCEL UK Diploma சான்றிதழுடன் 100% இயலுமையை மாணவர்களுக்கு வழங்கப்படுவதால் அனைவராலும் விரும்பப்படுகின்றது.

இவ்வாறான சிறப்புக்களை கொண்ட ESOFT இன் கற்கைநெறிகளை 45 கிளைகளுக் கூடாக நாட்டின் எல்லாப் பாகங்களிலும் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுதான் முக்கிய சிறப்பம்சமாகும். ஏனெனில் அவரவர் சொந்த இடங்களில் இருந்து சர்வதேச டிப்ளோமாக்களை பெறுவது என்பது தற்போது சாத்தியமாகியுள்ளது.

தொடர்புகளுக்கு:-

**ESOFT METRO CAMPUS, JAFFNA**
137, K.K.S ROAD, JAFFNA.
0773099308/ 0212224142

# விஜயதசமியை முன்னிட்டு

## 21st 22nd 23rd ஆகிய திகதிகளில் பதிவுசெய்து 25% கட்டண கழிவுடன் பரிசில்களையும் வெல்லுங்கள்

**ONLY 21st 22nd 23rd**

மாணவர்களே! உங்களுக்கு விசேடமான PEARSON (UK) அனுமதி பெற்ற டிப்ளோமா பாடநெறிகள் இப்போது ESOFT வழங்குகிறது

DITEC INTERNATIONAL — **Diploma in Information Technology** — assured by PEARSON

DIE — **Diploma in English**

வலுவான இரட்டைச் சான்றிதழ் ESOFT + Pearson (UK)

# HND

**Computing & Systems Development**

**Business Management**

Awarded By PEARSON edexcel
advancing learning, changing lives



**FREE** Samsung GALAXY Tab4

நான்கே மாதங்களில் எதிர்கால தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்தும் ஏனைய டிப்ளோமாக் கற்கைநெறிகள் ESOFT + Pearson (UK)

- DIWE assured by PEARSON — Diploma in Web Engineering
- DISE assured by PEARSON — Diploma in Software Engineering
- DIBE assured by PEARSON — Diploma in Business Management
- DIBM assured by PEARSON — Diploma in Business English
- DICA assured by PEARSON — Diploma in Computerized Accounting
- DIHN assured by PEARSON — Diploma in Hardware & Networking

**WIN a Gift!**



ESOFT + Pearson (UK)

New Batches 23.10.2015 | 26.10.2015

ESOFT
Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142

Gajanan 077 309 9 308

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்

# கரிகணனின்

# விஜயதசமி

## நல் வாழ்த்துக்கள்

*Happy Vijayadasami*




Head Office:
**#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.**
0094-21-2222717 /18, 0094-21-7397530
(H) 0094-21-2222737 0094-21-2222891

Branch:
#126, AANANTHAPURAM,
A9 ROAD, KILINOCHCHI.
0094-21-2280000
printharikanan@gmail.com

www.harikanan.com
print@harikanan.com
harikanan.print
Harikanan Printers

---

# விஜயதசமி தின வாழ்த்துக்கள்



பாரம்பரிய அச்சுத்துறையின் வழிகாட்டி

# பாரதி பதிப்பகம்

**30** வருட கால அச்சுத்துறை அனுபவம்

அதிகூடிய அளவிலான அச்சுப்பதிப்பு
நேரச்சு இயந்திரம் (Offset)
**4** வர்ணப் பதிப்பு

மிகக் குறைந்த செலவில்
**கல்வெட்டுப் புத்தகங்கள்**
குறுகிய காலத்தில் துல்லியமாக அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள

- போஸ்டர்கள் (19½ x 28¾)
- துண்டுப் பிரசுரங்கள்
- பருவகால வெளியீடுகள்
- கலண்டர்கள்
- மாணவர் கையேடுகள்
- திருமண அழைப்பிதழ்கள்

போன்ற அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளலாம்.

**ஸ்கிறீன்** பிறிண்டிங் வேலைகளுக்கும்

**இல.430, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

**Tel : 021 222 3081 E-mail: bhaarathiiprint@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUZUKI காட்சியறை திறப்பு விழா

விஜயதசமியாகிய இன்று (22.10.2015) வியாழக்கிழமை எமது காட்சியறை 12.15 pm மணியளவில் கோலாகலமாக யாழ். மண்ணில் திறந்துவைக்கப்பட உள்ளது.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.







அங்கீகரிக்கப்பட்ட ஏக முகவர்:

**SUZUKI PLAZA**

243, STANlEY ROAD, JAFFNA.

T.P 0777111555/021 222 4323 suzukiplazajaffna@gmail.com

British BUSINESS COLLEGE

Where Students Come First



BBC பாடசாலைகளின் முத்தமிழ் விழாவிற்கு அன்புடன் அழைக்கின்றோம்

இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்

நேரம் : காலை 8.00 மணி

பங்குபற்றும் பாடசாலைகள்

24ம் திகதி சனிக்கிழமை நல்லூர், மானிப்பாய் I, மானிப்பாய் II, நீர்வேலி

3ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், சுன்னாகம் I, சுன்னாகம் II, சங்கானை, சாவகச்சேரி, கோப்பாய், புத்தூர், நெல்லியடி.

**விஜயதசமி அன்று வித்தியாரம்பம்**

8.30 முதல் 11.30 வரை அனைத்து வளாகங்களிலும் ஏடு தொடக்கி வைக்கப்படும்

BBC 13 வது வருடத்தில்

| பாலர் பாடசாலை பிரிவுகள் | | | | கற்பித்தல் மொழி |
|---|---|---|---|---|
| பிரிவு | Play Group | Montessori | Pre School | ஆங்கில மொழி மூலம் |
| வயது | 2+ முதல் 3+ வரை | 3+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை | தமிழ் கட்டாய பாடம் |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் | |

**சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்**

2+ முதல் 5+ குழந்தைகளின் அறிவுத்திறனை ஊக்குவிக்குமுகமாக எல்லாக் குழந்தைகளும் பின்வரும் கல்வி, விளையாட்டு சார் நிகழ்ச்சிகளில் பங்குபெறுவர்.

* Sports Meet
* English Day Concert
* முத்தமிழ் விழா
* Art & Craft Exhibition
* Carols
* Pre School Graduation

**பாட விதானமும் கற்பித்தல் முறையும்**

NEW SYLLABUS

* Dr. Maria Montessori Method
* Canadian ECE Method
* German LKG, KG, UKG System

எமது கற்பித்தல் முறையும் பாட விதானமும் மேற் கூறப்பட்ட சர்வதேச முறைமைகளைச் சார்ந்து எமது சூழலிற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாலர் பாடசாலையின் சாதனைகளும் மைல் கற்களும்**

*கடந்த 13 ஆண்டுகளாக எமது 12 வளாகங்களில் 8000 மாணவர்களுக்கு மேல் பயனடைந்துள்ளார்கள்.

*யாழ் குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட 1வது ஆங்கில மொழிமூல பாலர் பாடசாலை

*யுத்த காலத்திலும் யாழ் சிறார்களுக்காக இயங்கிய ஒரேயொரு தனியார் பாடசாலை

*எமது பாடசாலைகளில் கல்வி பயின்ற 90% மாணவர்கள் Year 5 Scholarship பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

**பாலர் கல்வியை மேலும் மேம்படுத்தும் எமது விசேட செயற்பாடுகள்**

*Percussion Band , Meditation, Speech, Dance & Drama (in English & Tamil)

* குழந்தை- பெற்றோர்- ஆசிரியர் களிற்கிடையில் சிறந்த உறவையும் குழந்தையின் அறிவையும் வளர்ப்பதற்கு ஊக்குவிக்கும் மாதாந்தச் செயற்பாடுகள்.

**BBC யின் 12 பாலர் பாடசாலை வளாகங்கள்**

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் |
|---|---|---|
| 64, கோயில் வீதி யாழ்ப்பாணம் | 625, K.K.S வீதி யாழ்ப்பாணம் | பருத்தித்துறை வீதி கோப்பாய் மத்தி |

| மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சுன்னாகம் 1 | சுன்னாகம் 2 | நீர்வேலி |
|---|---|---|---|---|
| 252, யாழ் வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சபாரத்தினம் வீதி, சுன்னாகம். | இல. 142, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் (NSB வங்கி முன்பாக) | 1வது மைல்கல் , இராச வீதி, நீர்வேலி. |

| வடமராட்சி | சாவகச்சேரி | சங்கானை | புத்தூர் |
|---|---|---|---|
| பருத்தித்துறை வீதி, மாலி சாந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பிரதேச செயலகம் அருகாமை நிகர வைரவர் கோவிலடி | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

British BUSINESS COLLEGE Where Students Come First

**BRITISH BUSINESS COLLEGE** 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

Tel: 077 362 7055, 021 222 4060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தைகளை ஆரம்பிக்க உகந்த நாள் விஜயதசமி

நவராத்திரியை அடுத்து வரும் பத்தாவது நாள் "விஜயதசமி"யாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை இந்தியாவில் "தசரா" எனக் கொண்டாடுவர். "இந்து" ஆலயங்களில் நடைபெற்று வரும் ஒரு முக்கியமான பூசை "மானம்பூ" (மகா நோன்பு) என அழைக்கப்படும். அது மகிடாசுர சங்காரமாகும். கன்னி விக்கிரமன் என்னும் மகிடா சுரனைச் சங்கரித்தமையால் அம்பிகைக்கு மகிடா சுரமர்த்தினி என்னும் ஒரு திருநாமம் உண்டு. இந்தச் சங்காரத்தை நோக்காகக் கொண்டு ஆலயங்களில் வன்னிமரம் அல்லது வாழைமரத்தை நட்டு மகிடாசுரனைத் தேவி சங்காரம் செய்வதாகப் பாவனை செய்து அந்த மரத்தை வெட்டி விழாக் கொண்டாடுவர். மகிடா சுரன் என்பவன் கொழுத்த எருமைக் கடா போல எருமைத் தலையுடன் காட்சி கொடுப்பான். மகிடாசுர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பீடித்த ஆணவ மலத்தை அழித்தல் எனப் பொருள் படும். நவ ராத்திரியில் ஒன்பது தினங்களும் மெய்யன் போடு தேவியை வழிபட்டுப் பெற்ற சக்தியால் ஆணவ மலத்தை ஒழித்து விட முடியும். இந்த நிலையில் ஞானம் கைவரப் பெற்ற நிலை ஏற்படும். பாண்டவர்கள் அஞ்ஞாதவாச காலத்தில் தமது ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தனர். அஞ்ஞாதவாசம் முடிந்ததும் தமது ஆயுதங்களை எடுத்து வன்னி மரத்தை வாளால் வெட்டி விட்டனர். இந்தத் தினம் விஜயதசமியாகும். வித்தைகளை ஆரம்பிப்பதற்கும் உகந்ததினம் இந்த விஜயதசமியே யாகும். சுகேதன் என்னும் அரசன் தனது பகைவர்களால் நாடு, நகரை இழந்து காட்டில் வாழ்ந்தான். கவலையுடன் இருந்த சுகேதன் ஆங்கிரச முனிவரைச் சந்தித்துத் தனது துயரத்தைக் கூறினான். முனிவர் நவராத்திரி விரதத்தின் பெருமையை எடுத்துரைத்து அந்த விரதத்தை அனுஷ்டிக்கு மாறு கூறினார்.



சுகேதன் நவராத்திரி விர தத்தை முறையாக அனுஷ்டித்து அம்பிகை அருளால் இழந்த அரசுரிமையை மீண்டும் பெற்று நல்வாழ்வு பெற்றான். சீதாபிராட்டியை இழந்த இராம பிரான், கிட்கிந்தையில் கவலையுடன் இருந்தார். அங்கு வந்த நாரத மகரிசி இராம பிரானிடம் நவராத்திரி மகிமை பற்றிக் கூறினார். இராமபிரான் நாரதரின் உதவியுடன் நவ ராத்திரி விரதம் நோற்றார். இதனால் அம்பிகையின் அருள்பெற்று இரா வணனை வெற்றிகொண்டு சீதையைச் சிறை மீட்டார். இன்றைய வெற்றிக்குரிய தினத்தில் மழலைச் செல்வங்களுக்கு "அ" என்ற எழுத்தை சொல்லிக் கொடுக்கின்றனர். "ஏடு தொடக்கல்" நிகழ்வாகவும் இது அமைந்து விடுகிறது. இத்தகு புனிதமான விஜயதசமியை இந்துக்கள் சிறப்பாகக் கொண்டாடி தமது சைவத் தமிழ் கலாசார விழுமியங்களைப் பேணி வருகின்றார்கள்.

**மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்**
பணிப்பாளர், சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்


Advanced Diploma in English 2 1/2 Months

ஆங்கில அறிவினை மிகத்துல்லியமாக கற்றுக் கொள்வதற்கான பயிற்சிநெறி. பல்கலைக்கழக மாணவர்கள், உயர் தொழில் புரிவோர், MBA, PHD பயில இருப்பவர்கள் அவசியம் கற்க வேண்டிய கற்கைநெறி.

எமது கல்லூரியினால் நடத்தப்படும் சர்வதேசக் கற்கைநெறிகள்

IELTS Life Skills
Settlement Visa மூலமாக UK செல்வபவர்களுக்கானது

பரீட்சைக்குரிய Online பதிவுகளை எம்மிடம் மேற்கொள்ள முடியும்

2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்டது.

IELTS (Academic/General)
Student, Migration Visa மூலமாக UK செல்வபவர்களுக்கானது

Approved centre for Registering Online (ORS) Candidates.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும்
English in Action

உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரேவழி அதை மேம்படுத்துவதே எமது நோக்கு

Spoken English with Grammar 1 1/2 Months

100% பயிற்சி

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவோர்களுக்காவே இந்நெறி நடத்தப்படுகின்றது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவரும் ஆங்கிலத்தில் உரையாட, சரளமாகப் பேசுவதற்கு இது வழிவகுக்கும்.

100% வெற்றி

Diploma in English 2 1/2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்திற்கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்படுகின்றது.

- வகுப்புகள் யாவும் புதிய தொழில்நுட்பத்திறமையாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடத்தப்படும்.
- எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- Excellent Teachers' Panel & Individual Attention
- கிழமை, வார இறுதி நாள்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாகவரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
- ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்.

Batches starts on every Monday, Friday and Saturday

British College of Higher Studies
BCHS
No.15 2/1, Chirambiyady Lane,
(Near Ariyakulam Junction & Above Sathosa SM)
Jaffna. Tel: 021 222 4550

Hotline(S)
0777 222 422
0776555677, 0770365728



நல்லதோர் ஆரம்பம் ...... விஜயதசமி நன்னாளில்



New Gateway Jaffna உடன் இணைந்து
உங்கள் வாழ்வை வளமாக்கிக் கொள்ளுங்கள்



- Ms Office
- IELTS
- Computer Hardware
- AutoCAD
- General English
- Web Development
- General Sinhala
- Multimedia

NGT GATEWAY
No. 39, College Road, Neeraviady, Jaffna.

55, Point Pedro Road, Nelliady
Telephone : 021 492 7457

39, College Road, Neeraviyadi, Jaffna.
Telephone : 021 493 6666 / 0716 362 362


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் புதிய தொழில் நுட்பத்தோடு நொக்கியா மார்ப்



நொக்கியா நிறுவனம் மீண்டும் நொக்கியா மார்ப் என்ற புதிய தொழில்நுட்பத்தோடு மக்கள் மத்தியில் அசத்த வருகிறது. மார்ப் தொழில் நுட்பம், எதிர்காலக் கருவிகள் நீட்டிப்பு, தானாக சுத்தம் செய்வது மற்றும் ஒளி ஊடுருகை (Transparent) போன்ற அம்சங்களைக் கொண்டிருக்கும்.

நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் எதிர்கால தொலைத் தொடர்பு சாதனம் தான் நொக்கியா மார்ப்.

நானோ தொழில் நுட்பமானது பல வித சென்சார்களைக் (Sensor) கொண்டு கருவியில் பல புதிய சிறப்பம்சங்களை வழங்குவதோடு முழுமையாக நானோஸ்கேல் எலக்ட்ரானிக்ஸ்சைப் பயன்படுத்துகின்றது (Nanoscale Electronics), இது மனித கண்களுக்கு தெரியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. நானோஸ்கேல் அமைப்பானது இந்தக் கருவியை நீட்சி செய்ய வைக்கின்றது.

எலாஸ்டோமெட்ரிக் மூலக்கூறுகளை உருவாக்கி வரும் நொக்கியா, இதைப் பயன்படுத்தி பல்வேறு திசைகளில் கருவியை நீட்சி செய்ய வைக்க முடியும் என்கின்றது.

இந்தத் தொடுபேசியை வளைத்துக் கையில் அணிந்து கொள்ளவும் முடியும். இந்தக் கருவியின் பட்டன்கள் அனைத்தும் உண்மையான 3டி வடிவில் உள்ளன.



## கவர்ச்சிகரமான வடிவமைப்புடன் புதிய தொடுபேசி

உலகத்தரம் வாய்ந்த தொடுபேசிகளை வடிவமைத்து அறிமுகம் செய்து வரும் நிறுவனங்களுள் ஒன்றான ஒப்போ (Oppo) நிறுவனம், புத்தம் புதிய தொடுபேசி ஒன்றை அறிமுகம் செய்யவுள்ளது. Oppo R7S எனும் இந்தத் தொடுபேசியானது 5.5 அங்குல அளவுடையதும், 1920 ஒ 1080 பிக்ஸல் உடையதுமான தொடுதிரையைக் கொண்டுள்ளதுடன், Octa Core Qualcomm Snapdragon 810 Processor, பிரதான நினைவகமாக 4np, ரம் மற்றும் 32np, சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது. மேலும் அன்ராயிட் 5.1.1. Lollipopc c f இயங்கு தளத்தில் செயல்படக்கூடியதாக இருப்பதுடன், 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 8 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது. எனினும் இதன் விலை தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

## உளவாளிகளிடமிருந்து காப்பாற்றும் பேஸ்புக்

இன்று பட்டி தொட்டியெங்கும் பேஸ்புக் பயன்படுத்தாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். நண்பர்களை இணைக்கும் வலையமைப்பாகவும், பொழுதுபோக்கு அம்சங்களை உள்ளடக்கிய வலையமைப்பாகவும் உள்ள இந்தத் தளத்தில் இணைந்திருப்பவர்களை இலகுவாக உளவறிய முடியும்.

இந்தப் பிரச்சினையிலிருந்து தனது பயனர்களை விடுபடச் செய்வதற்கு பேஸ்புக் நிறுவனம் புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளது. அதன்படி ஒரு நாட்டின் அரசு உட்பட எவராவது குறித்த நபரின் பேஸ்புக் பக்கத்தை உளவு பார்க்கும்போது, அது தொடர்பாக குறித்த நபருக்கு தெரியப்படுத்துவதுடன், பேஸ்புக் கணக்கைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு செய்தி ஒன்றையும் அனுப்புகின்றது.

இந்தப் புதிய வசதி, பேஸ்புக் தொடர்பில் பயனர்களுக்கு மென்மேலும் நம்பிக்கையை வளர்ப்பதாக இருப்பதுடன், இதனால் தொடர்ச்சியாக தனது பயனர்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும் எனவும் பேஸ்புக் நிறுவனம் எதிர்பார்த்துள்ளது.






## போக்குவரத்து விதிமுறைகளை குறித்து விளக்கும் செயற்றிட்டம்

திருகோணமலை, ஒக்.22

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு மஞ்சள் கடவையால் செல்லும் முறைமை மற்றும் போக்குவரத்து தொடர் பான விடயங்கள் குறித்து விளக்கமளிக்கும் செயற்பாட்டு நிகழ்வு நேற்று புதன்பகிழமை காலை மகாதிவுள்வெவ சிங்கள மகா வித்தியலயத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

மொறவெவ பொலிஸ் பொறுப் பதிகாரி தம்மிக விஜயசிங்கவின் வேண்டுகோளின் படி போக்கு வரத்து பொலிஸார் பிரதி புதன்கிழமை தோறும் இச்செயல்முறை பயிற்சியை வழங்கவுள்ளனர்.

அத்துடன் சிறுவர்களின் உரிமைகள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான செயலமர்வுகளை கிராமங்கள் தோறும் நடத்தி வருகின்றனர். (ற)

## குறுகிய காலத்துக்குள் ஒன்றரை லட்சம் காணி உறுதிப் பத்திரங்கள்

### *வழங்கப்பட்டுள்ளன என்று காணி அமைச்சர் தெரிவிப்பு*

திருகோணமலை, ஒக்.22

காணி அமைச்சினூடாக நாட்டில் குறுகிய காலத்தில் ஒன்றரை இலட்சம் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னமும் வழங்க இருக்கின்றோம் என காணி அமைச்சர் எம்.கே.ஏ.டி. எஸ்.குணவர்த்தன தெரிவித்தார்.

கந்தளாய் அக்ரபோதி தேசிய பாடசாலையில் கேட்போர் கூடத்தில் நில அளவை உதவியாளர் பதவிக்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நல்லாட்சி மலர்ந்துள்ளது. அமைச்சர்கள் சுயாதீனமாக தங்களது சேவைகளை வழங்குவதற்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று அரச தொழில்கள் பெறுவோர் சிறந்த நம்பிக்கையான சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டும். இலஞ்ச ஊழல்களை மேற்கொண்டால் உடனடியாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்படுவர். - என்றார். (ற)

## வெடிப்பொருள் வைத்திருந்தவர் பிணையில் செல்ல அனுமதி

திருகோணமலை, ஒக்.22

மிருகங்களை வேட்டையாடுவதற்காக வெடிப்பொருள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் திருகோணமலை, நாமல்வத்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைதுசெய்யப்பட்ட 48 வயதுடைய ஒருவரை பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளார்.

அவரை எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம் திகதி திருகோணமலை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு பணிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சந்தேக நபரின் வீட்டை சோதனையிட்டபோது, அங்கு வெடிபொருள்களை இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.(ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தரத்தில் தொங்கியபடி நடனமாடிய கலைஞர்கள்


பீஜிங், ஒக்.22

சீனாவில் அந்தரத்தில் தொங்கியபடி நடத்தப்பட்ட நடன நிகழ்ச்சி பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளது. ஷாங்காய் மாகாணத்திலேயே இந்த நடன நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

இந்த நடனம் ஆரம்பிக்கப்பட்டவுடன், கட்டடத்தின் நடுப்பகுதியில் கயிற்றைக் கட்டிக்கொண்டு அந்தரத்தில் தொங்கியவர்களைப் பார்த்த மக்கள் முதலில் பதற்றம் அடைந்து அவர்களைக் காப்பாற்ற எண்ணினர். பின்னர் அவர்கள் உடல்களை நளினமாக அசைத்ததை அடுத்து அவர்கள் சாகசக் கலைஞர்கள் என்று மக்கள் கருதினர். சிறிது நேரத்தில் அந்தரத்தில் இருந்த நான்கு பேரும், இசைக்கு ஏற்ற விதத்தில் நடனம் ஆடினர்.



கீழே இருந்து இதைப் பார்த்து ஆச்சரியம் அடைந்த மக்கள் கைதட்டி குறித்த கலைஞர்களுக்கு உற்சாகம் அளித்தனர். நடனத்தில் ஈடுபட்ட குறித்த நான்கு பேரும் அமெரிக்காவைச் சேர்ந்த நடனக்கலைஞர்கள் என்றும், நடனத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த ஒவ்வொரு ஊராகச் சென்று இவ்வாறு நடனம் ஆடுபவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)



# தீயைக் கட்டுப்படுத்த முடியாது திணறுகின்றது இந்தோனேசியா

லண்டன், ஒக்.22

இந்தோனேசியாவின் சுமாத்ரா மற்றும் ஹலிமின்டன் பகுதிகளில் கடந்த மாதம் முதல் பரவி வரும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த அந்த நாட்டு அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ள போதிலும், அவை பயனளிக்கவில்லை. காட்டுத் தீயை அடுத்துப் பரவியுள்ள கடும் புகை மண்டலத்தால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தக் காட்டுத் தீயால் இந்தோனேசியா மட்டுமல்லாது அயல் நாடுகளான சிங்கப்பூர், மலேசியா என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கும் பெரும் புகைமூட்டம் காணப்படுகின்றது.


இதனால் பெரும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ள இந்தோனேசிய அரசு, தீயைக் கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரியிருந்தது. சில நாடுகள் உதவிகளை வழங்கியுள்ளபோதும் தீயைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் புகைமூட்டம் சில மாதங்களுக்குத் தொடரும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் இந்தோனேசியாவின் பலங்கராய மாகாண மக்கள் கடும் சுவாசப் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற)

# ஆளில்லாத தீவில் அகதிகள் தத்தளிப்பு

## ஐ.நா. அகதிகள் அமைப்பு தெரிவிப்பு

சொல்வநியாவுக்கு அருகே, ஆளில்லாத தீவில் ஆயிரக்கணக்கான அகதிகள் தத்தளிக்கின்றனர் என்று ஐக்கிய நாடுகளின் அகதிகளைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.



சிரியா, ஆப்கனிஸ்தான் , ஆபிரிக்க நாடுகளில் இருந்து போர் காரணமாக, நாட்டை விட்டு வெளியேறி பாதுகாப்புக்காக அகதிகள் ஜேர்மனி, ஐரோப்பிய நாடுகளை வந்தடைந்த வண்ணம் உள்ளனர்.

சில தினங்களுக்கு முன்பு குரோட்டிய மற்றும் செர்பிய நாடுகளுக்கிடையில் உள்ள ஆள்கள் எவரும் இல்லாத தீவில் 2 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட அகதிகள், கடுங்குளிரில் தவித்துள்ளனர். இதனை அறிந்த சொல்வேனிய பொலிசார் அவர்களை மீட்டனர்.

அதிகரித்துவரும் அகதிகளின் வரவால் ஐரோப்பிய ஒன்றியத்திடம் மேலதிக பொலிசாரை உதவிக்கு அனுப்புமாறு சொல்வேனிய அதிகாரிகள் கேட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து இது வரை 19000 அகதிகள் வருகை தந்துள்ளனர் என்று சொல்வேனிய உள்துறை அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (ற-ரி4)



காஸா எல்லைப்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்
இஸ்ரேலியப் படையினர் மீது பலஸ்தீனியர்கள் கற்களை
தாக்குதலை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்ப
பின்னர்உயிரிழந்துள்ளான். தாக்குதலின் போது காயமடை
தொடர்பான விசாரணைகளை அதிகாரிகள் மேற்கொண்

# வடமேற்கு சிரிய ரஷ்யா வான் தாக்


## 45 பேர் உயிரிழப்பு

அலப்போ, ஒக்.22

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வட-மேற்கு சிரியாவில் நடத்தப்பட்ட ரஷ்ய வான் வழித் தாக்குதலில் சுமார் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

லடாக்கியா மாகாணத்தின் ஜபால் அல்-அக்ராட் பிராந்தியத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் வேளையில், ரஷ்ய போர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தின என்று சிரிய மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அறிவித்தது.

குறித்த தாக்குதலில் மேற்குலக ஆதர வுடைய சிரிய இராணுவத் தளபதி மற்றும் கிளர்ச்சியாளர்களின் குடும்பத்தினர் எனப் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்



பிலிப்பைன்ஸின் வடக்குப் பகுதியைத் தாக்கிய கோப்பு சூறாவளி
எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது. சூறாவளியை அடுத்து மக்
வெள்ளம் புகுந்துள்ளது. அதனால் அவர்களின் இயல்பு வாழ்க்கை
கள், மின்கம்பங்கள் என்பவை முறிந்து விழுந்துள்ளமையால் போக்
என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது வெள்ளம் புகுந்துள்ள
முயற்சிகளை மக்கள் ஆரம்பித்துள்ளனர். சிறுமி ஒருத்தி வீட்டுக்குள் பு
யேற்றுகின்றாள்.

# கட்டண அதிகரிப்பை எதிர்த்து பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

ஜொகன்னர்ஸ்பேர்க், ஒக்.22

தென்னாபிரிக்காவின் கேப்டவுன் பல்கலைக்கழக மாணவர்கள் தமது வகுப்புகளுக்கான கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவில் ஏழை மாணவர்களுக்கு அரசால் இலவசக் கல்விக்கான உதவிகள் வழங்கப்படமாட்டாது என்றும், அனைத்துப் பல்கலைக்கழகங்களும் தமது சொந்தச் செலவிலே நடத்தப்பட வேண்டும் என்றும் அண்மையில் அந்த நாட்டு அரசு தெரிவித்திருந்தது.



இந்த அறிவிப்பின் பின்னர், அங்குள்ள பல்கலைக்கழகங்கள், மாணவர்களின் வகுப்புகளுக்கான கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாகவும், அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து இதனை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அறிவித்திருந்தன. அதையடுத்தே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்தப் பிரதேசத்தில் வாகனங்கள் பயணிக்க முடியாமல் மாணவர்கள் டயர்களையும் எரித்தனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல மாணவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...த்தின் போது இஸ்ரேலிய துருப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ...ளையும் மதுபானப் போத்தல்களையும் கொண்டு எறிந்து தாக்கியதன் காரணமாகவே படையினர் குறித்த ...கப்படுகின்றது. தாக்குதலின் போது தாக்கப்பட்ட இளைஞன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ...யமடைந்த மேலும் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இது ...ாண்டு வருகின்றனர் என்று அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# தனது பெற்றோரின் வீட்டை பேய் வீடாக்கிய அமெரிக்கர்



நியூயோர்க், ஒக்.22

தனது பெற்றோரின் வீட்டை ஹாலோவீன் பண்டிகைக்காக பேய் வீடு போல ஒருவர் மாற்றியுள்ளமை அமெரிக்காவில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் தனித்துவமான கோதிக் கேக் தயாரிப்பால் பிரபலமடைந்த கிறிஸ்டின் மெக்கானெல் என்பவரே இந்த வித்தியாசமான செயலைச் செய்துள்ளார்.

சுமார் இருநூற்று ஐம்பது அமெரிக்க டொலர் செலவில் பற்கள் மற்றும் கண்களை வீட்டின் வெளிப்புறத்தில் ஒட்டி, வெறியோடு இருப்பது போலத் தோற்றமளிக்கும் இந்த வீட்டை அமைத்துள்ளார். இந்த வீட்டைப் பேய் வீடாக மாற்ற அவர் மூன்று நாள்களாகக் கடுமையாக உழைத்துள்ளார்.

அவரது பெற்றோர் உட்பட அனைவரும் கிறிஸ்டினின் இந்தத் திறமையான படைப்பைக் கண்டு பாராட்டி வருகின்றனர். அந்தப் பகுதியில் வீதியில் செல்பவர்கள் அனைவரும் நின்று அந்த வீட்டைப் பார்வையிடுவதுடன் புகைப்படங்களையும் எடுத்துச் செல்கின்றனர். (ற)



# கொரிய போரில் பிரிந்தோர் கண்ணீர் மல்கச் சந்தித்தனர்

சியோல், ஒக்.22

1953ஆம் ஆண்டு கொரிய போரின் போது பிரிந்த குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியுள்ளனர்.

1950ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை நடந்த போரின் விளைவாக கொரிய தீபகற்பம் வடகொரியா, தென்கொரியா என இரு நாடுகளாகப் பிரிந்தது. வடகொரியாவில் கம்யூனிச ஆட்சியும் தென்கொரியாவில் ஜனநாயக ஆட்சியும் நடைபெறுகிறது. அவர்களில் பெரும்பாலானவர்கள் 70 வயதைத் தாண்டியவர்கள். தென்கொரியாவைச் சேர்ந்தவர் லீ சூன்-கியூ (85). ராணுவப் பயிற்சிக்குச் சென்ற இவரது கணவர் இன்சி காணாமல் போனார். அவர் வடகொரியாவில் வாழ்வது அண்மையில் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து 60 ஆண்டுகளுக்குப் பிறகு தனது கணவரை லீ சூன்-கியூ நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

அவர்களைப் போல போரினால் பிரிந்த குடும்பத்தினர் ஒருவரை ஒருவர் கண்ணீர் மல்க ஆரத்தழுவி அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தினர்.

1988ஆம் ஆண்டு முதல் இது போன்ற சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அண்மைக் காலமாக இரு நாடுகளுக்கும் இடையே கடும் பகைமை வளர்ந்த நிலையில் இந்தச் சந்திப்பு நட்புறவைப் பேணுவதாக அமைந்துள்ளது. (ற)


# ...யாவில் ...தாக்குதல்

...கப்படுகின்றது.

கிளர்ச்சியாளர்களின் பிடியிலுள்ள பகுதியில் சிரிய விமானப் படை, வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அதே வேளை, கடந்த மாதம் 30ஆம் திகதி முதல் சிரியாவில் பயங்கரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா வான்வழித்தாக்குதலைத் தொடங்கியது. (ற)



ஏமன் தலைநகர் சனாவிலுள்ள பாலினி மசூதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிறப்புத் தொழுகையின்போது மேற்கொள்ளப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்துள்ளனர். அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தொழுகையின்போதே இந்த மனிதக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. குறித்த தாக்குதலுக்கு எந்தவொரு தீவிரவாத அமைப்பும் இதுவரையில் பொறுப்பேற்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)



...ாவளியால் உயிரிழந்தவர்களின் ...து மக்களின் குடியிருப்புகளுக்குள் ...க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மரங் ...போக்குவரத்தும் சீரற்று உள்ளது ...ள தமது வீடுகளைச் சீராக் கும் ...தள் புகுந்துள்ள சேற்றுநீரை வெளி... (ற)

# இருநூறு பேருக்கு எச்.ஐ.வி. பரப்பிய போலி வைத்தியர்

லண்டன், ஒக்.22

கம்போடியாவில் அங்கீகரிக்கப்படாத மருத்துவர் ஒருவர் எச்.ஐ.வி தொற்றுடன் இருந்த ஊசிகளை தொடர்ந்து பயன்படுத்தியதால் நூற்றுக்கணக்கானோருக்கு அந்த நோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறித்த மருத்துவர் மீது கொலை வழக்கு உள்ளிட்ட 3 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்போடியா நாட்டில் எம் செரின் என்பவர் மருத்துவராகப் பணியாற்றி வந்தார். அவர் பயன்படுத்திய கிருமிகள் படிந்த ஊசிகளால் நூற்றுக்கணக்கானோருக்கு எச்.ஐ.வி. நோய் ஏற்பட்டுள்ளமை சோதனையில் உறுதியாகி உள்ளது.

இதனை அடுத்து அவர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர் மருத்துவராக அங்கீகரிக்கப்படாத நபர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

கம்போடியாவில், ரோகா என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு முதன் முதலாக எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டமை கடந்த நவம்பர் மாதம் கண்டறியப்பட்டது. இதனை அடுத்து அதே பகுதியில் 800 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 106 பேருக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது தெரிய வந்தது.

அதையடுத்து நடத்தப்பட்ட விசாரணைகளில் எம் செரின் ஊசி உள்ளிட்ட உபகரணங்களை நோயாளிகளுக்கு மீண்டும் மீண்டும் உபயோகித்துள்ளமை தெரியவந்துள்ளது. விசாரணையில் தான் நோயைப் பரப்பும் நோக்கத்தோடு ஊசியை மறுசுழற்சி செய்யவில்லை என்றும் போலி மருத்துவராக செயல்பட்டமை உண்மை தான் என்றும் எம் செரின் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனால், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 200 பேருக்கு எச்.ஐ.வி. நோய்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனை ஒப்புக்கொண்டுள்ள இவர் மீது ஏற்கனவே கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகமாக இருப்பதாக விசாரணையில் தெரிய வந்தாலும், உள்ளூர் செய்தித் தாள்கள் பாதிப்பு எண்ணிக்கையை 300 ஆகக் குறிப்பிடுகின்றன. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்ந்துபோய்க் கிடக்கும்

## சாவகச்சேரி தும்புத் தொழிற்சாலை

நெசவு மற்றும் தையல் கைத்தொழில் ஆகியவற்றில் பெண்கள் ஆர்வம் காட்டாத தாலும், தும்புத் தொழிலில் போதிய பயிற்சி பெற்ற மேற்பார்வையாளர்கள் கடமையாற்றியதாலும் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரை தும்புத் தொழில் சிறப்பாக நடைபெற்றது.



கடந்த 20 வருடங்களாக படையினரால் பயன்படுத்தப்பட்டு தற்போது தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் பொறுப் பேற்கப்பட்டுள்ள சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள தும்புத் தொழிற்சாலையின் எதிர்காலம் பற்றி பிரதேச மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். வடமாகாண சபையினர் இதனைப் பொறுப்பேற்று இந்த இடத்தில் பெரியதொரு தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு மெனவும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சராக இருந்த காலத்தில் அவ் வேளை யில் சாவகச்சேரி, கிளிநொச்சித் தொகுதிக்கான நாடாளு மன்ற உறுப்பினராக இருந்த வே.குமாரசாமி அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் சாவகச்சேரி, கச்சாய் வீதியில் நான்கு பேரிடம் கொள்வனவு செய்த ஏழு ஏக்கர் பரப்பளவு கொண்ட காணியில் கிராமிய சிறு கைத்தொழிலை மேம் படுத்தவென 100 அடி நீளமும் 40 அடி அகலமும் கொண்ட நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு நெசவு, தும்பு, தையல் ஆகிய பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. நெசவு மற்றும் தையல் கைத்தொழில் ஆகியவற்றில் பெண்கள் ஆர்வம் காட்டாததாலும், தும்புத் தொழிலில் போதிய பயிற்சி பெற்ற மேற்பார்வையாளர்கள் கடமையாற்றியதாலும் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1983 ஆம் ஆண்டுவரை தும்புத் தொழில் சிறப்பாக நடைபெற்றது.

கொழும்பு கட்டுநாயக்கா பகுதியில் இருந்த தும்புத் தொழிற் சாலையில் கடமையாற்றி அனுபவமிக்க பிரான்சிஸ் என்பவர் பயிற்சியாளராகப் பொறுப்பேற்ற பின்னர், கட்டுநாயக்கா தும்பு ஆலையிலிருந்து வாகனங்களில் கொண்டு வரப்படும் தும்புக்கட்டுகளைக் கையளித்துவிட்டு உற்பத்தி செய்யப்பட்ட கயிறு வகைகளை எடுத்துச் சென்றனர். அவ்வேளையில் 20க்கு மேற்பட்ட இளம்பெண்கள் பயிற்றப்பட்டு தினமும் பெருமளவு பலதரப்பட்ட கயிறு வகைகள் உற்பத்தி செய்யப் பட்டு விநியோகிக்கப்பட்டன. அவருக்குப் பின்னர் பயிற்று விப்பாளராக பொறுப்பேற்ற இம்மானுவேல் ஆசிரியர் தென்னிலங்கையிலிருந்து தும்பு தருவிப்பதைக் குறைத்து உள்ளூரில் தும்பு உற்பத்திக்கான பயிற்சிகளை பல குடும்பங் களுக்கு வழங்கினார். இதன் பயனாக கடற்கரையை அண் டிய பகுதிகளில் வசித்த மக்கள் குடிசைக் கைத்தொழிலாக தும்பு உற்பத்தியில் ஈடுபட்டு தொழிற்சாலைக்கு வழங்கி வந்தனர். சாவகச்சேரி தொடக்கம் கச்சாய் வரையிலான பகுதிகளில் சுமார் 400 குடும்பங்கள் கடலேரியில் தென்னம் பொச்சுக்களைப் புதைத்து நனைந்த பின்னர் அதனைக் கொட்டன்களால் அடித்து தும்பு உற்பத்தி செய்து வழங்கி வந்தனர். இங்குள்ள குடிசைக் கைத்தொழிலாளர்களால் வழங்கப்பட்ட தும்பு போதாமல் இருந்ததால் அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர், நாவாந்துறை போன்ற இடங்களிலிருந்து பெருமளவு தும்பு, வாகனங்கள்மூலம் தருவிக்கப்பட்டு தினமும் உற்பத்தி இடம்பெற்றது.. தும்பு உற் பத்திக்கு ஒரு குழு இயங்கியபோது தும்புக்கு சாயமிடும் பணியில் மற்றொரு குழு இயங்கியது. சாவகச் சேரியில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தும்பு உற்பத்திப் பொருள்கள் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்ததால் தும்பு உற்பத்தி அதிகரித்தது. தும்பு உற்பத்தி நிலையத்தில் காணப்பட்ட ஒரு பகுதியில் தையல் பயிற்சி வகுப்பும் இடம் பெற்றது. இதனால் சாவகச்சேரி, அல்லாரை, கச்சாய், மீசாலை, சங்கத்தானை போன்ற இடங்களிலிருந்து பெரு மளவு இளம் பெண்கள் தும்பு உற்பத்திப் பொருள்கள், தையல் பயிற்சியுடன் அவற்றினை உற்பத்தி செய்வதி லும் ஆர்வம் காட்டினர். அவ்வேளையில் பயிற்றுவிப்பாள ராக இணைந்து கொண்ட செல்வநாயகம் என்பவர் தும்புத் தடி, விளக்குமாறு, கால்மிதி போன்றவற்றின் உற்பத்தியில் பயிற்சிகளை வழங்கினார். இதனால் இங்கு உற்பத்தி செய்யப்பட்ட தும்பு உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்ய பல இடங்களிலிருந்து வியாபாரிகள் வருகை தந்து கயிறு உட்பட தும்பு உற்பத்திகளை கொள்வனவு செய்யத் தொடங்கினர். தினமும் தும்பு உற்பத்திப் பொருள்கள் பெரு மளவில் விற்பனை செய்யப்பட்டதால் உற்பத்தி அதிகரிப் புக்கேற்ப அங்கு பணிபுரிவோரின் ஊதியமும் அதிகரித்து வழங்கப்பட்டது. இதனால் கவரப்பட்டு பெருமளவு இளம் பெண்கள் பயிற்சி களைப் பெறுவதில் ஆர்வங் காட்டிச் செயற்பட்டனர். தும்பு உற்பத்தி அதிகரிக்க பிரதேசத்தில் தும்புப் பொருள்கள் உற்பத்தி செய்வதிலும் பெருமளவு மக்கள் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொண்டு பெருமளவு வருமானத்தைப் பெற்றனர். இதன் வருமானத் தைக் கண்ட சிலர் தத்தமது பகுதிகளில் கட்டடங்களை அமைத்து பயிற்சிபெற்ற பெண் களைக் கொண்டு தத்தமது பகுதிகளிலும் தும்பு உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பதில் ஆர்வம் கொண்டு செயற்பட்டனர். இதனால் தென்மராட்சிப் பிரதேசத் தின் பல இடங்களில் வாகனங்களில் சென்று தும்பு உற்பத் திக்குத் தேவையான தென்னம் பொச்சைக் கொள்வனவு செய்து தும்பு உற்பத்தியில் ஈடுபட்டனர். தும்பு உற்பத்தியை மேம்படுத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் நிலையத்துக்கு அருகில் உள்ள காணியொன்றைக் கொள்வனவு செய்து அதில் பெரிய தொட்டி அமைத்து பொச்சுகளை ஊறவைத்து இயந் திரம் மூலம் தும்பு உற்பத்தி செய்து வழங்கியுள்ளார். தனியாரால் அல்லாரை, கச்சாய், சங்கத்தானை, மீசாலை போனற இடங் களில் தும்பு உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டதால் தினமும் பலர் தென்மராட்சிப் பிரதேசத்தில் பெருமளவு தும்பு உற்பத்திப் பொருள்களை ஏனைய வியாபார நிலையங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்துள்ளனர். பிரதேசத்தில் இயங்கிய தும்பு உற்பத்தி நிலை யங்களின் தயாரிப்புகளை வடபகுதி மக்கள் ஆர்வத்து டன் கொள்வனவு செய்தபோதிலும் அவை மக்களின் தேவைக்கு போதாது என்பதால் தென்னிலங்கைப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட தும்புத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட தும்பு உற்பத்திப் பொருள்கள் வடபகுதிக்கு கொண்டு வரப்பட்டு மக்களின் தேவைக்கென வழங்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக தும்பு உற்பத்தியின் செயற்பாடுகள் சிறிது சிறி தாகக் குறைவடையத் தொடங்கியன. இங்கு பணியாற்றிய பலர் தனியாரால் நடத்தப்பட்ட தும்பு ஆலைகளுக்கு வேலைக் குச் சென்றதால் 1990 அளவில் உற்பத்தி முழு மையாக நிறுத் தப்பட்டது. நீண்டகாலமாக தும்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய உபகரணங்கள் அறையொன்றில் வைத்து பாதுகாக்கப்பட்டு பின்னர் அவை காணாமல் போனதாகக் கூறப்பட்டது.

1996ஆம் ஆண்டு படையினர் சாவகச்சேரிக்கு வந்தபின்னர் அரச காணியென்பதால் அதனுள் கடந்த வருடம் வரை மொத்தமாக 18 வருடங்கள் தங்கியிருந்தனர். அல்லாரை தம்பு தோட்டத்தில் இருந்த படையணி முகாமுக்கு முன்னிலைக் காவலரணாக படையினரால் இது பயன்படுத்தப்பட்டு வந்தது. காலப் போக்கில் அந்தக்காணிக்குள் படையினரால் உணவகம் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டது. 2010 ஆம் ஆண்டு படை யினர் இந்தக் கட்டடத்திலிருந்து முழுமையாக வெளியேறிய போதிலும் அங்கு அமைக்கப்பட்டிருந்த உணவகம் அகற்றப் படவில்லை. தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் மேற் கொண்ட தொடர் முயற்சிகளின் பயனாக கடந்த ஜூன் மாதம் அங்கிருந்த உணவகம் அப்புறப்படுத்தப்பட்டு அந்தக்காணி பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டது. பிரதேச செயலகத்தினால் சிமேந்துத் தூண்கள் போடப்பட்டு சுற்றிவர முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு இந்திய அரசினால் இந்தக் காணிக்குள் தொழில்பேட்டை ( ஆடை வகை உற்பத்தி ) அமைக்க ஏற் பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் காணிக்குள் நுழைய படையினர் அனுமதி வழங்காததால் திட்டம் கைவிடப்பட்டது.

தற்போது தும்பு உற்பத்திப் பொருள்களின் பாவனை பிளாஸ் ரிக் பொருள்களின் வருகையால் பெருவீழ்ச்சி கண்டுள்ளதால் ஏழு ஏக்கர் பரப்பளவுள்ள இந்தக் காணியில் ஒரு தொழிற் பேட்டை அமைத்து தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இளை ஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும்.வடக்கு மாகாண சபையினர் இந்த விடயத்தில் கவனமெடுத்துச் செயற்பட்டால் சகல வசதிகளுடன் கூடிய தொழிற்சாலைகளை அமைக்கமுடியும் என மக்கள் தெரிவித்தனர் .

**தென்னவன்**

# சிங்கர் கிரெடிட் கார்ட் அறிமுகம்



சிங்கர் ஸ்ரீ லங்கா பிஎல்சி நிறுவனத்தின் துணை நிறுவனமான சிங்கர் ஃபினான்ஸ் (லங்கர்) பிஎல்சி, கிரெடிட் கார்ட்டை சந்தையில் அறிமுகம் செய்திருந்தது. சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கிரெடிட் கார்ட் ஒன்றை இலங்கையில் முதன் முதலில் அறிமுகம் செய் யும் வங்கிசாராத நிதி நிறுவனம் எனும் பெரு மையை சிங்கர் ஃபினான்ஸ் பெற்றுள்ளது. வைபவ ரீதியாக இடம்பெற்ற இந்த அறி முகத்தைத் தொடர்ந்து, சிங்கர் கிரெடிட் கார்ட்டை தற்போது வாடிக்கையாளர்களும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது.

விசா வலையமைப்பினால் வலுவூட்டப்படும் இந்த கிரெடிட் கார்ட்டை, உள்நாட்டு மற்றும் சர்வதேச விற்பனை நிலையங்கள் ஏற்றுக் கொள்ளும் என்பதுடன், ஏ.ரி.எம். நிலையங் களிலும் பயன்படுத்தலாம் என அறிவிக் கப்பட்டுள்ளது. சிங்கர் குரூப் பிரதம நிறை வேற்று அதிகாரி அசோக பீரிஸ் கருத்துத் தெரி விக்கையில், 'எமது செயற்பாடுகளின் விஸ் தரிப்பு நடவடிக்கையாக இந்த கிரெடிட் கார்ட் விநியோகம் அமைந்துள்ளது. இலங்கையில் நுகர்வோர் நிதிச் சேவைகளை 1877 ஆம் ஆண்டு முதல் சிங்கர் வழங்கி வருகிறது. சிங்கர், ஃபினான்ஸின் 19 பிராந்திய கிளைகளின் மூலமாகவும், சிங்கர் ஸ்ரீலங்காவின் பாரிய வாடிக்கையாளர் வலையமைப்பு மற்றும் விநி யோக வலையமைப்பான 410 கிளைகள் ஊடாக வும் இந்த கிரெடிட் கார்ட்டை படிப்படியாக விநி யோகிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்' என்றார்.

முன்னணி வங்கிசாராத நிதி நிறுவனம் எனும் வகையில், சிங்கர் ஃபினான்ஸ் புத்தாக்கமான நிதித் தீர்வுகளை வழங்கி வருகிறது. இதற்கேற் றாற் போல் குழுமத்தின் ... மெரு கேற்றம் செய்யப்பட்டுள்ள இந்தத் தீர்வின் மூலமாக வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக்கூடியதாக அமைந் திருக்கும் என்பதில் சிங்கர் ஃபினான்ஸ் பெருமளவு நம்பிக்கை கொண்டுள் ளது. புதிய கிரெடிட் கார்ட் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு இலகுவர்க கொடுப்பனவுகளை மேற்கொள்வ தற்கு உதவும் வகையிலும் அமைந் திருக்கும்.

சிங்கர் ஃபினான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சாந்த விஜேவீர கருத்துத் தெரிவிக்கையில், 'கடந்த ஆண்டுகளில் சந்தை வளர்ச் சியை சிங்கர் ஃபினான்ஸ் பதிவு செய்திருந்தது. அத்துடன், நாட்டின் நிதிக் கட்டமைப்பின் வளர்ச்சியில் முக்கிய பங்களிப் பையும் வழங்கியிருந்தது. கிரெடிட் கார்ட் ஒன்றை விநியோகிப்பதற்கு இலங்கை மத்திய வங்கியி லிருந்து அனுமதியைப் பெற்றுக்கொண்ட முதலாவது அங்கீகாரம் பெற்ற நிதிசார் நிறு வனம் என்பது சிங்கர் ஃபினான்ஸ் நிறு வனத் துக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளது' என்றார்.

2004 ஏப்ரல் 19 ஆம் திகதி சிங்கர் ஃபினான்ஸ் (லங்கா) பிஎல்சி தனது வியாபார நடவடிக் கைகளை நிதிசார் சேவைகளை வழங்கும் நிறுவனமாக 1988 ஆம் ஆண்டின் நிதிசார் நிறுவனங்கள் சட்டக் கோவை இல. 78 (காலப்போக்கில் 1991 ஆம் ஆண்டின் சட்டக் கோவை இல. 23 க்கு மாற்றம் செய்யப்பட்டு, 2011 ஆம் ஆண்டு நிதிச் சட்டக் கோவை இல. 42 இன் பிரகாரம் மாற்றீடு செய்யப்பட்டிருந் தது) இன் பிரகாரம் ஆரம்பித்திருந்தது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிகாரிகள் கவனம் எடுக்கமாட்டார்களா?

ஒரு திங்கட்கிழமை யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள பிறப்பு, இறப்பு பதிவுக் காரியாலயத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு நேர அட்டவணைப் பலகையில் வேலை நேரம் காலை 9.00 - 2.00 மணி வரை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் சரியாக 8.30 மணியளவில் அங்கு அமர்ந்திருந்தேன். காலை 9 மணி வரை எந்த உத்தியோகத்தர்களும் வரவில்லை. அங்கே பிள் ளைகளுடன் அதிக பெண்கள், வேலைக்குச் செல்ல அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் ஆண்கள் என பலபேர் காத்திருந்தனர். அங்கு இருப்பதற்கு ஆசனம் சிலபேருக்குக் கிடைக்கவில்லை. அத்துடன் வெப்பமிகுதியால் எல்லோர் முகத்திலும் வியர்வை. மின்விசிறிகூட அந்த இடத்தில் மாட்டப்படவில்லை. எத்தனையோ சிரமத்தின் மத்தியில் மக்கள் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தனர். சரியாக 9.10 மணியளவில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் வந்து உள்ளே சென்றார். பின்பு சரியாக 9.40 மணியளவில்தான் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார். அரச உத்தியோகத்தர்கள் சரியாக 8.30 மணிக்கு கையொப்பமிடுகிறார்கள். ஆனால் இங்கே 9.40 மணிக்குத்தான் பணியை ஆரம்பிக்கிறார்கள். இந்த இடைப்பட்ட நேரத்தில் அவரைப் பார்க்க வந்திருக்கும் பொதுமக்கள் அவஸ்தைக்குள்ளாகிறார்கள் என்பதை உணர்வதில்லை. இதைப்பற்றி வைத்தியசாலைப் பணிப்பாளர்களோ அல்லது மேலதிகாரிகளோ கவனம் எடுக்கமாட்டார்களா எனப் பொதுமக்கள் ஏங்கி நிற்கிறார்கள்.

மாயவன், *பெருமாள்கோயிலடி*
*யாழ்ப்பாணம்*

## உதயன் உரத்துக் குரல் கொடுப்பானா?

வரணி வடக்குப் பகுதியில் சுமார் நான்கு வருடங்களுக்கு முன்னர் அப்போதைய சமுர்த்தி உத்தியோகத்தரால் மின்சார வசதிகளற்ற மற்றும் ஓலைக் குடிசைகளில் வாழும் மக்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்பட்டது. ஆனால் அந்த மண்ணெண்ணெய் முத்திரைக்கு இன்று வரை மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லை. பயனாளிகள் தினமும் கூட்டுறவுச் சங்கத்தில் மண்ணெண்ணெய் வந்துவிட்டதா என்று கேட்டு அலைந்து திரிவதைக் காணமுடிகிறது. இதேவேளை சங்கக் கிளையில் பணத்துக்கான மண்ணெண்ணெய் தாராளமாக வழங்கப்படுகிறது. இந்தச் சமுர்த்தி மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பாக கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தமக்கு மண்ணெண்ணெய் விநியோகத்துக்கு இன்னமும் எந்தவித அறிவித்தலோ அனுமதியோ கிடைக்கவில்லை. அனுமதி கிடைத்தால் பயனாளிகளின் மண்ணெண்ணெய் விநியோகத்தை உடனடியாக மேற்கொள்ளலாம் என்றார். எனது அன்பான அரச உயர் அதிகாரிகளே, இத்தனை வருடங்களாக இழுத்தடித்தடிக்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் முத்திரையை அப்பாவி ஏழைகள் மற்றும் மின்னொளியில் வாழ வழியில்லாதவர்களுக்கு வழங்குவதற்கு காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுப்பீர்களா? தமிழ் மணம் மாறாத உதயன் பத்திரிகையும் ஒருமுறை இது குறித்து உரத்துக்குரல் கொடுப்பானா?

**- தமிழ்ப்பிரியன்**




## இடையூறுகளை அகற்றுங்கள்

நெல்லியடி நகரில் உள்ள நடைபாதை வர்த்தகம் மற்றும் பெட்டிக்கடைகள் என்பவை சகலருக்கும் இடையூறு ஏற்படுத்துவதாக உள்ளன. வாகனங்களை நிறுத்துபவர்கள் பாடசாலை மாணவர்கள் , ஆசிரியர் கள், அரச சேவையாளர்கள் எனப் பலரும் போக்குவரத்தில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பாதசாரிகள் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். வாகனச்சாரதிகள் தடைகளையும் ஆபத்துக்களையும் சந்திக்க வேண்டி உள்ளது. இவை காரணமாக விபத்துக்கள் அதிகரிப்பதற்கான சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. ஆகவே அவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கு ஆவன செய்து உதவுமாறு வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசசபைச் செயலாளரைப் பத்திரிகை வாயிலாக மக்கள் கேட்டுக் கொள்கின்றார்கள்.

**- பொதுவானவன்,**
*நெல்லியடி.*

### கேலிச் சித்திரம்




*நன்றி: மவ்பிம*

## மீண்டும் வெளிப்படும் இனவாதச் சுயரூபம்

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை இலங்கை எவ்வாறு செயற்படுத்தப் போகின்றது என்பது உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள மஹிந்த ஆதரவு எம்.பிக்கள், தீர்மானத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். ஐ.நா. தீர்மானம் தொடர்பாக கலந்துரையாட அனைத்துக் கட்சிகளின் மாநாடு நடத்தப்போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும் அவர் தயாராக இருக்கிறார். அனைத்துக் கட்சிகள் மாநாட்டிலும் நாடாளுமன்றத்திலும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துகளை வெளியிடப் போதுமான அவகாசம் உள்ளது.

அப்படி இருந்தும் ஐ.நா. தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொழும்பு விஹாரமாதேவி பூங்கா வெளியரங்கில் இவர்கள் கூட்டம் நடத்தியதன் மூலம் தமது சுயரூபத்தை மீண்டும் வெளிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இனவாதிகளின் பிடியில் இருந்து வெளியே வரவேண்டும் என்று நாம் முன்னர் பல தடவைகள் இப்பத்தியில் எழுதியிருந்தோம். ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் தோல்வியடைந்து எதிர்க் கட்சித் தலைவர் பதவியையும் இழந்தது இனவாதத்தினால்தான். அரசியலில் பாரிய சரிவைச் சந்தித்துள்ள மகிந்த அணியினரின் தற்போதைய நடவடிக்கைகள் நாட்டில் உருவாகி வரும் சமாதானச் சூழ்நிலையைக் குழப்பக்கூடியவை.

ஐ.நா. தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போர்வையில் தமிழீழம் பற்றியும், புலிகள் பற்றியும் பேசுகிறார்கள். பல தோல்விகளைச் சந்தித்த பின்னரும் இவர்கள் பாடம் படிக்கவில்லை.

இலங்கை தொடர்பான தனது முதலாவது தீர்மானத்தைக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையொட்டித் தயாரித்து வெற்றிகரமாகப் பேரவையில் நிறைவேற்றிய அமெரிக்கா, கடந்த செப்ரெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கையின் அனுசரணையையும் பெற்றுக்கொண்டு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் இலங்கை விவகாரத்தில் அப்பட்டமான வெளித்தலையீடு என்பதில் சந்தேகம் இல்லை. போர்க்குற்றம் குறித்து இலங்கையில் விசாரணை நடத்தப்படப்போகிறது. இதற்காக பொதுநலவாய, வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், வழக்குத் தொடுநர்கள் இலங்கை வரப்போகின்றார்கள். இந்த நிலைமைக்குக் காரணம் முன்னைய ஆட்சியாளர்கள்தான். மகிந்தவுடன் கூட இருந்த இனவாதிகள்தான் மகிந்தவைத் தவறான பாதைக்கு இட்டுச் சென்றார்கள். ஐ.நா. தீர்மானங்களை உதாசீனம் செய்து சர்வதேசத்தை ஏமாற்ற முயன்றார்கள். அதன் விளைவுதான் கடந்த செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானம்.

உள்ளக விசாரணையை நீதியாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் நடத்தியிருந்தால் இன்றைய நிலைமை ஏற்பட்டிருக்கமுடியாது. உலகின் அதி உயர் மன்றமான ஐ.நாவின் தீர்மானங்களை உதாசீனம் செய்ததால், ஐ.நா. தீர்மானத்துக்கு சவால் விட்டதால் ஏற்பட்ட விளைவு இது. ஜனவரி 8 இல் புதிய ஆட்சி ஏற்பட்டிருக்காவிட்டால் பயணத் தடை, பொருளாதாரத்தடை என்று தன்னிச்சையாக அமெரிக்கா உட்பட சில நாடுகள் இலங்கையைத் தண்டிக்க முற்பட்டிருக்கலாம். இந்த ஆபத்துக்களில் இருந்து இலங்கை விடுபட்டு விட்டது. தீர்மானத்துக்குத் தானே அனுசரணை வழங்கி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற உதவிய இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் மகிந்த அணியினரின் காட்டுக்கூச்சலுக்கு அஞ்சக்கூடாது.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இலங்கையில் இன உறவு முளைத்தெழ வாய்ப்புண்டா?

ஐக்கிய நாடுகள் சபையின், மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால், இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து நடத்தப்பட்ட விசாரணை அறிக்கை இன்று எமது நாட்டின் நாடாளுமன்றில் விவாதிக்கப்பட உள்ளது.

அதன் முன்னோட்டமாக, மக்ஸ்வெல் பரணகம மற்றும் நிசங்க உடலகம ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் நேற்று முன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம், இம்முறை இலங்கை அரசின் அனுசரணையுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

அதன் பிற்பாடு, அது கொழும்பு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதும் நிறைவேற்றப்படுவதும் இரட்டைத் தளமாக அமைகிறது.

ஐ.நாவின் தீர்மானத்தை ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்களைத் தயார்ப்படுத்தி வந்திருப்பார்கள்! சரியான போட்டி என்று தமிழகத் திரைப்படம் ஒன்றில் வந்த காட்சி மேலெழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை!

நாடாளுமன்ற உறுப்பினர்களின்-அரசியல்வாதிகளின் ஆர்ப்பரிப்புகள் இன்று சபையை அதிர வைக்கும் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஆனால் நாட்டின் ஒட்டுமொத்த நலனை நாடியும், பாதிப்புற்ற தமிழ் மக்களின் விடிவு கருதியும் வாதப் பிரதிவாதங்கள் அர்த்த புஷ்டி உள்ளனவாகவும், ஆக்கபூர்வமாகவும் அமைய வேண்டும்.

நாடாளுமன்றக் கதிரைகளை இன்று அணி செய்யப்போகும் மக்கள் பிரதிநிதிகள், தாமே உள்ளார்ந்து உணர்ந்து ஆற்ற வேண்டிய கடமை இது.

மேலும்-

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான உதவிப் பொதுச் செயலாளர் மிரோஸ்லோவ் ஜென்கா நேற்றுக் கொழும்பு வந்துள்ளார். அவர், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடுவார் என்பது செய்தி. இலங்கையில் நடைபெற உள்ள விசாரணைக் குழுவுக்கு மோற்றோ நோக்குச்சி என்ற ஜப்பானிய நீதியரசர் தலைமை வகிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு, ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்புரிமை கிடைத்த அறுபதாவது ஆண்டும், ஐ.நாவின் எழுபதாவது ஆண்டும், எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் கொண்டாடப்பட உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மகிந்தவின் பதவிக் காலத்தில், ஐக்கிய நாடுகள் சபை, பெரும்பாலும் புறமொதுக்கப்பட்ட அமைப்பாகவே இலங்கை அரசால் பார்க்கப்பட்டது.

இப்போதைய அரசின் நோக்கும் பார்வையும் ஐ.நாவுடன் இணைந்து செயற்படும் ஒரு பின்புலத்தைத் தோற்றுவித்துள்ளது.

காலத்துக்குக் காலம், கால மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள், ஆட்சி மாற்றங்கள், நாடுகளின் தலைமைத்துவ மாற்றங்கள் நிகழ்வது புதுமையான ஒன்றல்ல; புதியனவும் இல்லை.

இலங்கையில் நடைபெற்ற போரை நிறுத்தி, சமாதானத்தை, உருவாக்கி தமிழ் மக்களின் நலனைப் பாதுகாப்பதில், ஐக்கிய நாடுகள் சபையோ எந்தத் தேசமுமோ உள்ளார்ந்த மனதுடன் செயற்படவில்லை. சாய்ந்தால், சாய்கிற பக்கமே சாய்கிற பாணியில், வழியில் செயற்பட்டன என்பது காலத்தின் கரிக்கோடு.

நீயா நானா என்ற ஏட்டிக்குப் போட்டியான மமதைப் போக்குகளும், இலங்கையின் இன உறவு தேய்ந்து, எரிந்து சாம்பார் ஆவதற்கு எண்ணெய் ஊற்றின.

அந்த நிலையை வேர் அறுக்கும் காலம் இனியேனும் வராதா என்ற ஏக்கம், இலங்கை வாழ் தமிழ் மக்களின் மனங்களை, மணிக்கு மணி கருக்குகின்றன.

அவர்களும் இந்த நாட்டு மக்களே என்பதனை, அரச கட்டிலில் அமரும் தெற்கின் அரசியல் தலைவர்கள் எனப்படுவோர், எப்போது உணரப் போகிறார்கள்? அப்போதே அவர் தம் மக்களுக்கும் விடிவு பிறக்கும்.

## இந்திய மீனவர் படகுகளின் ஆக்கிரமிப்பில்

# வடபகுதிக் கடல் வளங்கள்

**கந்தப்பு பரமேஸ்வரன்**

இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவுக்குத் தென்கிழக்கே வடஅகலாங்கு 60100 க்கும், நெட்டாங்கு 800820க்கும் இடையில் அமைந்துள்ள இலங்கை, அதன் புவியியல் அமைவிடம் காரணமாக மீன்பிடித்தலுக்குச் சாதகமான சூழல் அமைப்பைக் கொண்டுள்ளது. இந்தத் தீவைச் சூழவுள்ள கடற்பரப்பின் அளவு ஏறக்குறைய 536000 சதுரகிலோ மீற்றர் ஆகும்.கரையிலிருந்து 200 கடல் மைல்கள் (370.4கி.மீ) தூரம் வரையிலான பொருளாதார தனியுரிமை வலயம் மற்றும் மாசாக்கல் தடை வலயத்தையும் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தத் தீவின் கரையோர நீளம் ஏறக்குறைய 1920 கி.மீ ஆகும். கரையோரத்திலிருந்து கடற்பகுதியைச் சார்ந்துள்ள கண்டமேடைகள், கண்டத்திட்டுக்கள் என்பன வடபகுதியைச் சார்ந்திருக்கின்ற கடற்பிரதேசத்தில் அகலமாகவும், தென்பகுதிக் கடலிலே ஒடுக்கமாகவும் அமைந்துள்ளன. அகலம் 40 கிலோ மீற்றருக்கு மேற்படாமலும், சராசரியாக 22 கிலோ மீற்றரைக் கொண்ட கண்டமேடையின் பரப்பளவு 30,028 சதுரகிலோமீற்றர் கொண்டதாக அமைந்திருப்பதும், கடல்வாழ் உயிரினங்களின் பரம்பலுக்குச் சாதகமாகக் காணப்படும் இடமாக வடபகுதிக் கடற்பரப்பு விளங்குகின்றது. இதனைவிட புவியியல் ரீதியான கடற்பிரதேசமாக அமையும், இந்தியாவின் தமிழக எல்லைப் பிரதேசங்களான தூத்துக்குடி, இராமேஸ்வரம், தனுஷ்கோடி ஆகியவை இலங்கையின் வடபகுதிக்கு அண்மையில் அமைந்திருப்பதால் இலகுவாகச் சர்வதேசக் கடல் எல்லைகளைக் கடந்து வடபகுதிக் கடற்பிரதேசத்தினுள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இத்தகைய பின்னணியில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக கடல் சார் எல்லைகள் நிர்ணயம் தொடர்பாகவும், மீன்பிடிக் கைத்தொழில் சார்ந்த பிரச்சினையாகவும் இருநாட்டு மீனவர்களிடையே பிணக்குகள் இருந்து வருகின்றன. எனினும் இலங்கை- இந்திய நாட்டு அரசுகள் காலத்துக்குக் காலம் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமான தீர்வை எட்டுவதற்கான முனைப்புக்களை இராஜதந்திர ரீதியாக காட்டிய போதிலும், பிரச்சினை இன்று வரை தீர்க்கப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமான விடயமாக நோக்கப்படு கின்றது.

1974, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கை- இந்திய நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட கடல் எல்லைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் மூலம், இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் உள்ள மன்னார்குடா, பாக்கு நீரிணை, பாக்கு விரிகுடா ஆகிய கடற்பரப்புக்கள் அகலாங்கு, நெட்டாங்கு அடிப்படையில் கணிக்கப்பட்டு ஆட்புல எல்லைக் கோடு வரையப்பட்டது. இதன் விளைவாக இதுவரை காலமும் இலங்கை மீனவர்களால் பயன்படுத்தப்பட்டுவந்த வோர்ஜ் மேடையையும், வடபகுதியின் கடற்பரப்பில் அமைந்துள்ள பேதுரு மேடையின் 1/3 பகுதியையும் இலங்கை இழந்து விட்டது. இந்த ஒப்பந்தத்தில் சர்வதேச சட்டங்கள் சமவாயங்களுக்கு மதிப்பளித்து விட்டுக் கொடுப்புடன் இலங்கை அரசு நடந்து கொண்டது. இதனை இந்திய அரசு வரவேற்றுத் தனது அறிக்கையை இராஜ தந்திர ரீதியாக அனுப்பியும் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும். எனினும் இருநாட்டு மீனவர்களும் காலப்போக்கில் ஒப்பந்தங்களை மீறி எல்லை கடந்த மீன்பிடியில் ஈடுபட்டுக் கைது செய்யப்படுதல், கடலில் சுட்டுக் கொல்லப்படுதல், காயமடைதல் எனப் பல்வேறு சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன. 1980களில் இலங்கையில் உள்நாட்டுப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து இலங்கை- இந்தியக் கடலோர எல்லைகளில் இலங்கைக் கடற்படையினரும், விடுதலைப்புலிகளின் கடற்படைப் படகுகளும் தொடர்ச்சியாக இந்தப் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது ஓரளவுக்கு இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்தப் பிரச்சினை இருநாட்டு உறவில் விரிசல் ஏற்படு மளவுக்கு தலை தூக்கியுள்ளது.

கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில் உள்நாட்டுப் போரால் சமூக பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மீனவர்களின் குடும்பங்கள், தமது அன்றாட ஜீவனோபாய வாழ்வாதாரத்துக்காக மீன்பிடித் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றன. போரால் உயிர் இழப்பு, உடைமை இழப்பு, தொழில் வளங்கள் இழப்பு என பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து தற்போதைய சமாதான காலப் பகுதியில் ஓரளவு நிம்மதியான வாழ்வை அனுபவித்துவரும் வேளையில் இந்திய மீனவர்களது அத்துமீறல்கள் வடபகுதிக் கடல்வளங்களைச் சூறையாடிச் செல்கின்ற நிலையை உருவாக்குகின்றது. இத்தகைய நிலை தொடருமாக இருந்தால், வடபகுதியில் குறிப்பாக நெடுந்தீவு, மாதகல், காரைநகர், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, மன்னார் கரையோரங்களை அண்டிய கடற்பிரதேசங்களிலுள்ள கடல்வளங்கள் அருகிப்போய் விடும் நிலை உருவாகும்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொண்ட போதிலும், இந்திய - பாகிஸ்தான் கடல் எல்லைகளில் இருநாட்டு மீனவர்களும் மீன்பிடிக்க ஒப்பந்தம் செய்துள்ளதைப் போல இலங்கை இந்தியக் கடல் எல்லைகளிலும் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்.இந்திய கடற்பகுதியில் மீன்வளம் குறைந்து வருவதால்தான் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடலில் மீன்பிடிக்க முற்படுகிறார்கள். எனவே வாரத்தில் 3 நாள்கள் தமிழக மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என இந்திய மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கூறி வருகின்றனர். இதனால் இருதரப்புக்களுக்கும் இடையில் நடை பெற்று வந்த பேச்சுவார்த்தைகள் இணக்கப்பாடு இன்றிக் காணப்படுகின்றன.



### இந்தப் பிரச்சினைக்கான தீர்வு

1. தற்போது இந்தியாவின் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருக்கின்ற ஜெயலலிதா அம்மையார் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என்றுமில்லாத அளவுக்கு சட்ட சபையிலும் வெளியேயும் பல்வேறுபட்ட ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில், மத்திய அரசு ஊடாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி ஏற்கனவே இருந்து வருகின்ற ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்து நிரந்தரத் தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க முன்வர வேண்டும்.
2. இலங்கையின் வடமாகாணத்தில் அதிகாரத்திலுள்ள வடக்கு மாகாணசபை, உடனடியாக இந்தப் பிரச்சினை ஜனாதிபதி, பிரதமர், மீன்பிடித்துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்து இந்திய அரசுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி சுமுகமான தீர்வை எட்டுவதற்கு முன்வர வேண்டும்.

இலங்கை- இந்திய நாட்டு மீனவர்களுடைய ஜீவனோபாய பொருளாதாரம் சார்ந்த பிரச்சினையாக இது விளங்குவதால் இரு அரசுகளும் விட்டுக் கொடுப்புடனும் புரிந்துணர்வு அடிப்படையிலும் எட்டக்கூடிய ஒரு தீர்வை அடைவதற்கு முன்வர வேண்டும். இதனூடாக இருநாட்டு உறவுகளும் வலுப்படுத்தப்படுவதோடு கடல்சார் வளங்களும் பாதுகாக்கப்பட்டு மீனவர்களின் சமூக பொருளாதாரம் மேம்பாடு அடைய வழி ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு குறித்தே தயக்கம் கொண்டுள்ளோம்

## சிங்கப்பூரில் பிரதமர் ரணில் செவ்வி

இலங்கையின் போர்க் குற்றத் தீர்ப்பாயத்தில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறுவது குறித்து தயக்கம் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்களுடைய பங்களிப்பு என்ன வகையில் அமைந்திருக்கவேண்டும் என்பது குறித்தே நாங்கள் தயக்கம்கொண்டுள்ளோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் 'ஸ்டிரெய்ட்டைம்ஸிற்கு' அளித்துள்ள பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

**கேள்வி: சிங்கப்பூருக்கு நீங்கள் பயணம் தந்த காரணம் என்ன?**

**பதில்**: பிரதமரையும், பிரதிப் பிரதமரையும் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பிரதிப் பிரதமர் எனக்கு முன்னரே அறிமுகமானவர். இது தவிர வெளிவிவகார அமைச்சர், நிதி மற்றும் வர்த்தக அமைச்சர்களையும் சந்திப் பதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

**கே: பேச்சுக்களின் பலாபலன்கள் குறித்து?**

ப: நாங்கள் பரஸ்பர ஒத்துழைப்புக் குறித்து ஆராய்ந்தோம். இலங்கையின் மேற்கு மாகாணத்தை மெகா பொலிஸாக மாற்றுவதற்கான முயற்சியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இதற்கான திட்டமிடலை நான் 2004 இல் பிரதமராக இருந்தவேளை சிங்கப்பூர்ஸ்ரீன் சிஸ்மா மேற்கொண்டது.ஆனால் ராஜபக்ச அரசு அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவில்லை.

நாங்கள் தற்போது மீண்டும் அந்தத் திட்டம் குறித்து அவர்களுடன் ஆராயவுள்ளோம். இந்த வருட இறுதிக்குள் இந்த திட்டம் பூர்த்தியாகிவிடும். மேலும் திருகோணமலைக்கான திட்டத்தை அவர்கள் முன்னெடுக்கவேண்டும் (சுபர்னா- யுரோங் தனியார் நிறுவனம்) என விரும்புகின்றோம். ஜப்பானியர்களும், இந்தியர்களும் அந்த பகுதி குறித்து ஆர்வம் கொண்டுள்ளனர்.

திருகோணமலை துறைமுகத்துக்கு அப்பால் மின்உற்பத்தி மற்றும் உற்பத்தித் துறைக்கான வாய்ப்புள்ளது. திருகோணமலையின் அனல் மின் நிலையத் திட்டத்தில் இந்தியாவும், ஜப்பானும் ஈடுபாடு காட்டுகின்றன. சுற்றுலாத் துறையை விருத்தி செய்வதற்கும் பலத்த வாய்ப்புள்ளது.

பெரிய நகரங்களை பொருளாதார வளர்ச்சிக்கான வினையூக்கியாகப் பயன்படுத்தும் திட்டத்தை அடிப்படையாக வைத்தே மெகா பொலிஸ் திட்டம் உருவாகின்றது. இதன் பின்னர் தொழில்நுட்பம் வடமேல்மாகாணம் போன்ற ஏனைய பகுதிகளுக்கும் செல்லத் தொடங்கும் என்பதே இதன் நன்மை.

இதேவேளை நாங்கள் வடக்குகிழக்கில் புனர்நிர்மாணம் குறித்தும் கவனம் செலுத்துகின்றோம், குறிப்பாக விவசாயத்தில்.அதனைச் செய்ததும் முதலீடுகள் வரத்தொடங்கும்.

**கே: பிரதமர் என்ற அடிப்படையில் முன்னுரிமைகள் என்ன?**

ப: நிச்சயமாக தேசிய நல்லிணக்கம். அதுவே முதல் முன்னுரிமைக்குரிய விடயம்.அதன் பின்னர் மகிந்த ராஜபக்ச அரசின் கீழ் பல வீனப்படுத்தப்பட்ட ஜனநாயகக் கட்டமைப்புகளைப் பலப்படுத்துவது. உதாரணத்துக்கு பிரதம நீதியரசர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார், சட்டத்தின் ஆட்சி பாதிக்கப்பட்டது. நாங்கள் ஜனநாயகம் குறித்த பெருமையான வரலாற்றைக் கொண்டவர்கள். ஆசியாவிலேயே மிகப் பழைமையான ஜனநாயகத்தை இலங்கை கொண்டுள்ளது.

**கே: பொருளாதாரக் கொள்கை தொடர்பாக..?**

ப: ஐக்கியதேசிய கட்சி மக்கள்சார்பு கொள்கையைக் கொண்டுள்ளது, சந்தைப் பொருளாதாரம் மூலமே மக்கள் செழிப்படைய முடியும் என நாங்கள் கருதுகின்றோம்.இதன் காரணமாக பொருளாதாரச் சீர்திருத்தத்தின் அடுத்த கட்டம் குறித்து நாங்கள் கவனம் செலுத்துகின்றோம். துரிதமாக மாற்றமடைந்து வரும் உலகம் குறித்து நாங்கள் கவனம்செலுத்துகின்றோம், உலகமயமாக்கல் காணப்படுகின்றது. 'டிரான்ஸ் பசுவிக்' உடன்படிக்கை ஆசிய பிராந்தியத்தின் பொருளாதாரத்தை மாற்றப்போகின்றது. அனைத்து நாடுகளும் அது குறித்து கவனம் செலுத்தவேண்டும்.வியட்நாம் சீனாவை விடபோட்டித் தன்மைமிகுந்ததாக மாறலாம்.

மேலும் இந்தியாவும்,சீனாவும் உள்ளன. நாங்கள் எங்கள் அமைவிடம், எமது இயற்கை வளங்கள், மனித ஆற்றல் என்பவை குறித்துச் சிந்திக்கின்றோம்.இந்தியாவுடன் நாங்கள் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பில் ஈடுபட்டுள்ளோம்.சீனாவுடன், ஏன் சிங்கப்பூருடனும்கூட, சுதந்திர வர்த்தக உடன்படிக்கை சாத்தியமாகலாம்.


இந்தியா, சீனாவுடன்நாங்கள் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை பூர்த்திசெய்தவுடன், சிங்கப்பூருடன் செய்வோம்.இந்தியாவுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஏற்கனவே எங்களுக்குள்ளது. ஆனால் அதனை நாங்கள் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பாக மாற்ற வேண்டும்,நாங்கள் மென்பொருள்கள் விடயத்தில் இந்தியாவின் பலத்தை கருத்திலெடுத்துள்ளோம்.இந்தியர்கள் எங்களிடமிருந்து எதனைப் பெற்றுக்கொள்ளலாம் என ஆராய்கின்றனர், புதிய இந்திய அரசு இதற்குச் சாதகமாக உள்ளது.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கை குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு எங்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட நிபுணத்துவமே உள்ளதால் அதனை ஒழுங்குபடுத்தியுள்ளோம். அடுத்த வருடத்துக்குள் சீனாவுடனான சுதந்திரவர்த்தக உடன்படிக்கை பூர்த்தியாகலாம். அதன் பின்னர் சிங்கப்பூருடன் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கின்றோம்.

அதன் பின்னர் டிரான்ஸ் பசுவிக் உடன்படிக்கை மூலமாக நாங்கள் எவ்வாறு போட்டித் தன்மை மிகுந்த நாடாக மாறுவது என்பது குறித்து ஆராய்வோம்.

**கே:பொருளாதார வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகள் குறித்து?**

ப: எங்களுடைய பொருளாதார வளர்ச்சி என்பது தற்போது கட்டுமானத் துறை, வெளிநாட்டிலிருந்து வரும் வருவாய், பொதுத்துறைச் செலவினம் ஆகியவற்றை மையப்படுத்தியே அமைந்துள்ளது. விவசாயம், சேவைத் துறை, உற்பத்தித் துறைகளில் எங்களுக்கு உண்மையான வளர்ச்சி அவசியம். மேலும் நிதிச் சேவைத் துறைகளிலும். உலக பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிபாதையில் செல்லத் தொடங்கியதும் எங்களுடைய பொருளாதாரம் ஏழு வீத வளர்ச்சியைக் காணும். தற்போது நாங்கள் மறுசம நிலைச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளோம், மற்றும் மேற்குலகின் அதிகரிக்கும் வட்டி வீதமும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது, நாங்கள் மேற்கிலிருந்து அதிகளவு பெற்றுள்ளோம், அதனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.



**கே: உள்நாட்டுப் போரின் முடிவில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் குறித்த ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை குறித்து என்ன கூறவிரும்புகின்றீர்கள்?**

ப: நாங்கள் அது குறித்து ஆராய்ந்து வருகின்றோம்.ஜனாதிபதி சிறிசேன அனைத்துக் கட்சிக் கூட்டமொன்றுக்கு அழைப்பை விடுத்துள்ளார்.நாங்கள் காணமற்போனோர் தொடர்பான அலுவலகம் மற்றும் விசேட சம்பவங்கள் குறித்து சிந்தித்து வருகின்றோம், இதில் எது குறித்து மேலதிகவிசாரணைகள் இடம்பெற வேண்டும், எவற்றை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் போன்ற விடயங்கள் குறித்து சிந்திக்கின்றோம், உண்மை ஆணைக்குழு தனது அறிக்கைகளை கருணைச் சபையிடம் சமர்ப்பிக்கும்,அவர்களால் பொதுமன்னிப்பு வழங்குவது குறித்து தீர்மானிக்க முடியும், ஏனைய சம்பவங்கள் தொடர்பில் ஆரம்பக் கட்ட விசாரணைக்காக நீதிப்பொறி முறை யொன்று ஏற்படுத்தப்படும்.அதன் பின்னர் அது இறுதித் தீர்ப்புக்காக உச்சநீதிமன்றத்துக்கு செல்லும்.

**கே: போர்க் குற்றத் தீர்ப்பாயத்துக்கு வெளிநாட்டு நீதிபதிகளை நியமிக்கத் தயங்குவது குறித்து?**

ப: நாங்கள் வெளிநாட்டு நீதிபதிகள் குறித்து தயக்கம் கொண்டிருக்கவில்லை. மாறாக அவர்களுடைய பங்களிப்பு என்ன வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பது குறித்தே நாங்கள் தயக்கம்கொண்டுள்ளோம், ஆகவே அது குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும், ஏற்கனவே வெளிநாட்டு நீதிபதிகள் எங்கள் (இலங்கை) விசாரணைகளில் பங்கெடுத்துள்ளனர்.

இறுதியாக ஏற்படுத்தப்பட்ட இரு ஆணைக் குழுக்களிலும் வெளிநாட்டு நீதிபதிகள் ஆலோசகர்கள் என்ற அடிப்படையில் செயற்பட்டனர். ஆகவே எங்கள் முன்னால் உள்ள கேள்வி என்னவென்றால், நாங்கள் அதனைப் பின்பற்றுவதா அல்லது அதற்கும் அப்பால் சென்று வெளிநாட்டு நீதிபதிகளுக்கு விசாரணைகளை மேற்கொள்ளும் நீதிபதிகள் குழாமில் இடமளிப்பதா என்பதே- அவர்கள் இடம்பெறுவது குறித்து எந்தவித கேள்விகளுமில்லை, அவர்கள் ஏற்கனவே இலங்கையின் விசாரணைகளில் பங்கெடுத்துள்ளனர்.அவர்கள் ஆலோசகர்களாகவா அல்லது நீதிபதிகளாகவா செயற்படப்போகின்றனர் என்பதே கேள்வி.

**கே: இந்த விடயம் குறித்து உங்களது தனிப்பட்ட நிலைப்பாடு என்ன?**

ப: முதலில் இலங்கையின் நீதித்துறையும், சிவில்சமூகமும் இது குறித்து எவ்வாறான நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன எனப் பார்ப்போம்-

நான் தெரிவித்தது போன்று வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெறுவது என்பது ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம்.அவர்களுடைய பங்களிப்பு என்ன வகையில் இடம்பெறவேண்டும் என்பதே விவாதிக்கப்படுகின்றது, ஆலோசனை வழங்கும் சபையில்கூட அவர்கள் நீதிபதிகள் ஸ்தானத்திலேயே காணப்படுவர்.

இது குறித்து ஒன்றிரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன. எப்படியென்றாலும் பெரும்பாலான சம்பவங்கள் குறித்து உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவே ஆராயப் போகின்றது, கருணைச் சபையின் பணி அங்கிருந்து ஆரம்பமாகும்,அவர்களே முக்கியமானவர்கள், வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிப்பொறிமுறை குறிப்பிட்ட அளவு சம்பவங்கள் குறித்தே ஆராயும்.உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை விட அவர்கள் குறைவான சம்பவங்களையே கையாள்வார்கள்.

**கே: போரின் இறுதி மாதங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து?**

ப: எவருக்கும் தெரியாது,மனித உரிமை ஆணைக் குழுவால் கூட தெரிவிக்கமுடியவில்லை. உறுதியான எண்ணிக்கைகள், புள்ளிவிபரங்கள் இல்லை, எனினும் 40 ஆயிரத்துக்கும் குறைவாகவே உயிரிழப்புக்கள் இருக்கும் போலத் தோன்றுகின்றது.

**கே: ஜனாதிபதி சிறிசேனவுடனான உறவுகள் குறித்து?**

ப: எந்தபிரச்சினையும் இல்லை, ஏனைய அமைச்சர்கள் சிலரை இணைந்து பணியாற்றச் செய்வதே விவகாரமாகவுள்ளது, பல முரண்பாடுகள் காணப்படுகின்றன.இரு முக்கிய கட்சிகள் தவிர சிறிய கட்சிகள் வேறு உள்ளன.

**கேள்வி-ராஜபக்ச விடயத்தில் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கிறீர்களா?**

ப: மக்கள் உண்மையை அறிய விரும்புகின்றார்கள், தண்டிப்பது என்பது வேறு விடயம்.உண்மை தெரியவரவேண்டும் என்ற பொதுவான உணர்வு, காணப்படுகின்றது. சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவரது சகோதரர் பசில் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

**கே:இந்தியா, சீனாவுடனான உறவுகள் குறித்து?**

ப: எங்கள் கொள்கைகள் என்னவென்பது குறித்து இந்தியாவிடம் தெரிவித்துள்ளோம், இரு நாடுகளும் பரஸ்பரம் ஏனைய நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படுவதில்லை என்ற ஒப்பந்தமுள்ளது.அதனை அடிப்படையாக வைத்து நாங்கள் பணியாற்றுகின்றோம், இந்து சமுத்திரத்தின் கடல்பாதுகாப்பில் நாங்கள் பங்கெடுக்கின்றோம்,ஐக்கியநாடுகள் அமைதிப்படையில் இணைந்துள்ளோம், நேபாளத்தில் பூகம்பம் ஏற்பட்டவேளை நாங்கள் அங்கு இராணுவத்தை அனுப்பினோம், சீனாவுடன் இராணுவ உறவுகள் எதுவும் கிடையாது. ஆனால் பொருளாதார உறவுகள் உள்ளன.

சீனாவுடன் எங்களுக்கு நீண்டகால உறவு உள்ளது என்பதை நாங்கள் இந்தியாவுக்குத் தெரிவித்துள்ளோம்,சீனாவின் பொருளாதார முதலீடுகளை நாங்கள் வரவேற்கின்றோம். உட்கட்டமைப்புத் திட்டங்கள் தொடர்பில் சீனாவுடன் எங்களுக்குச் சில பிரச்சினைகள் உள்ளன, ஆனால் அது இரு நாடுகளுக்கும் இடையிலான விவகாரம்,அதில் இந்தியாவின் ஈடுபாடு எதுவும் இருக்க முடியாது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தியா அங்கத்துவம் பெறுவதை நாங்கள் ஆதரிக்கின்றோம்,இதற்கு அப்பால் எங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளை நாங்களே நிர்வகிக்கின்றோம், இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளை விட எங்களுடைய பொருளாதாரக் கொள்கைகள் அதிகளவுக்கு வெளிப்படையானவை.

**கே: இந்தியாவை அதிக அளவுக்கு சீற்றத்துக்குள்ளாக்கிய சீன நீர்மூழ்கிகளின் இலங்கை வருகை குறித்து?**

ப: இலங்கைக்கு உலகநாடுகளின் கடற்படைக் கலங்கள் வருவதற்கான அளவுகோலொன்றை நாங்கள் வகுத்துள்ளோம்,அதனடிப்படையில் நீர்முழ்கிகள் உட்பட அனைத்துக் கடற்படைக் கலங்களும் இலங்கைக்கு வரலாம்.

எங்களைப் பொறுத்தவரை அது சினேகபூர்வமான ஒன்றாகக் காணப்பட்டால் நாங்கள் அயல்நாட்டுக்கு அது குறித்து அறிவிப்போம், குறிப்பிட்ட கப்பல்கள் இலங்கைக்கு தொடர்ச்சியாக, அடிக்கடி வராதவகையில் நாங்கள் அட்டவணைகளை வகுப்போம்.

சீனாவின் நீர்மூழ்கிகள் உட்பட கடற்படைக் கலங்கள் இறுதியாக இலங்கைக்கு வருகையை மேற்கொண்ட வேளை அது குறித்துத் தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என இந்தியா தெரிவிக்கின்றது, இதுவே பிரச்சினைக்குரிய விடயம், நாங்கள் இது குறித்து ஆராய்ந்துபார்த்ததில் இது உண்மை என்றே தெரியவந்துள்ளது, சீனா தனது நீர்மூழ்கிகளின் வருகையை முன்கூட்டியே இலங்கைக்கு தெரிவித்துள்ளது. அவர்களது நீர்மூழ்கிகள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து தரித்து நின்று விட்டுச் சென்றுவிட்டன, ஜப்பான் பிரதமர் இலங்கைக்கு வருகை தந்தபோது இது இடம்பெற்றுள்ளது. தற்போது நாங்கள் எங்கள் அளவு கோல்களின் அடிப்படையில் செயற்படுவோம். நீங்கள் உங்கள் நீர்மூழ்கிகளையும் போர்க்கப்பல்களையும் இலங்கைக்கு அனுப்பவேண்டும். சிங்கப்பூரிடம் சிறந்த போர்க்கப்பல்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 9 | | | 2 |
| | | | | | | | 1 | 4 |
| 1 | 3 | | | 5 | | | | 7 |
| | | 5 | 6 | | | | | |
| | 6 | | 2 | 9 | 7 | | 4 | |
| | | | | | 3 | 6 | | |
| 9 | | | | 7 | | | 8 | 1 |
| 4 | 8 | | | | | | | |
| 2 | | | 9 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 4 | 5 | 6 | 1 | 9 | 8 | 2 |
| 8 | 2 | 1 | 3 | 9 | 7 | 5 | 4 | 6 |
| 5 | 9 | 6 | 2 | 8 | 4 | 1 | 3 | 7 |
| 9 | 6 | 3 | 8 | 5 | 2 | 7 | 1 | 4 |
| 1 | 5 | 8 | 7 | 4 | 6 | 2 | 9 | 3 |
| 7 | 4 | 2 | 9 | 1 | 3 | 8 | 6 | 5 |
| 2 | 1 | 5 | 6 | 3 | 8 | 4 | 7 | 9 |
| 6 | 8 | 9 | 4 | 7 | 5 | 3 | 2 | 1 |
| 4 | 3 | 7 | 1 | 2 | 9 | 6 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகை யில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பிறருக்கு உதவுதல் சிறப்பு

நாம் எதைப் பிறருக்குக் கொடுக்கிறோமோ அது திரும்பவும் ஆயிரம் மடங்காக எம்மிடமே திரும்பி வரும். ஆனால், இப்போதே அதைப்பற்றிச் சிந்திக்காதீர்கள். நீங்கள் செய்ய வேண்டியது எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் பிறருக்குக் கொடுப்பது மட்டுமே.

கைகள் இருப்பது பிறருக்கு உதவி செய்யத்தான். பட்டினியாய்க் கிடந்தாலும் கடைசிப் பருக்கையையும் பிறருக்குக் கொடுப்பது தான் நல்லது. கொடுப்பவன் முழுமை பெற்று முடிவில் கடவுளாகிறான்.


ஒருவருக்கு உதவி செய்ய எண்ணி, எவருடைய கை முன்னே நீளுகிறதோ, அவனே மக்களில் சிறந்தவன்.

## செரிமானக் கோளாறை ஏற்படுத்தும் உணவுகள்!

நாவின் சுவைக்காகக் கடைகளில் விற்கப்படும் உணவுப் பொருள்களை எம்மை மறந்து அவ்வப்போது வாங்கிச் சாப்பிடுகிறோம். அப்படிச் சாப்பிடும் சில உணவுகள் எளிதில் செரிமானமடையாமல், வயிற்று உப்புசத்தை ஏற்படுத்தி விடுகின்றன. அந்த வகை உணவுகள் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருமே ஐஸ் கிறீமை ரசித்து ருசித்துச் சாப்பிடுவார்கள். அத்தகைய ஐஸ்கிறீம் கூட எளிதில் செரிமானமாகாமல், வயிற்றை உப்புசத்துடன் வைத்துக் கொள்ளும். பருப்புக்களில் ஒரு வகையான இனிப்பான தன்மை உள்ளது. எனவே தான் பருப்பு சிறிது சாப்பிட்டாலும் வயிறு நிறைந்திருப்பது போல் உள்ளது. மேலும் இந்த மாதிரியான உணவுப் பொருளை இரவு நேரத்தில் சாப்பிடக்கூடாது. காரமான உணவுகள் நாவுக்கு மிகவும் பிடித் தவையாக இருந்தாலும், அவற்றில் உள்ள காரம் வயிற்றுச் சுவர்களைப் பாதித்து, வயிற்றுப் பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். எண்ணெயில் போட்டு வறுத்த உணவுகளில் கொழுப்புக்கள் அதிகம் இருப்பதால், இவற்றை உட்கொண்டாலும், அவை எளிதில் செரிமானமடையாமல், தொந்தரவை ஏற்படுத்தும். வெங்காயத்தைப் பச்சையாகச் சாப்பிடும்போது, உற்பத்தி செய்யப்படும் வாயு வயிற்று உப்பு சத்தை ஏற்படுத்தும். அதில் அதிக ஊட்டச்சத்துக்கள் உள்ளன. ஆனால் அவற்றில் உள்ள இனிப்பு, எளிதில் செரி மானமடையாமல் தடுக்கும் சீஸில், புரோட்டீன், கொழுப்பு மற்றும் லாக்டோஸ் அதிக அளவில் நிறைந்திருப்பதால், சீஸ் உள்ள உணவுப் பொருள்களை உட்கொண்டால், நீண்ட நேரம் வயிறு நிறைந்துள்ளது போலிருக்கும். மாட்டிறைச்சியில் புரோட்டீன் மற்றும் கொழுப்பு எண்ணற்ற அளவில் உள்ளதால், இவையும் எளிதில் செரிமானமடையாது. பாலில் புரோட்டீன், கொழுப்புக்கள் மற்றும் லாக்டோஸ் அதிகம் இருப்பதால், பாலை உட்கொண்டாலும், அவை எளிதில் செரிமானமாகாது.

## புத்தியின் தீர்வுகளையே ஏற்றுக் கொள்ளவும்

சிந்தையானது, தன்னளவில் தூய்மையானது. அது பாரபட்சமில்லாத முறையில் புலன்களது எண்ணத்துக்கு அடிபணிவதனாலேயே தூய்மைநிலை கெட்டு அழுக்கு அடைந்து விடுகிறது. சிந்தையானது, புலன் வாயிலாகப் பெறுகின்ற அனைத்தையும் பாரபட்சமின்றி ஏற்றுக் கொள்வதைத் தவிர்த்து, அவற்றைப் பரிசீலனை செய்து கொள்ளும் பொருட்டு புத்தியிடம் விடுத்து, புத்தியின் தீர்வுகளையே ஏற்று அதன்படி செயற்படுமாயின், சிந்தை சலனமற்று, அதன் இயல்பான தூய நிலையைப் பேணி நிற்கக் கூடியதாக இருக்கும்.



சாயி சிந்தனை

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கண்ணகம் | நெல்லியடி | திருநெல் வேலி. | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 60 | 40–60 | 60 | 60 | 30 |
| கத்தரி | 90 | 80 | 120 | 100 | 70–80 | 100 | 80 | 40–50 |
| கரட் | 60 | 80 | 60–180 | 80 | 80–100 | 140 | 100 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 40–50 | 40 | 50 | 30 |
| பயிற்றை | 90 | 80 | 80 | 80 | 100 | 160 | 100 | 100 |
| பாகல் | 160 | 160 | 160 | 220 | 200 | 140 | 110 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 60 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 130 | 140 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 90 | 100 | 140 | 80–100 | 120 | 100 | 100 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 | 40 | 80 | 50 | 40 |
| தக்காளி | 100 | 100 | 80 | 80 | 80–100 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 50 | 60–70 | 80 | 60 | 30 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 30 | 40 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 20 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 150 | 200 | 280 | 240 | 200–220 | 400 | 250 | 230 |
| புடோல் | 50 | 60 | 60 | 60 | 70–80 | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 70 | 60 | 120 | 100 | 60 |
| வெண்டி | 100 | 80 | 80 | 80 | 100 | 120 | 50 | 40 |
| போஞ்சி | 140 | 140 | 160 | 140 | 160 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 | 60 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 55–60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 100 | 100–120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 300 | 350 | 250 | 300 | 260–280 | 600 | 160 | 350 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 140 | 120 | 120 | 150–160 | 200 | 120 | 140 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 140 | 100 | 140 | 60 | 120–180 | 160 | 120 | 70 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 400 | 700 | 300 | 400 |
| நண்டு | 200 | 400 | 250 | 300 | 200 | 400 |
| கணவாய் | 450 | 600 | 500 | 500 | 300 | – |
| பாரை | 300 | 300 | 400 | 450 | 200 | 170 |
| சுறா | 400 | 400 | – | 500 | – | 400 |
| சீலா | 200 | 300 | 300 | 300 | 200 | 300 |
| விளை | 450 | 300 | 300 | 350 | 300 | 300 |
| முரல் | 250 | 250 | 250 | 300 | 200 | – |
| கும்பிளா | 200 | 300 | 250 | 300 | 100 | 250 |
| கிழாக்கன் | 250 | 800 | – | 400 | – | – |
| ஒரா | 250 | 250 | 300 | 350 | – | 200 |
| திரளி | 150 | 200 | 100 | 300 | 50 | – |
| நகரை | 150 | 200 | 60 | 300 | – | 150 |
| சூடை | 100 | 100 | 50 | 120 | 50 | 80 |
| ஒட்டி | 200 | 100 | 200 | 300 | – | – |
| திருக்கை | 350 | 250 | 150 | 280 | 100 | 120 |
| பாலை | 200 | 200 | 250 | 200 | 100 | – |
| வாழை | 70 | 100 | 250 | 100 | 100 | 100 |
| கொய் | 100 | 100 | 50 | 120 | 20 | – |
| மதனம் | 100 | 200 | 100 | 250 | – | 150 |

## நாளை

**ஐப்பசி-06**
**வெள்ளிக்கிழமை**
**23.10.2015**

திதி: ஏகாதசி
பி.இ.3.35வரை
நட்சத்திரம்:
அவிட்டம்
மு.ப.08.47 வரை
சுபநேரம்:
06.02-7.32 வரை
இராகு காலம்:
10.32-12.02
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத எண் சோதிடப் பலன்கள்

**1, 10, 19, 28 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**
அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும் முதலாம் எண் அன்பர்களே! உங்களுக்கு எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமையும் இருக்கும். இந்த மாதம் உங்கள் வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புக்கள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலனைத் தரும். குடும்பச் செலவுகள் குறையும். பிள்ளைகள் உங்களது ஆலோசனைகளைக் கேட்பார்கள். அவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுப்பீர்கள். பெண்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான கவலைகள் நீங்கும். சக மாணவர்களிடம் இருந்த கருத்து வேற்றுமை குறையும்.

**2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**
பக்குவமான அணுகுமுறையால் எதிலும் சாதகமான பலனைப் பெறும் இரண்டாம் எண் அன்பர்களே! நீங்கள் இரக்க சிந்தனை உடையவர்கள். இந்த மாதம் பணவரவு கூடும். செயற்றிறமை அதிகரிக்கும். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையைச் செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில், வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள்.
ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் ஆதரவுடன் எதிலும் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். கணவன்-மனைவியர்களுக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். வரவேண்டிய பணம் வந்து சேரும். செயற்றிறமை அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும். விளையாட்டுகளில் ஆர்வம் உண்டாகும். ஆசிரியர்களது ஆதரவு கிடைக்கும்.

**3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**
உலக அனுபவ அறிவைப் பெற்ற மூன்றாம் எண் அன்பர்களே! நீங்கள் சுய நம்பிக்கை உடையவர்கள். மேலும் அடுத்தவரின் தராதரம் அறிந்து உதவிகள் செய்யக்கூடியவர்கள். இந்த மாதம் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்றுத் தாமத மாகலாம். மனதில் இருந்த கவலைகள் நீங்கி



நிம்மதி பிறக்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். தீ, ஆயுதங்களைக் கையாளும்போது கவனம் தேவை. உதவிகள் செய்யும்போது ஆலோசித்துச் செய்வது நல்லது. பெண்கள் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வி யில் கூடுதல் கவனம் தேவை. ஒரு முறைக்கு இருமுறை பாடங்களைப் படிப்பது நல்லது.

**4, 13, 22, 31 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**
கடின உழைப்பால் ஸ்திரமான வளர்ச்சியைப் பெறும் நான்காம் எண் அன்பர்களே! நீங்கள் கடின உழைப்பைத் தாரக மந்திர மாகக் கொண்டவர்கள். இந்த மாதம் எந்தக் காரியங்களிலும் முன்னேற்றம் காணப்படும். விருப்பத்துக்கு விரோத மாகக் காரியங் கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும்.
கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. எந்தவொரு செயலையும் யோசித்துச் செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பதும் நன்மையைத் தரும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர்த் தடைகள் ஏற்படலாம். திட்டமிட்டுச் செய்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்பாராத அலைச்சல் ஏற்படலாம். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறத் திட்டமிட்டுப் பாடங்களைப் படிப்பதும் தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

**5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**
வாழ்க்கையில் பலவகை சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறியும் திறனுடைய ஐந்தாம் எண் அன்பர்களே! நீங்கள் அறிவை மட்டுமே மூலதனமாக நம்புபவர்கள். இந்த மாதம் எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் இலாபம் கிடைக்கும். கடன், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். நட்பு வகையில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. குடும்ப உறவினர்களால் வீண் அலைச் சல் உண்டாகலாம். மன வலிமை அதி கரிக்கும். உறவினர்கள் மத்தியில் மதிப்புக் கூடும். பெண்கள் நன்மை தீமை பற்றிய கவலை இல்லாமல் எதையும் செய்ய முற்படுவீர்கள். மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும். உற்சாகமாகப் படிப்பீர்கள். சக மாண வர்களிடம் பழகும்போது கவனம் தேவை.

**6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு:**
அசத்தலான நடையுடை பாவனை யுடன் ஆடம்பரமாக வாழும் ஆறாம் எண் அன்பர்களே! நீங்கள் தோற்றப் பொலிவால் அனைவரையும் கவர்பவர்கள். இந்த மாதம் புத்தி சாதுர்யமும் அறிவுத் திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது, எதை விடுவது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப் படும். திடீர்ச் சோர்வு உண்டாகும். அடுத்தவ ரிடம் உங்களது செயற்றிட்டங்களைப் பற்றிக் கூறுவதைத் தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது.
உறவினர்கள் மத்தியில் இருந்த பழைய பகைகள் மாறும். பெண்கள் எந்த ஒரு காரியத்தைச் செய்யும் முன்பும் அதை எப்படி செய்வது என்ற மனத்தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும்.
மாணவர்கள் எதிர்காலக் கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள். அடுத்தவர் யோசனை களைக் கேட்டு தடுமாற்றம் அடையாமல் இருப்பது நல்லது.

(தொடரும்)

# திருமணத்தை எதிர்நோக்கியிருக்கும் பெண்களே!



பெண்ணைப் பெற்ற பெற்றோர் அவளை ஓர் ஆணிடம் கையளிக் கும் வரை தமது மகளுக்குப் பொருத்தமானவன் யார் என்று தேடிக்கொண்டே இருப்பார்கள். அலை அடித்துக்கொண்டுதான் இருக்கும். காற்று வீசிக் கொண்டுதான் இருக்கும். பெற்றோரும் வரன் தேடிக் கொண்டுதான் இருப்பார்கள். ஏனென்றால் தனித்து ஒரு ஆண் மகனால் இன்பமாக வாழ்ந்துவிட முடியாது. அதனால் பொருத்தம் தேடி இரு மனங்களைப் பொருத்திவிடுகின்றார்கள். ஆனால், தேடி ஆராய்ந்து, சேர்த்துவைக்கும் திருமணங்கள் சில ஆண்டுகளில் மனப்பொருத்தம் இன்றி ஒருவரை ஒருவர் குறை கூறிய வண்ணம் பிரிந்து விட நேர்கின்றன. காரணம் தான் என்ன? தேடிவைத்தல் நன்றா? அவர்கள் தேடிக்கொள்ளல் நன்றா? வாழ்க்கை என்பது ஒரே ஒருமுறைதான் . இதை ஆத்திகனும் நம்ப வேண்டும். நாத்திகனும் நம்ப வேண்டும். மறுபிறப்பு உண்டென்று நம்பும் ஆத்திகன் கூட நம்பவேண்டியது மறுபிறப்பில் அவன் சூழல் வேறு, சொந்தம் வேறு, வாழ்க்கை வேறு, ஏன், அவனே வேறு என்று. முற்பிறப்பு சிறிதளவு பற்றி கூட அவனால் புரிந்து கொள்ளமுடிவதில்லை. வரப்போகின்ற மறு பிறப்புக்காக புரிந்து கொள்ள வேண்டிய இந்தப்பிறப்பில் அனுபவிக்க வேண்டிய எத்தனையோ விடயங்களை இழந்து வாழ்வோர் பலர். இவ்வாறு இருக்கும்போது பிறந்த பிறப்பை மனிதன் புரிந்து நடந்து கொள்ள வாழ்க்கையைப் பூரணமாக வாழவேண்டும். அதில் பிரிவுகளோ இணைவுகளோ காரணத்தோடுதான் நடக்க வேண்டும்.
கலாசாரம் என்ற பெயரிலும், பிறர் எம்மைப்பற்றி என்ன நினைத்து விடுவார்கள் என்னும் தன்மான உணர்விலும், அந்தஸ்து வெறியிலும் இளைய தலைமுறைகளின் எதிர்கால வாழ்க்கையைச் சீரழிக்கும் எத்தனையோ பெற்றோர்கள் எம்மிடையே இருக்கின்றார்கள். எமது பிள்ளைகளின் குடும்ப வாழ்வல்லவா என்று நினைத்து அவர்கள் சந்தோசமே எமது சந்தோசம் என்று ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கின்ற பொழுதே பொருத்தமான கணவனைப் பெண்ணுக்கும், பொருத்தமான மனைவியை ஆணுக்கும் தெரிவு செய்ய முடியும்.
பொதுவாகவே பொருத்தம் பார்த்துத் தேர்ந்து செய்கின்ற திருமணங்கள், குடும்பங்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு செய்யப்படுகின்றன. இதில் பணம் என்பதை மீறி பண்பு குறித்துக் கவனித்தல் அவசியமாகின்றது. ஐந்து விரலும் ஒன்றாக இல்லாவிட்டாலும் ஒரு மரபணுவில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு அந்த மரபணுத் தாக்கம் நிச்சயம் இருக்கும். சகோதரர்களிடையே ஒற்றுமைப் போக்கு சிலவிடயங்களில் காணப்படும். அதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு இருக்கின்ற குணம் மற்றைய சகோதரர் சிலரிடமாவது இருக்க வேண்டும். முயற்சி இல்லாத சில சகோதரர்கள் இருந்தால் மற்றையவரிடமும் அந்தக் குணம் இருக்க சந்தர்ப்பம் இருக்கின்றது.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் வல்லவரே..!

கல்லில் சிலை வடிக்கும் சிற்பி ஒருவன் ஒரு தேவதையின் சிலையை வடித்துக் கொண்டிருந்தான். அற்புதமாக, தத்ரூப மாகத் தோற்றமளித்த அந்தச் சிலையை வடித்து முடித்த மறுகணமே ஒரு மின்னும் நேரத்தில் அது உயிர் பெற்றது. அந்தத் தேவதை மகிழ்ச்சி யுடன் சிற்பியின் கலைத் திறனைப் பாராட்டியதுடன், வேண்டிய வரம் ஒன்று கேட்கு மாறு சொன்னது. சிற்பிக்கு வல்லவர்களுக்கு வல்லவனாக வேண்டும் என்ற வெகுநாள் ஆசை. அவன் அதை அந் தத் தேவதையிடம் கூறினான். தேவதை சிரித் துக் கொண்டே "சிற்பியே! நன்கு சிந்தித்துத் தான் கேட்கிறாயா?" என்று கேட்டது. சிற்பி யும் மிகுந்த ஆவலுடன் "ஆம்!" என்றான்.

தேவதை "சரி! அடுத்த இரண்டு நாள் களுக்கு நீ எவரை அல்லது எதை வல்ல வன் என்று நினைக்கிறாயோ அதுவாகவே மாறிவிடுவாய்" என்று வரம் அளித்து விட்டு அதே மின்னல் வேகத்தில் மறுபடியும் சிலை வடிவுக்குப் போய் விட்டது,

சிற்பி திடீரென்று நிகழ்ந்த இந்த நிகழ்வை நம்புவதா வேண்டாமா என்று தீவிர மாகச் சிந்தித்துக்கொண்டே தனது வேலை யைத் தொடர்ந்தான். சூரியன் உச்சிக்கு வந்து தகித்துக் கொண்டிருந்தது. சிலை வடிக்கும் கருங்கற்பாறை கொதித்தது. கல்லைக் கொத்தும் உளி கொதித்தது. சிற்பியின் உடலெல்லாம் வியர்த்து வழிந் தது. சிற்பி "இந்தச் சூரியன் மிகச் சக்தி படைத் தவனாக இருக்கிறானே. எல்லாவற் றையும் ஆட்டிப் படைக்கிறானே! இவன் தான் மிக வல்லவனாக இருக்க வேண்டும்" என்று நினைத்தான். என்ன ஆச்சரியம்! உடனே அவன் தேவதை கொடுத்த வரத்தின்



சக்தியால் சூரியனாகவே மாறி விட்டான். சிறிது நேரம் உலகைச் சுற்றி வந்து தனது சக்தியால் ஆனந்தமாக கண்ணில் பட்ட எல்லாவற்றையும் தகிக்கச் செய்து மகிழ்ந்து கொண்டிருந்தான். ஒரு இடத்தில் மேகங் கள் சூழ்ந்திருந்தன. அவை சூரியனின் கதிர்களை மறைத்தன. ஆகவே அவை மறைத்த இடங்களை சூரியக் கதிர்கள் சென்றடைய முடியவில்லை. சூரியனாக இருந்த சிற்பி, தனது மிக உக்கிரமான கதிர்களை அந்த மேகங்கள் மேல் செலுத் திப் பார்த்தான். அந்தக் கருமேகக் கூட் டங்கள் அசைவதாக இல்லை. "என்ன... இந்த மேகக் கூட்டங்கள் சூரியனின் சக்தி மிக்க கதிர்களையே மறைக்கும் வல்லமை படைத்தவையாக இருக்கின்றனவே" என்று நினைத்தவுடன் அவன் அந்தக் கருமேகங் களாக மாறிவிட்டான். சிறிது நேரம் மகிழ்ச் சியாக சூரியக்கதிர்களை மறைத்துக் கொண்டு ஆனந்தப்பட்டுக் கொண்டிருந் தான். அப்போது பலமாகக் காற்றடித்தது. அந்தக் காற்று மேகக் கூட்டங்களை இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்தது. சிற்பி எவ்வளவு முயன்றும் காற்றின் வேகத் துக்கு எதிராக எதையும் செய்ய முடிய வில்லை. "சூரியனின் கதிர்களை மறைக் கும் மேகத்தையே செலுத்தும் காற்று எவ்வளவு வல்லமை படைத்ததாக இருக்க வேண்டும்" என்று நினைத்தான். அந்தக் கணமே அவன் காற்றாக மாறிவிட்டான். காற்று வடிவில் சிற்பி தென்றலாகவும், புயலாகவும் எண்ணப்படி மாறி மாறி உல கைக் கலக்கிக் கொண்டிருந்தான். மிகவும் வல்லமை படைத்தவனாகத் தன்னைப் பற்றி எண்ணி எண்ணி நினைத்த இடத் துக்கெல்லாம் சடுதியில் சென்று மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு முறை அப்படிக் கடும் புயலாக மாறிச் சென்று கொண்டிருந்த வழியை மறித்துக் கொண்டு, ஒரு நெடிதுயர்ந்த மலை நின்று கொண்டிருந்தது. எவ்வளவோ உக்கிரமாக முட்டி மோதிப் பார்த்தும் கடும் புயலாய் வடிவெடுத்திருந்த சிற்பியால் அந்த மலை யைக் கடந்து செல்ல முடியவில்லை. "அட.. இந்த மலைக்குக் கடும் புயலையும் மிஞ்சும் சக்தி இருப்பது முன்னமேயே நமக்குத் தெரி யாமல் போய் விட்டதே!"என்று நினைத்த மாத் திரம் அவன் ஒரு மலையாக மாறிவிட்டான். அப்போது மற்றொரு சிற்பி அந்த மலை மேல் மெதுவாக ஏறி வந்தான். அவன் ஒரு இடத்தில் உள்ள மலையின் பாறைகளைத் தேர்ந்தெடுத்து தனது உளியையும் சுத்தி யலையும் கொண்டு பாறையைப் பிளந்து சிலை வடிக்க ஆரம்பித்தான். மலை வடிவில் இருந்த சிற்பி "சக்தி வாய்ந்த மலையின் பாறைகளையே பிளக்கும் சிற்பிதான் மலையை விட வல்லவன்" என்று நினைத்தான். தேவதையின் வரம் மீதி இருக்கிறதே! அதனால் அப்படி நினைத்தவுடனேயே பழையபடி அவன் தனது சுய உருவை அடைந்து விட்டான். சுய உருவுக்கே திடீரென்று திரும்பி விட்ட அவனுக்கு இப்போது மூளைக்குள் ஏதோ பொறி தட்டியது போல் இருந்தது. நிதா னமாக அமர்ந்து, தனது அனுபவங்களை நினைத்துப் பார்த்தான். ஒவ்வொருவருக் கும் ஒரு தனித்துவமும், அதைச் சார்ந்து வல்லமைகளும் இருப்பதை அறிந்து கொண்டான். அனைவருக்கும் வல்லவ னாக விளங்க வேண்டும் என்ற நினைப் பைக் கை விட்டான். தனது வல்லமை களை முடிந்த வரை பெருக்கிக் கொண்டு அவற் றின் மூலம் உலகுக்கு உவப்பாக விளங்கு வதே சிறந்தது என்று நினைக்க ஆரம் பித்தான்.

தேவதை அவன்முன் திரும்பவும் தோன்றி அவனுக்கு நிறையப் பரிசுகளை மகிழ்ச்சியுடன் வழங்கியது.



சிறுவர், இளவல்கள் வட்டம் பகுதிகளுக்கான கதை, கவிதை, பல்சுவைத் தகவல் கள் குறித்த உங்களது ஆக்கங்களை இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். சிறப் பான ஆக்கங்களுக்குப் பரிசுகளும் உண்டு.




# வாழ்க்கையின் வெற்றிக்கு எண்ணங்கள் ஒருமைப்படட்டும்

(நேற்றைய தொடர்ச்சி)

வாழ்க்கையின் வெற்றிக்கு எண்ணங் கள் ஒருமைப்பட வேண்டும் என்பது குறித்து முன்னைய பகுதியில் பார்த் தோம். அவை குறித்து இன்றைய பகுதி யில் மேற்கொண்டும் பார்ப்போம்.

குறிக்கோளை நடைமுறைப்படுத்த வேண் டுமானால், முயற்சி என்பது முழுமன திலும் நிறைந்திருக்க வேண்டும். முயற் சியுடையார் இகழ்ச்சியடையார் "முயற்சி திருவினையாக்கும்" போன்ற பழ மொழி களை நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், சந்தர்ப்பம் சூழ்நிலை சரியான முறையில் அமையாதுவிட்டால், எப்படி முயன்றாலும் "சாண் ஏற முழம் சறுக்குவது" போலவே தான் அமையும். எனவே சந்தர்ப்பம் சூழ்நிலையைச் சரியான முறையில் அமைத்துக் கொள்வது அவரவர் கடமை யாகும். சூழ்நிலையை மாற்றியமைப் பதுவும் முயற்சியின் ஒரு வடிவமாகவே கருதப்படுகின்றது. சூழ்நிலையைச் சாதக மாக்கி, சாதிக்க நினைக்கும் காரியத்தில் முழு ஈடுபாட்டுடன் முன்னேற வேண்டும். மனிதப் பரிணாமக்கோட்பாட்டின் தந்தை சார்ள்ஸ் டார்வின், தான் வாழ்ந்த சூழ லைத் தனது ஆராய்ச்சிக்கு ஏற்ப மாற் றியமைத்தார். புழுவோடும் பூச்சிகளோ டும் தனது வாழ்நாளைக் கழித்தார்.



சூழ்நிலையில் பங்கம் ஏற்படுகின்றபோது விதியை நோகின்றார்கள். அறிவாளிக்கு மதி பெரிது. முட்டாளுக்கு விதி பெரிது. விதி என்று எண்ணுகின்ற முட்டாள் கூடப் பிரார்த்தனை மூலம் "விதியை மதியால் வெல்லலாம்" என்று எண்ணுகின்றபோது பிரார்த்தனை முயற்சிக்குத் துணை செய்கின்றது. தினமும் ஒரு குறிக்கோளை மனதில் வைத்துப் பிரார்த்தனை செய்கின்றபோது மூளை, அதனை நிமிடந்தோறும் ஏற்று குறிக் கோளை அடைவதற்கான வழிவகைகளை அடைவதற்கு ஆயத்தங்களைச் செய்யும். எனவே பிரார்த்தனை, வெற்றிக்கான வழிகளைக் காட்டி விடும். இத்தனை யும் சாதகமாக அமை கின்ற போது உடல் நிலையை ஓரங்கட்டி விட்டால், உடல் ஆரோக்கியம் குன்றி, உடலும் உள்ளமும் செயலிழந்து போகும். எமது பழக்க வழக் கங்கள்உடல்ஆரோக் கியத்தில் செல்வாக் குச் செலுத்துகின் றன. கெட்ட பழக்கங் களுக்கு அடிமையா கின்றபோது ஆரோக்கியமும் குன் றுகின்றது. எடுக்கின்ற முயற்சியில் முழுக் கவனமும் செலுத்த முடியாமல் போகின்றது. எண்ணங்கள் சிதறடிக்கப்படுகின்றன. வெற்றி மூழ்கடிக்கப்படுகின்றது. எனவே நல்ல பழக்கவழக்கங்களை கைக்கொள் ளும்போது கொண்ட இலட்சியத்தில் வெற்றி காணலாம். இதைவிட எம்மை அறியாமலே எமக்கு ஏற்படுகின்ற நோய்கள்கூட வெற் றிப்பாதையில் தடைக் கல்லாக அமை கின்றன. அதற்கு மனம் என்ற அங்கு சத்தை ஆளுகின்ற சக்தியை நாங்கள் பெற் றுக் கொள்ள வேண்டும். கணனி உலகில் அப்பிள் நிறுவனத்தை உருவாக்கி குறுகிய காலப் பகுதியில் உல கப்பிரசித்தி பெற்ற ஸ்ரீவ் ஜாப்ஸ் தனது உடல்நிலை யைக் கவனத்தில் கொள்ளாத கார ணத்தினால், வெற்றிப்பாதையின் இடை யிலேயே வாழ்க்கையை இழந்தார். உலகம் ஒப்பற்ற ஒரு விஞ்ஞானியை இழந்தது. எனவே கண்ணுங் கருத்தும் வெற்றியை நோக்கியிருக் கும்போது, சுகதேகியாக வாழ வேண்டும் என்ற எண்ணமும் மனதில் மேலோங்கி நிற்க வேண்டும்.

எனவே இலக்கைத் தெரிவுசெய்ய வேண் டும். அதன் முக்கியத்துவத்தை அறிய வேண்டும். அந்த இலக்கை அடைய உறுதியாக இருக்க வேண்டும். அந்த இலக்கை அடைவதற்கான வரை படத்தை மூளையில் வரைந்து வைத்திருக்க வேண்டும். அதில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். நம்பிக்கையில் சூழ்நிலை, பிரார்த்தனை, உடல்நிலை, முயற்சி போன்றவற்றை தெளிவான ஒழுங்கு படுத்தலுக்குள் கொண்டுவந்து முழுமன தையும் எமது இலக்கினுள் ஒருமுகப் படுத்தும்போது வாழ்க்கையில் பூரண மான வெற்றியை அடையலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.22
இளங்கலைஞர் மன்றத்தில் விஜயதசமியும் வித்தியாரம்பமும் இன்று வியாழக்கிழமை பி.ப 3.30 மணிக்கு மன்றக் கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த மன்றம் நடத்தும் வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், வீணை மற்றும் பரதநாட்டிய வகுப்புக்களில் புதிதாகச் சேர விரும்புபவர்கள் நாளை பி.ப 3.30 மணிக்கு சமுகம்தந்து பதிவுகளை மேற்கொண்ட பின்னர் நாள் வகுப்புக்களில் கலந்து கொள்ளலாம் என மன்ற நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ற-ரி6)

## தேவார பண்ணிசை வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக்.22
அகில இலங்கை திருமுறை மன்றம் யாழ்.குடாநாட்டில் ஆலயங்கள், பாடசாலைகளில் நடத்தி வரும் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்புக்களின் விஜயதசமி நாள் வகுப்புக்கள் இன்று வியாழக்கிழமை பி.ப. 3 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்ப் பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் 4.15 மணி முதல் யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.
இந்தப் பயிற்சி வகுப்புக்களை கலாபூஷணம், துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்திகள் நடத்தி வருகின்றார்.
இந்த வகுப்புக்களில் ஆண், பெண் இருபாலாரும், புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ற-ரி6)

## வாசிப்பு மாத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 22
ஊர்காவற்றுறை பிரதேச சபையினரின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன.
அனலைதீவு பொது நூலக மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களை உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறும் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் நூலகத்தினர் தெரிவித்துள்ளனர்.
'இயற்கையோடு இணைந்து வாசிப்போம்' எனும் தொனிப் பொருளிலான சிரமதானமும் மரநடுகையும் பி.ப. 3 மணிக்கு பொது நூலக சூழலில் நடைபெறவுள்ளதால் ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறும் அனலைதீவு பொது நூலகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

## மகிசாசுர சம்ஹாரம்

யாழ்ப்பாணம், ஒக், 22
வண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் மகிசாசுர சம்ஹார உற்சவம் இன்று நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி. காலை 9 மணிக்கு விசேட பூசைகளுடன் அம்பாள் வசந்த மண்டபத்துக்கு எழுந்தருளவுள்ளார். மாலை 4.45 மணிக்கு மகிசாசுர வர்த்தனி சிங்க ரதத்தில் வீதியுலா வந்து மகிசாசுர சம்ஹாரம் நடைபெறவுள்ளது. (ற-ரி5)

# இன்னல்கள் நிறைந்த வேளைகளிலும் குரல் கொடுத்தது இந்து சமயப் பேரவை

### அதன் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
இன்னல்கள் நிறைந்த வேளையில் அனைத்து இந்து நிறுவனங்களும் மௌனம் சாதித்தபோது துணிந்த நின்று இந்துக்களின் நலனுக்காக குரல் கொடுத்த பெருமை இந்து சமயப் பேரவையையே சாரும். இதனை எவரும் மறுக்கமாட்டார்கள் - இவ்வாறு தெரிவித்தார் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன்.
இந்து சமயப் பேரவைத் தலைமைச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்து சமயப் பேரவையின் நிர்வாக சபைக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
போர் மேகங்கள் சூழ்ந்து இருண்ட யுகமாக இருந்தபோது இந்து சமயப் பேரவை ஆற்றிய பணியை எவரும் மறக்க மாட்டார்கள். ஆலயங்களில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆற்றல் கொண்ட ஒரே அமைப்பு இந்து சமயப் பேரவை ஆகும். ஆலயங்களை நிர்வகிப்பவர்களையும் பூசிப்பவர்களையும் ஆற்றல் ரீதியாக மேம்பாடடையச் செய்வதற்கான பல்வேறுபட்ட திட்டங்களைச் செய்துள்ளோம். எனினும் இன்று இவர்களை சரியான முறையில் நெறிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தற்காலத்தில் ஆலயங்களில் இருந்து பலவேறுபட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன அவற்றில் சிலவற்றை நாம் தீர்த்து வைத்துள்ளோம். சிலவற்றை நீதிமன்றங்கள் ஊடாக தீர்ப்பதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். அனைவரும் மனதை ஒரு நிலைப்படுத்துவதற்காக ஆலயத் துக்கு வரவேண்டும். ஆலயப் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்க்கவே விரும்புகின்றோம். எனவே, பிரச்சினைகள் தொடர்பில் பல சாஸ்திர நூல்களை ஆராய்ந்து, தீர்வுகளை முன்வைத்து வருகின்றோம். எனவே, இதற்காக உடன்பட்டு செயற்பட வேண்டியது அனைவருடைய தலையாய பொறுப்பாகும்.- என்றார்.
இந்தக் கூட்டத்தில் பேராசிரியர் பா. கோபாலகிருஷ்ணர் ஐயர், பேராசிரியர் கா.குகபாலன், கு.சர வணபவானந்தன், த.சற்குண ராசா எனப் பலர் கலந்துகொண்டனர் என வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி5)

## தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.22
சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வகையிலே கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையம் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறிகளை இந்த மாத இறுதிப்பகுதியில் ஆரம்பம்பிக்கவுள்ளது என்றும்- இப் பயிற்சி நெறியில் பங்குபெற விரும்பும் பயனாளிகளை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்பாக நேரடியாக அல்லது 021 226 4958 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும், கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.ரஜீவ் கேட்டுக் கொண்டுள்ளார்.
கணினி வலையமைப்பு பயிற்சி நெறி,கணினி இணையப்பக்கம், பழம், மரக்கறி சார் உற்பத்திப் பொருள்கள் மற்றும் காளான் உற்பத்தி போன்ற தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ற-ரி2)

## வித்தியாரம்ப நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஒக்.22
நவராத்திரி வாரத்தின் இறுதிநாளான விஜய தசமியை முன்னிட்டு பாடசாலைகள் முன்பள்ளிகள் பொது அமைப்புக்கள் ஆலயங்கள் நூல் நிலையங்கள் போன்றவற்றில் இன்று ஏடு தொடக்கல் என்னும் வித்தியாரம்பம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆலயங்கள் பலவற்றில் மானம்பூ நிகழ்வு இடம்பெறும். கேதார கௌரி விரத நாள் ஆரம்ப நிகழ்வுகள் பல இந்து ஆலயங்களில் இடம் பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

* * *

வவுனியா, ஒக்.22
வவுனியா கலைவெளிப் பட்டறையின் அனுசரணையில் "பத்மாலயம் கலைக்கல்லூரி " நடத்தும் விஜயதசமி நிகழ்வும் , வித்தியாரம்பமும் இன்று மாலை 4 மணி தொடக்கம் 6 மணி வரை தேக்கவத்தையில் அமைந்துள்ள கலைக்கூட மண்டபத்தில் முன்னாள் இசைஆசிரியை நயினை ப. யோக லட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இசை ஆசிரியரும், இந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழக கலாநிதிப் பட்ட ஆய்வாளருமான "ஈழத்துச் சீர்காழி இன்னிசை வேந்தன் " சிவமைந்தன் பத்மநாதனின் வித்தியாரம்ப இசை வகுப்புக்கள் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன . ஆர்வமுள்ள மாணவர்கள் 0750315747 என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (ற)

## பொது அமைப்புப் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார் விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், ஒக்.22
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார்.
மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சனசமூக நிலையங்கள்- கிராம அபிவிருத்திச் சங்கங்கள்- மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு பிரதிநிதியையாவது கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. சனசமூக அபிவிருத்தி அலுவலர் கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோரையும் கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## கணித பாட செயலமர்வு

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீடம் மூன்றாம்வருட மாணவர்களால் மக்கள் தொடர்பாடல் என்னும் பாடத்திட்டத்துக்கு அமைவாக ஏற்பாடு செய்யப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான கணித பாட செயலமர்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. திரு நெல்வேலி வித்தியா விருத்தி சங்கத்தில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் 35 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ற-17)

## வெள்ளைப் பிரம்பு தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.22
வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் சர்வதேச வெள்ளைப் பிரம்புதின நிகழ்வு அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் உப தலைவர் எ. செந்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.
பிரதம விருந்தினராக கைதடி நவீல்ட் பாடசாலையின் விரிவுரையாளர் திருமதி தி. நந்தினிதேவி கலந்துகொண்டார். வெள்ளைப் பிரம்பு தினம் தொடர்பான விழிப்புணர்வு உரைகள் பிரதம விருந்தினராலும், லயன் நற்குணலிங்கத்தினாலும் நிகழ்த்தப்பட்டன.
பாடசாலையின் உப அதிபர் முன்னிலையில் பிரதம விருந்தினரால் மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ற-35)

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக், 22
கல்லியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க முன்பள்ளியின் வாணி விழா நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு முன்பள்ளியில் நடைபெறவுள்ளன.
ஞானபாஸ்கரோதய சங்கத்தின் தலைவர் இ.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தியர் இ.சிவசங்கரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். சின்மயாமிஷன் வதிவிட ஆசிரியர் பிரமச்சாரிய யாக்ரத சைதன்யாவும், திருநெல்வேலி சத்திய சாயி சேவாநிலைய பொறுப்பாளர் திருமதி கலாவதி மேகநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர் என முன்பள்ளி சமுகத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ரி5)

# மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டுப் போட்டிகள் விரைவில்

யாழ்ப்பாணம், ஒக்.22
சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தும் நோக்குடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப்போட்டிகளை நடத்தவுள்ளது.
பாடசாலை மாணவர்கள் தமது ஆக்கங்களை சொந்த ஆக்கம் என்பதை அதிபர் மூலமாகவும், பொதுமக்களாயின் கிராம அலுவலர் அல்லது சமாதான நீதிவான் மூலமாகவும் உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும்- ஆக்கங்கள் நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வளநிலையம், 1166/15 அருளம்பலம் லேன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் செயலாளர் ரி.ஜசிந்தன் அறிவித்துள்ளார்.
கட்டுரைப் போட்டியின் தலைப்புக்களாக, மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகத்தின் பார்வை, மாற்றுத் திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான பெறுமானங்களும், வாழ்வின் உயர்வுக்கு ஊனம் தடையல்ல என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் எனின் 250 - 300 சொற்கள் கொண்டதாகவும், பொதுமக்கள் எனின் 300 - 350 சொற்கள் கொண்டதாகவும் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.
கவிதைப் போட்டி சிறுகதைப் போட்டி, ஓவியப் போட்டி என்பவை திறனாளிகளின் வாழ்வியலைக் கருப்பொருளாகக் கொண்டு அமைய வேண்டும் எனவும்- கவிதைகள் பாடசாலை மாணவர்கள் ஆயின் 15 - 20 வரிகளைக் கொண்டதாகவும், பொதுமக்கள் ஆயின் 25 - 30 வரிகளைக் கொண்டதாகவும் கவிதைகளை அமைத்தல் வேண்டும்.
ஓவியப் போட்டிக்குரிய ஓவியங்களை ஏ - 4 தாளில் வரைதல் வேண்டும் எனவும்- ஆக்கங்களை ஏ - 4 தாளில் கணினியில் தட்டச்சுச் செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தினால் எழுதியோ அனுப்பலாம் எனவும்- ஒவ்வொரு போட்டியிலும் 3 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தரமான ஆக்கங்கள் 'வலு' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும் எனவும், முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பவற்றைத் தெளிவாக எழுதி ஆக்கங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் எனவும்- வெற்றியாளர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வின்போது வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி6)

## நடமாடும் சேவையும் புத்தகக் கண்காட்சியும்

சாவகச்சேரி,ஒக்.22
சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகத்தால் இந்த வருட தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கிராமப் புற பொது அமைப்புக்களின் கட்டடங்களில் நடமாடும் நூலக சேவையும், புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்படவுள்ளன. அத்துடன் தேசிய நூலக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள், வாசகர்கள், முன்பள்ளி சிறார்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவு வேளையில் நடமாடும் கால்நடைகளால் விபத்துக்கள்

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை


யாழ்ப்பாணம், ஒக்.22

கிளிநொச்சி மாவட்டத்தில் இரவு வேளைகளில் நடமாடும் கால் நடைகளுடன் மோதுண்டு கடந்த 3 தினங்களில் மட்டும் 5 பேர் விபத் துக் குள்ளாகியுள்ளனர். அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நால்வர் படுகாயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் புறநகர் பகுதிகளில் உள்ள கால் நடை வளர்ப்போர் இரவு நேரங்களில் தமது கால்நடைகளை பட்டிகளில் அடைக்காது வீதிகளில் அலைய விடுவதால் அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்களால் கடந்த 3 தினங்களில் மட்டும் 4 விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. ஒருவர் உயிர் இழந்துள்ளார். ஒரு வரின், சிறுநீரகம் முழுமையாகச் சேதமடைந்துள்ளது. மூவர் காய மடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனவே கால் நடைகளை கட்டுப் படுத்துவதற்கு உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும் என மக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத் துள்ளனர். (ற-10)



ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு கணித பாடத்தில் தோற்றவுள்ள பறகஹதெனிய தேசிய பாடசாலை மாணவ, மாணவிகளுக்குக் கணிதப் பரீட்சையில் இலகுவாக வெற்றியடைதல் தொடர்பான வலுவூட்டல் கருத்தரங்கு பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மாவனல்லை நியுமென் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளரும் மற்றும் இரு கைகளையும் இழந்த விசேட தேவையுடையவருமான கலாநிதி அல்ஹாஜ் முஹமட் உசைன் பிரதான வளவாளராகக் கலந்து கொண்டார். (ற)

# மன்னாரில் பெரும் நடமாடும் சேவை

மானிப்பாய், ஒக்.22

எதிர்வரும்30 ஆம் திகதி மன்னார் மாவட்டத்துக்கு உட்பட்ட தட்சணா மருதமடு பிரதேசத்தில் நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவையில் வடமாகாணத்தில் உள்ள அனைத்துத் திணைக்களங்களும் ஒருங்கிணைந்த வகையில் மக் களுக்கான முழுச்சேவையில் ஈடுபடவுள்ளன.

மேற்படி நடமாடும் சேவை குறித்து வடமாகாணத்தில் உள்ள அனைத் துத் துறைசார்ந்த திணைக்களத் தலைவர்களுக்கான விளக் கத்தை நேற்றுமுன்தினம் வட மாகாண முதல்வர் க.வி.விக் கினேஸ்வரன் வழங்கியிருந்தார்.

தட்சணாமருதமடு பிரதேசத்தில் உள்ள மக்களுக்கான நடமாடும் சேவை சிறப்புற இடம்பெற வட மாகாண வாணிபத்துறை அமைச் சர் பா.டெனீஸ்வரன் சகல ஒருங் கிணைப்புக்களையும் கடந்த இரண்டு வாரகாலமாக முன் னெடுத்து வருகிறார்.

எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கில் உள்ள முக்கியமான 34 திணைக் களங்கள் இதில் பங்குகொண்டு சேவை வழங்கவுள்ளன.

விளக்கமளிக்கும் இந்த நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன் கலந்துகொண்டு விளக்கமளித்தார்.

வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வாணிபத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன், சுகாதார அமைச்சர் ப.சத்திய லிங்கம் உட்பட வடக்கின் சகல திணைக்களங்களின் தலைவர்க ளும் இதில் கலந்துகொண்டு தமது கருத்துக்களை பரிமாறினர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி இடம் பெறவுள்ள நடமாடும் சேவையில் அனைத்து மக்களும் பங்கு கொண்டு பூரண சேவையைப் பெற் றிட அழைப்பு விடுத்துள்ளார் வட மாகாண வாணிபத்துறை அமைச் சர் பா.டெனீஸ்வரன். (ற-50)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைதானவரின் ஒப்புதல் வாக்குமூலச் சாட்சியம் நிராகரிப்பு

## மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில்

அம்பாறை, ஒக்.22

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் குறித்த நபரின் ஒப்புதல் குற்ற வாக்கு மூலத்தை சாட்சியமாக ஏற்கு மாறு செய்யப்பட்ட விண்ணப் பத்தை மட்டக்களப்பு மேல் நீதி மன்றம் நிராகரித்துள்ளது.

குறித்த வழக்கில் வழக்குத் தொடு நர் தரப்பால் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே சாட்சிய மாக முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், மட்டக்களப்பு மேல் நீதி மன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வ லிங்கம் விசாரணையின்போது எதிரியின்ஒப்புதல்வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்க முடியாதென நிராகரித்தார்.

அத்துடன் வழக்குத் தொடுநர் தரப் பின் கோரிக்கைக்கு அமைய அடுத்த நடவடிக்கையின் பொருட்டு மற்றொரு தினத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தம்பிலுவில் மகாவித்தியாலய வீதியைச் சேர்ந்த இராசலிங்கம் பார்த்தீபன் அல்லது செந்தூர நாதன் (அப்போது வயது - 28) எனும் இளைஞன் மீது 1999 ஒக்ரோபர் மாதகாலப் பகுதியில் அரச விரோத தமிழீழ விடுத லைப்புலிகள் இயக்க உறுப் பினராக இருந்து ஆயுதப்பயிற்சி, போர் பயிற்சிபெற்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட வேண் டிய குற்றம் புரிந்ததாக மட்டக் களப்பு மேல்நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

சட்டமா அதிபரால் 2013 இல் தாக் கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் எதிரியின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் மட்டுமே சாட்சியமாக முன் வைக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது எதிரி குற்றச்சாட்டை மறுத்ததுடன் அவரது ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்காது தான் சுற்றவாளியென வும் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை மட்டக் களப்பு மேல்நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ் வலிங்கம் முன்னிலையில் நடை பெற்றபோது குறித்த ஒப்புதல் வாக்குமூலம் (பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில்) அளிப்ப தற்கான உரிய மனநிலையில் எதிரி இருந்தாரா என்பது மன்றில் நிரூபிக்கப்பட வில்லை என்றும்- அச்சுறுத்தல் சாத்தியப்பாட்டை நிராகரிக்க முடியா தென்றும் வாக் குறுதி தூண்டுத லடிப் படையில் ஒப்புதல் வாக்கு மூலம் பெறப் பட்டிருக்கலாமென்றும்- நீதிபதி தெரிவித்திருந்தார்.

எனவே ,எதிரியின் ஒப்புதல் வாக்கு மூலத்தைச் சாட்சியமாக ஏற் குமாறு செய்யப்பட்ட விண்ணப்பத்தை நிராகரிப்பதாகத் தெரிவித்த நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், போது மான சாட்சியங்களை வழக்கு தொடுநர் தரப்பு முன்வைக்க வில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் வழக்குத் தொடு நர் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக் கையை ஏற்று - அடுத்த நடவடிக் கையின் பொருட்டு மற்றொரு தினத்துக்கு வழக்கு ஒத்திவைக்கப் பட்டது. (ற-30)

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் செல்வநாயகம்

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும், இல. 90A கூமாங்குளம் வீதி, உக்கிளாங்குளம், வவுனியாவை வதி விடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் செல்வநாயகம் 21.10. 2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கௌரீஸ்வரி, கிருபாகரன் (லண்டன்), பிரபாகரன்(லண்டன்),சிவாகரன் (லண்டன்), ஜெயாகரன் (லண்டன்), சிவரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதியழகன், ஸ்ரீதேவி (லண்டன்), கலைச்செல்வி (லண்டன்), நந்தினி (லண்டன்), கல்பனா (லண்டன்), சிவஞான மூர்த்தி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், எல்லாளன், ஐங்கரன், அரிகரன், அட்ஷயன், அன்பிதா, ஹரிராம் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கந்தசாமி, நாகம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதர னும்,சிவபாக்கியம், பூபாலபிள்ளை (சமாதான நீதிவான்- கூமாங்குளம்), பூமணி, புண்ணியமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்- வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற கதிரவேலு, ஞானேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.10.2015) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கூமாங்குளம் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

90Aகூமாங்குளம் வீதி,
உக்கிளாங்குளம்,
வவுனியா.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(65256)(11.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெற்பயிரோடு மண்ணை வெட்டி வீதி திருத்தம்

## மறவன்புலோ விவசாயிகள் கவலை

சாவகச்சேரி, ஒக்.22

முளை விட்டிருந்த நெற்பயிர்களுடன் மண்ணை வெட்டி வீதியைச் செப்பனிட்டமை குறித்து மறவன்புலோ மக்கள் கவலை தெரிவித்தனர்.

மறவன்புலோ மணற்காடு வீதி தார் வீதியாகக் காணப்படுகின்றது. இந் நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அங்கு வந்த இருவர் வீதியின் இருபுறமும் உள்ள வயல்களிலிருந்து மண்ணை வெட்டி வீதிக்கு அணைத்து செப்பனிட்டுள்ளனர்.

வயல்களில் வயல் உரிமையாளர்களால் நெல் விதைக்கப்பட்டு பயிர்கள் முளைத்துள்ள நிலையில் மண் வெட்டியமை அங்குள்ள நெற் செய்கையாளர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இவர்கள் அந்தப் பிரிவைச் சேராதவர்கள் என்பதால் அவர்களிடம் இது தொடர்பாக விசாரித்த போது வீதி சேதமடையாமல் இருப்பதற்காக கமக்கார அமைப்பின் வேண்டுகோளின் பிரகாரம் நிறுவனமொன்றால் அனுப்பப்பட்டவர்கள் எனத் தெரியவந்தது என்று விவசாயிகள் தெரிவித்தனர். கமக்காரர்களின் நலனில் அக்கறையுள்ள கமக்கார அமைப் பின் செயல் குறித்தும் அந்தப் பகுதி நெற் செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். (ஈ-9)

# வீதியில் சென்றோரை தீண்டியது பாம்பு

சாவகச்சேரி, ஒக்.22

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வீதியில் நடந்து சென்ற இருவர் பாம்பால் கடியுண்டனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பாம்பால் கடியுண்டவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மட்டுவில் தெற்கைச் சேர்ந்த மருதவேள் ஆறுமுகம் (வயது- 65) மற்றும் பூநகரி கௌதாரிமுனையைச் சேர்ந்த பாவிலு ஜெபநேசன் (வயது - 50) ஆகிய இருவருமே பாம்பால் கடியுண்டவர்களாவர். (ஈ-9)

# புலமைப் பரிசிலில் சித்திபெற்ற மாணவரை கௌரவிக்கும் நிகழ்வு

சாவகச்சேரி, ஒக்.22

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையினர் 2014 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற வங்கியில் கணக்கு வைத்துள்ள மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

கிளை முகாமையாளர் அ.கங்காதரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் வீ.வீ.கிறைசனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரும், கௌரவ விருந்தினர்களாக வங்கியின் சாவகச்சேரி கிளையின் முன்னாள் முகாமையாளர் சீ.என்.ஜெனநாதன், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஈ-9)

# தேசிய வாசிப்பு மாதத்தில் சிறந்த சேவையை வழங்குக

## தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை அறிவுறுத்து

சாவகச்சேரி, ஒக்.22

ஒக்ரோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதமாக அரசால் பிர கடனப்பட்டுள்ளதால்வாசகர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குமாறு தேசிய நூலக ஆவ ணவாக்கல் சேவைகள் சபையால் நூலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடத்து வாசிப்பு மாதத்திலும் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்கள் தொடர்பான விவரங்களைத் தமக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவித்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் ஒக்ரோபர் மாதம் வாசிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த மாதத்தில் வாசகர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நூலகங்களுக்கு தேசிய நிலையில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது. (ஈ-9)

# விசேட தேவையுடையோருக்கு உதவுவது குறித்த கலந்துரையாடல்

மானிப்பாய், ஒக்.22

மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவையுடையோருக்கு அரச திணைக்களங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், மேலதிகாரிகள் எவ்வாறு உதவலாம் என்பது தொடர்பான இரு நாள் விசேட கருத்தரங்கு யாழ்.ரில்ஹோ விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உலக தரிசனத்தின் செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.ஜெயால்ட் அன்ரனி,நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எப்.அலெக்ஸ் ரொச் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் வடமாகாண மாற் றுத்திறனாளிகள் நிறுவனத் தலைவர் வெ.சுப்பிரமணியம் விசேட வளவாளராக கலந்துகொண்டு சிறப்பு விரிவுரையாற்றினார்.

குறிப்பாக கிராமிய மட்ட சுகாதார குடிதண்ணீர் மற்றும் நலத்திட்டத்தின் ஊடாக மாற்றுத் திறனாளிகள் மற்றும் விசேட தேவை உடையவர்களுக்கு எவ்வாறு உதவுவது என்பது தொடர்பிலும் அதில் அரச அலுவலர்கள் எவ்வாறு தங்கள் பங்களிப்பை வழங்கலாம் எனவும் அவர் விளக்கமளித்தார்.

அத்துடன் விசேட தேவை உடையவர்களுக்கு அரசால் கிடைக்கக் கூடிய திட்டங்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில் சங்கானை பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி அலுவலர் கள். கிராம அதிகாரி கள். பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், சமூக மட்ட அலுவலர்கள் பெருமளவில்கலந்து கொண்டனர். (ஈ-50)

# ஸ்கான் கிளினிக் 26ஆம் திகதி

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி நோயாளர்களுக்கு ஸ்கான் கினிளிக் நடைபெறும் என்றுவைத்தியசாலை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கான் வைத்திய நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து வருகை தரவுள்ளதால் ஏற்கனவே பதிவு செய்த நோயாளர்களும், தமது நோயை ஸ்கான் செய்ய விரும்பும் நோயாளர்களும் வருகை தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஈ-9)


பல்கலைக் கழகத்திற்கு அருகில்
அறைகள் வாடகைக்கு
தொடர்பு :077 609 0837

**தேவை**

கட்டட ஒப்பந்தக்காரருக்கு மேசன், கூலி வேலையாள்கள் தேவை.
076 544 7493

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691
(62359)

**மண் அகழ்வு (பெக்கோ) இயந்திரம் வாடகைக்குத் தேவை**

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு உட்பட்ட கடல் சார் எல்லைப் பரப்பிற்கு உட்பட்ட கடல் சார் வேலைத்திட்டங்கள் செய்வதற்கு மணித்தியால அடிப்படையில் ஒப்பந்த வேலை செய்வதற்கு மண் அகழ்வு இயந்திரம் தேவை.
தொடர்புகளுக்கு: 077 465 9877
021 321 7575
முகவரி: தலைவர்,பொது முகாமையாளர், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,ஜெயபுரம்,பூநகரி

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த புனர்பூசம் நட்சத்திரம் 4 ஆம் பாதம் உள்ள மணமகளுக்கு அரச/ தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மணமகன் தேவை.
தொடர்பு : 077 7435 915

**வேலையாள்கள் தேவை**

கொழும்பு- யாழ்ப்பாணம் பாரவூர்தி (லொறி) உதவியாளர் தேவை
தொடர்பு : 021 492 3724

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பாக்கியராஜா பிரதீபன்
(வட பிராந்தியசிரேஷ்ட இணைப்பதிகாரி - இலங்கை சமூக பாதுகாப்பு சபை)
யாழ் மாவட்டத்தின் இணைப்பதிகாரியாகவும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் பதில் இணைப்பதிகாரியாகவும் கடமையாற்றி தற்போது வட பிராந்திய சிரேஷ்ட இணைப்பதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவரது பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

Sri Lankan – German Development Cooperation
Ministry of Skills Development and Vocational Training
german cooperation
Vocational Training in the North and East of Sri Lanka
(VTN)
போதனாசிரியர்-வெதுப்பகத்துறை

ஜேர்மன் நாட்டின் அபிவிருத்திக்கான கூட்டுறவு GIZ (Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit) ஆனது தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகார சபை (NAITA), இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA), வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் (ORHAN) மற்றும் Don-Bosco அமைப்பு என்பவற்றுடன் இணைந்து முன்னெடுக்கும் திட்டத்தினூடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கேள்வி மிக்க தொழிற்பயிற்சிகளை வழங்குதவற்காக செயற்பட்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக கிளிநொச்சி (பூநகரி) மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள Don-Bosco அமைப்பின் தொழிற்பயிற்சி நிலையங்களில் வெதுப்பக துறைசார் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இக்கற்கை நெறிக்கான போதனாசிரியர் பதவிக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் தகமைகள்

- க.பொ.த(சா/த) இல் 6 பாடங்களில் சித்தி
- கணனி தொடர்பான அறிவு (Microsoft office , Internet, Email)

தொழில் தொடர்பான தகமைகள்

- NVQ-4 தரத்திற்கு குறையாத வெதுப்பகதுறைக்கான தொழிற்பயிற்சி சான்றிதழ்
அல்லது
- வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய வெதுப்பகதுறை சார் கற்கைசான்றிதழ்கள்
மற்றும்
- குறைந்தது வெதுப்பகத்துறையில் ஒரு வருட அனுபவம்.
- வயதெல்லை: 18 வயதிற்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்

தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக்கோவையையும் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளையும் எதிர்வரும் 05.11.2015 முன்பு கிடைக்ககூடியதாக இல.33, 4th ஒழுங்கை, கனகபுரம், உதயநகர் மேற்கு, கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்

Don Bosco Vocational training institute
KFW
giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலை வகுப்புக்குஅனுமதி

யாழ்ப்பாணம், ஒக்.22
விஜயதசமி தினத்தை முன் னிட்டு இன்று வியாழக் கிழமை காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் தனது யாழ். கிளையினூடாக கலை வகுப்புக்களுக்கான அனு மதியை வழங்க உள்ளது. சங்கீதம், பண்ணிசை, நடனம், மிருதங்கம், வய லின், யோகாசனம், தியா னம் ஆகிய பயிற்சி நெறி களுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)


முதலாம் ஆண்டு நினைவேந்தல்
ஜெனார்த்தனன் அர்ச்சுதன்
திதி: புரட்டாதிபூர்வபக்கதசமி
எமெக்கென்ன குறை ஐயா ஏகவாரிசு நீ
எங்களைக் காப்பா யென்று எண்ணியே
நாமிருக்க பாதியிலே தவிக்கவிட்டு பரலோகம்
சென்றதேனோ ஆவி துடிக்குதையா
அங்குன்னைக் காணும் வரை
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
அம்மா, அப்பா
மண் மகிழ 23.07.1993 கண் நெகிழ 03.10.2014





10ஆம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி
ஞானமணி மகாதேவன்
மலர்வு 16.04.1938 உதிர்வு 09.10.2005
எம் குடும்ப பாசவிளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாய்
எம்மோடு வாழ்ந்து
எமையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாள்களில்லையம்மா
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு.





முன்றாம் ஆண்டு நினைவலைகள்
இகம் 24 - 01 - 1959
பரம் 25 - 10 - 2012
தவராசா தவராணி
காற்றிலே அணைந்திட்ட கற்பூரதீபமே!
காலத்தின் கட்டளையா? காலனவன் கவர்ந்தானே!
அம்மா உம்மைக் காணவே - இன்று
ஆவலாய் துடிக்கிறது எம் இதயங்கள்
ஆண்டுகள் ஆனது மூன்று! ஆனாலும்
ஆயிரம் நினைவுகள் எம் நெஞ்சினிலே
நாளும் பழகிய இனிய அந்த நாள்களைக்
கனவாய் நினைப்பதா? அம்மா
எப்படி மறப்பது நிஜமாய்
இன்று எம்முடன் நீங்கள் இல்லை
நிச்சயமாய் முடியாதம்மா உங்களை மறந்திட
என்றும் வாழ்ந்திடுவோம் அழியாத உங்கள் நினைவுடன்
இல.115/2, ஆலடி வீதி,
தோனிக்கல், வவுனியா.
நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர்.





7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
திருமதி நடராஜா ஞானாம்பிகை
மண்ணில் 22.10.1949 விண்ணில் 22.10.2008
எம்முயிரில் கலந்தவளே!
எங்கு சென்றீர்கள் அம்மா நீங்கள்?
ஏழாண்டுகள் என்ன
எந்த யுகம் கடந்தாலும்
எம்மிதய ஒலி நீங்கள் மட்டும் தானம்மா...
குடும்பத்தினர்
மூளாய், சுழிபுரம்




# யாழ். ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் நியாய விலையில் பொருள்கள்

### சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.22
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட் டுறவுச் சங்கம் நுகர்வோரின் வசதி கருதி தரமான பொருள்களையே கொள்வனவு செய்து விநியோகித்து வருகின்றதோடு, அவற்றின் விலை களும் குறிப்பிட்ட விலை குறைக் கப்பட்டே வழங்கப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந் திரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-
தற்போது ப.நோ.கூ. சங்கம் 21 ஆவது கிளை நிலையத்தையும் திறந்து வைத்துள்ளது. சகல கிளை நிலையங் களிலும் நுகர்வோரின் வசதி கருதி பொருள்கள் கொள்வனவு செய்யப் பட்டு, மிக நியாய விலையில் விநி யோகிக்கப்பட்டு வருகின்றன. மக்கள் தேவையான அளவு பொருள்களை கிளை நிலையங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும். நுகர்வோரின் வசதி கருதி சங்கம் விசேட கடன் அட்டை ஊடாக பொருள்களை விநியோகிக்கும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத் துள்ளது. ஆகவே நுகர்வோர் கூட் டுறவுக் கிளை நிலையங்களைத் தமது தேவைகளுக்கு கூடியளவுக்குப் பயன் படுத்துவதற்கு முன்வரவேண் டும். இந்தக் கிளை நிலையங்கள் ஊடாக பிரதேச மக்கள் கூடிய பய னைப் பெறவேண்டும் எனவும் தெரி வித் தார். (ஐ-17)

## சட்டவிரோத மதுபானம், விபசாரம்: மூவருக்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், ஒக்.22
மீசாலை வடக்கில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் அனுமதிப் பத்திரமின்றி மது பானம் விற்பனை செய்தமை மற்றும் விபசார நடவடிக்கை யில் ஈடுபட்டமை தொடர்பான வழக்கில் பெண் உட்பட மூவ ருக்கு (அதன் உரிமையாளர் மற்றும் விற்பனையாளர்) சாவ கச்சேரி நீதிமன்றில் ஐந்து வரு டங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது.
கடந்த ஜுன் மாதம் பொலிஸா ரால் தாக்கல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த மூவரும் அண்மை யில் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.
இந்த வழக்கு நேற்றுமுன்தி னம் விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது மூவருக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஆறு மாத காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (ற-9)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், ஒக். 22
நல்லூார்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தின் நவராத்திரி விழா இன்று 22 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 9 மணிக்கு பூசை ஆராதனைகளுடன் பிரதேச செயலக மண்டபத் தில் ஆரம்பமாகும்.
பிரதேச செயலர் ஆழ்வாப் பிள்ளை சிறி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கோண்டாவில் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனம் கு.சுவாமி நாதனின் சிறப்புச் சொற் பொழிவு அபிவிருத்தி உத்தி யோகத்தர் திருமதி கஸ்தூரி குணஈஸ்வரனின் இசைச் சரம், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவி பி.நிசா யினி யின் தனி நட னம், கோண்டா வில் கைலாச நாதர் வேதசி வா கம அற நெறிப் பாட சாலை மாண வர்களின் குழு நடனம் என் பவை இடம் பெறவுள்ளன. (ற-7)

## பாடசாலையின் குறையை நிவர்த்தி செய்த பெற்றோர்

கிளிநொச்சி முக்கொம்பன் அ.த.க.பாட சாலையில் நிலவிய வளப்பற்றாக் குறையை மாணவர்களின் பெற் றோர் தமது அன்பளிப்புகள் மூலமாக நிறைவேற்றிக் கொடுத்துள்ளனர். குறித்த பாடசாலையில் வளப்பற்றாக் குறை மற்றும் ஆசிரியர் பற்றாக் குறை தொடர்வதால் மாணவர்கள் கற்றலில் இடர்பாடுகளை எதிர் கொள்ள நேரிட்டது. இதனால் விழிப் படைந்த பெற்றோர் தற்காலிகமாக கிடுகால் வேயப்பட்ட 5 வகுப்பறை களை தமது நிதி மற்றும் அவர்களின் சரீரப் பங்களிப்புடன் தற்போது தகரக் கொட்டகைகளாக மாற்றியமைத் துள்ளனர். இதனால் தற்போது பெய்து வரும் மழையால் கல்வி பாதிக்கப் படாமல் ஓரளவு நடை பெறு வதற்கு உதவியாகவுள்ளது. இந்தக் கொட்டகை தற்போது பாடசாலையின் பிரதான மண்டபமாகப் பயன்படுத் தப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அந்தப் பகுதிப் பெற்றோர், 'எமது பிள்ளைகளின் கல்வியைத் தொடருவதற்கு எம்மாலான சிறுபங்க ளிப்பைச் செய்துள்ளோம். ஆனால், ஆசிரியர் பற்றாக்குறையை எம்மால் நிவர்த்தி செய்ய முடியாதுள்ளது' எனத் தெரி வித்தனர். எனவே ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வ தற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கு மாறும் அவர்கள் வேண் டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-422)

## வட்டக்கச்சி நூலகத்தில் வாசிப்பு மாத செயற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.22
கரைச்சிப் பிரதேச சபையின் வட் டக்கச்சி பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத செயற்பாடுகள் ஆரம்ப மாகி நடைபெற்று வருகின்றன.
இந்த நிகழ்வில் ஓர் அங்கமாக வாசிப் பின் முக்கியத்தை உணர்த்தும் பதா கைகள் நூலகத்துவத்தின் முன்பாக தொங்கவிடப்பட்டுள்ளதுடன் நூலகச் சுற்றுப்புறம் சிரமதானம் செய்யப் பட்டு மரம் நடுகையும் இடம்பெற்றது. அத்துடன் பாடசாலைகள் தோறும் கொடி விற்பனையும், வாசிப்பு பற்றிய விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங் களும் விநியோகிக்கப்பட்டன.
பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. முன்பள்ளிச் சிறார்களுக்கான கதை சொல்லும் வேளை, ஔவையார் அருளிய நீதி நூல்கள் மனனப்போட்டி, சிறுவர்களுக்கான சித்திரம் வரைதல், ஆங்கிலச் சொல்வளம், பொது அறிவுப் போட்டி, சுவரொட்டிப் போட்டி, திருக் குறள் போட்டி மற்றும் நாணயத்தின் நவீனத்துவப் போக்கு பற்றிய முப்பரி மாண கண்காட்சியும், புதிய நூல் கண்காட்சியும் நடைபெறவுள்ளன.
வெற்றி பெறுவோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் இந்த மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன. மேலதிக விவ ரங்களைப் பெற நூலக உத்தியோகத் தர்களைத் தொடர்பு கொள்ளும்படி நூலகர் எஸ்.சிவதர்சினி அறிவித்துள் ளார். (ற-ரி6)

## மிசனறியால் அமைக்கப்பட்ட கிராம பாடசாலைகளால் கல்வி வளர்ச்சி

### நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் தெரிவிப்பு

வலி. தென்மேற்கு, ஒக்.22
பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக இலங்கையில் குறிப்பாக வடபகுதி யில் அமெரிக்க மிசனறி யால் பல பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இதே போல் இந்து மதத்தைச் சேர்ந்த மதத் தலைவர் களும் பல பாடசாலை களை உருவாக்கியிருந் தனர். கிராமங்கள் தோறும் உருவாக்கப்பட்ட இந்தப் பாடசாலைகளினால் ஏழை மாணவர்களின் கல்வி நாளுக்கு நாள் வளர்ச் சியடைந்து வருகின்றது. -இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் த.சித் தார்த்தன் தெரிவித்தார்.



ஆனைக்கோட்டை அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட் டத்தின் கீழ் வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட விசேட கல்வி அலகுக்கான கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வருடாந்த பரிசளிப்பு விழாவும் விசேட கல்வி அலகு திறப்பு விழா வும் கல்லூரி அதிபர் தி.ஸ்ரீத ரன் தலைமையில் நடை பெற்றது.
அங்கு அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-
மாணவர்கள் தரமான பாடசாலைகளைத் தேடி நகரங்களை நாடிச் செல்வ தால் கிராமப் புறங்களி லுள்ள பாடசாலைகளில் மாண வர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைகின்றது. இதனால் பாடசாலை களின் வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படு கின்றது. இந்தப் பாடசாலையில் நில வும் வளப்பற்றாக்குறை பற்றி அதிபர் மூலம் அறிந்து கொண்டேன். சந்தர்ப் பம் வரும்போது இவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஒழுங்குகளை மேற் கொள்வேன். - என்றார். (ற-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் கடத்திய தமிழ் இளைஞர்களை திருமலை முகாமில் தடுத்து வைத்தது கடற்படை

## நீதிமன்றில் தெரிவித்தது குற்றப்புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, ஒக்.22

கொழும்பின் புறநகர் பகுதிகளில் 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட 11தமிழ் இளைஞர்களும் திருகோணமலை கடற்படைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக, குற்றப்புலனாய்வுப் பிரிவினர், கொழும்பு நீதவான் நீதிமன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போனவர்களின் குடும்பத்தினர் தங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது இன்னமும் தெரியாத நிலையில் உள்ளனர். இதனால் அவர்கள் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என அவர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இதனை செவிமடுத்த நீதவான் குறிப்பிட்ட விசாரணைகளைதுரிதப்படுத்துமாறு பொலிஸாருக்குஉத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த கடத்தல்சம்பவங்களுக்கு காரணமானவர்களை கைது செய்வதற்காக, மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுள்ளதாககுற்றப்புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டனர்.

கடற்படையை சேர்ந்த சம்பத்முனசிங்க என்பவருடன் இணைந்து செயற்பட்ட குழுவினர் 2009ஆம் ஆண்டு தெகிவளையில் 5 இளைஞர்களைக்கடத்தி அவர்களது உறவினர்களிடமிருந்து 10 மில்லியன் ரூபா பணம் கோரியதாகவும் குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்துக்கு தகவல் வழங்கினர்.

கொழும்பு மற்றும் திருகோணமலையில் உள்ள கடற்படை முகாம்களில் உள்ள நிலத்துக்கு அடியிலான இரகசிய அறைகளில்கடத்தப்பட்ட இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் குற்றப்புலனாய்வுப்பிரிவினர் நீதிமன்றிடம் தெரிவித்தனர். மேலும், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரனாகொடவுக்கு இந்த கடத்தல்கள் குறித்து தெரிந்திருந்தது எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர்தெரிவித்துள்ளனர். (வ)

# கைப்பையை பாலத்தில் வைத்துவிட்டு ஆற்றில் குதித்த யுவதி

கொழும்பு, ஒக். 22

பேலியகொட புதிய களனிப் பாலத்திலிருந்து களனிகங்கையில் குதித்த யுவதியொருவரின்சடலம் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

பஹல இம்புல்கொட பிரதேசவாசியான இந்த யுவதி கொழும்பு புறக்கோட்டையிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் காசாளராகப் பணிபுரிந்துவந்தார். கடந்த சனிக்கிழமை களனி புதிய பாலத்துக்கு வந்தவர் தனது கைப்பையைப் பாலத்தின் கைப்பிடிச் சுவரருகே வைத்துவிட்டு ஆற்றில் குதித்துள்ளார்.அவரைமீட்கபிரதேசவாசிகள் செய்தமுயற்சிகள்தோல்வியடைந்ததையடுத்து சடலத்தைத் தேடக் கடற்படைச்சுழியோடிகள் அழைக்கப்பட்டனர். எனினும், சடலம் இதுவரை கிடைக்கவில்லை. யுவதியின் கைப்பையிலிருந்த ஆவணங்களைச் சோதித்தபின் அவரது விவரங்கள் தெரியவந்துள்ளதாகவும், சடலத்தைத் தேடும் பணி தொடர்வதாகவும் கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஔவையார் சிலை திரைநீக்கம் இன்று

சாவகச்சேரி, ஒக் .22

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்துக்கு வித்தியாலய பழைய மாணவன் ஒருவரால் நிர்மாணிக்கப்பட்ட ஔவையார்சிலை இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

வித்தியாலயத்தின் பழைய மாணவனான செல்லையா ஜெயராஜா என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட ஔவையார் சிலையை வடமாகாணசபைஉறுப்பினர்ப.அரியரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு திரைநீக்கம் செய்து வைப்பார்.

வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ( நிர்வாகம் ) வே.பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (த-9)

# இலங்கையர் ஆஸியில் கைது

இலங்கைச்சட்டவிரோத ஆள்கடத்தல்காரர்களுடன் தொடர்புகளைப் பேணியதாகக் கூறப்படும் ஒருவர் ஆஸ்திரேலிய நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தேகநபர் பணிபுரிந்த இடத்தைச் சுற்றிவளைத்த பொலிஸார் இவரைக் கைதுசெய்துள்ளதோடு, 10 போலி கிரடிட் காட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கையைச்சேர்ந்தவரான, 35 வயதான யசோதரன் செல்லக்கண்ணு என்னும்இவருக்குஎதிராக எலிசபெத் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. செல்லக் கண்ணு குறைந்தது ஒருவரையாவது சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் அழைத்து வந்துள்ள தாக அந்த நாட்டுப்பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன்சாட்சியாளர் ஒருவரும், தான் ஆஸ்திரேலியாவுக்குள் படகு மூலம் நுழைவதற்கு சந்தேகநபர் உதவியதாக நீதிமன்றதில் தெரிவித்துள்ளார். இவருக்குஎதிரானகுற்றம் நிரூபிக்கப்படுகின்ற பட்சத்தில் குறைந்தது 10 வருடங்கள் சிறைத் தண்டனையை எதிர்நோக்க நேரிடலாம் எனத் தெரியவந்துள்ளது. (த-வ)

# பாடசாலைக்குச் சென்ற ஆசிரியை இனந்தெரியாதோரால் கடத்தல்

## காதலன் மீது சந்தேகம்

கொழும்பு, ஒக்.22

ஊருபொக்க, விலயாய மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணிபுரியும் 27 வயதுப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் காலை பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது இந்தொலசந்தியில் வானொன்றில் வந்த இனந்தெரியாத நபர்களால் பலவந்தமாகக்கடத்திச் செல்லப் பட்டுள்ளதாக ஊருபொக்க பொலிஸார் தெரிவித் தனர்.

ஊருபொக்க புவக்கஹா ஹேனை யில் வசிக்கும் இந்த ஆசிரியை தனது வீட்டுக்கருகில் பஸ்ஸில் ஏறி இந்தொல சந்தியில் இறங்கி, அங்கிருந்து பாடசாலைக்கு நடந்து சென்றுகொண்டிருந்தபோதே கடத்தப்பட்டிருக்கிறார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே இவருக்குத் திருமணமாகியிருந்தது. அதற்குமுன் தெயந்தர பிரதேசத்திலுள்ள வாலிபரொருவரு டன் காதல் தொடர்பு இருந்தது. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு அந்தத் தொடர்பை முறித்துக்கொண்டவர் மூன்று மாதங்களுக்கு முன்பு வேறொருவரைத் திருமணம் செதுகொண் டார். அதன்பின் முன்னாள் காதலன் பலமுறை இவருக்கு மிரட்டல் விடுத்திருக்கிறார். எனவே, இந்தக் கடத்தலில் முன்னாள் காதலன் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கிறார்கள்.

கடத்தப்பட்ட ஆசிரியை இருக்கும் இடம் பற்றி இதுவரை தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும், இது தொடர்பில்மேலதிகவிசாரணைகள்நடைபெற்று வருவதாகவும்ஊருபொக்கபொலிஸார் தெரிவித்தனர். (த)

# யானை தாக்கிச் சாவடைந்த பெண்ணுக்கு இரட்டைச் சிசு

மட்டக்களப்பு, ஒக். 22

மட்டக்களப்புதாந்தாமலைநெல்லிக்காடு பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் காட்டு யானை தாக்குதலில் கொல்லப்பட்ட கர்ப்பிணித் தாயானதம்பிராசா சுயமலர் (வயது–17) என்பவரின் கர்ப்பத்தில் இரட்டைச் சிசுக்கள்இருந்தமைஉடற்கூற்றுப்பரிசோதனையில் தெரிய வந்துள்ளதாகக் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் அவரது கணவனும் காட்டு யானையால் அடித்துக் கொல்லப்பட்டிருந்தார். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி விக்ரம ஆராச்சியின் அறிக்கையில் 17 வயதான இந்த இளம் கர்ப் பிணித் தாய்க்கு காட்டு யானைத் தாக்குதலால் தலையில் இருவெடிப்புகள் ஏற்பட்டதால் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டு யானை குடிசைக்குள்ளே புகுந்து தாக்கியதில் இளம் கர்ப்பிணியின் கணவரான மோகனதாஸ் (வயது–30) விலா எலும்பில்ஏற்பட்டபலத்தகாயத்தின்காரணமாக இரத்தப் பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாகவும் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. கொக்கட்டிச்சோலை பொலிஸ் சார்ஜன்ட் கே. நாகராசா சாட்சியங்களை நெறிப் படுத்தினார்.

# நாடெங்குமுள்ள சிறுவர்களின் விவரங்களைத் திரட்ட ஏற்பாடு

கொழும்பு, ஒக். 22

நாடெங்குமுள்ள சிறுவர்களின் விவரங்களைத் திரட்ட விரி வான ஏற்பாடொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

நாடெங்குமுள்ள 5வயதுக்கும் 17 வயதுக்கும்உட்பட்டவர்களின்பூரண விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அதன் மூலம் அவர்களின் கல்வித்தரம், சமூக நிலை, பொருளாதார நிலை, சுகாதாரம், வீடுகளில்அவர்கள் செயும் பணிகள், எதிர்கால நோக்கங்கள் ஆகியவை பற்றிய தகவல்களைப் பெறவுள்ளதாகவும் அரசு கூறியுள்ளது.

அத்துடன்,மாற்றுவலுவுடையசிறுவர்கள், நன்னடத்தைஇல்லங்களில்உள்ளவர்கள், பெற்றோர்கள் வெளி நாடுகளில் வேலை செய்வதால் இங்கு விடப்பட்டிருக்கும் சிறுவர்கள் போன்ற விவரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வுக்கு சுமார் 26 மில்லியன் ரூபாசெலவாகுமெனமதிப்பிடப்பட்டுள்ளதாக வும் அந்தத் தொகையை சர்வதேச தொழிலாளர் அமைப்பொன்று ஏற்றுக்கொண்டுள்ளதாகவும்அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# குருபூசையும் விஜயதசமியும்

யாழ்ப்பாணம், ஒக். 22

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், மகா தேவா சுவாமிகள் ஆச்சிரமம், வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் மகா தேவா சுவாமிகளின் 73 ஆவது வருடக் குரு பூசையும், விஜயதசமிப் பூசையும் இன்று வியாழக் கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது என குரு பீடாதிபதி ஸ்ரீவேதவித்தியாசாகரர் தெரிவித்துள்ளார். (ற–ரி6)


**தேவை**

கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற எமது நிறுவனத்திற்கு **அனுபவம் மிக்க** தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் (T/0) தேவை

தொடர்பு - 0773614638

(64411)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2689 திகதி 2015.10.21

01 25 38 39 H 49 ரூ. 30,599,375/=

2015.10.24 ஆம் திகதி சனிக்கிழமை

Galaxy Star

வெற்றி வாரம் 001 திகதி 2015-10-21

03 12 34 41 59

| | |
|---|---|
| பெண்டா மோட்டார் கார் | 6796567 |
| மோட்டார் சைக்கிள் | 6732486 |
| தங்க ஆபரணப் பொதி | 7813377 |
| LCD தொலைக்காட்சி | 6284777 |

அடுத்த ஞாயிற்றுக்கிழமை

சுப்பர் பரிசுப் பொதி

ரூ.2,000,000/-

**வேலணை பல நோக்குக் கூட்டுறவு சங்கம்**

**கடைத் தொகுதி வாடகைக்கு விடுதல்**

வேலணை ப.நோ.கூ சங்கத்திற்கு சொந்தமான இலக்கம் 220,காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள கடை வாடகைக்கு விடப்படவுள்ளதால் கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை சமர்பிக்க விரும்புவோர் வேலணை ப.நோ.கூ. சங்க தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு 05.11.2015 ஆம் திகதிக்கு முன் கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆ. காண்டீபன்

தலைவர்

வேலணை ப.நோ.கூ. சங்கம்.

021 221 1522

**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**31.10.2015இல் உள்ளவாறான வாக்காளர் பட்டியல்கள் காட்சிப்படுத்தல்**

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளின் 31.10.2015இல் உள்ளவாறான கிளைப் பொதுச்சபைக்கு சமுகமளித்து வாக்களிக்கக் கூடிய தகுதியான வாக்காளர்களின் பட்டியல்கள் சங்க தலைமைக் காரியாலயத்தில் 05.11.2015ஆம் திகதி வரை காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. தாங்கள் அதனைப் பார்வையிட்டு ஆட்சேபனைகள், திருத்தங்கள் இருப்பின் சங்கச் செயலாளரிடம் தொடர்பு கொண்டு ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆ.காண்டீபன்,

தலைவர், வேலணை ப.நோ.கூ.சங்கம்

**புதிய மாணவர்களை அனுமதித்தல்**

எமது நிறுவனமான யாழ்விஸன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலைக்கு விஜய தசமியை முன்னிட்டுதரம் 1 இலிருந்து 11 வரையுள்ள புதியமாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளார்கள். சேரவிரும்பும் மாணவர்கள் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

நேர அட்டவணை:

வெள்ளிக்கிழமைகளில் மாலை 4மணி தொடக்கம் 6மணி வரை பண்ணிசை வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 8மணி தொடக்கம் 12மணி வரைஅறநெறி வகுப்புக்களும், நுண்கலை வகுப்புக்களும் நடைபெற்றுவருகின்றன. (மதியபோசனம் வழங்கப்படும்)

பாடசாலை நாள்களில் மாலை நேரங்களில் 4மணி தொடக்கம் 6மணி வரை பிரத்தியேக வகுப்புக்களாக தரம் 6தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு முக்கியமான 6 பாடங்களும் நடைபெற்று வருகின்றன.

இவை அனைத்தும் முற்றிலும் இலவசமாக நடைபெற்றுவருகின்றன.

தொடர்புகளுக்கு:

விலாசம் :- யாழ்விஸன் கிருஸ்ணாஅறநெறிப்பாடசாலை

இல.19 கோணாவளை வீதி,

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தொலைபேசி இலக்கம் 021 221 2255, 021 720 0719


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவீரர்களை

கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் தற்போதைய புதிய அரசின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, மாவீரர் தினக் கொண்டாட்டங்களை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களுக்குத் தற்போது சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி தமக்கு விருப்பமான முறையில் கொண்டாட்டங்களை அமைதியான முறையில் மேற்கொள்ள முடியும். எனவும் சட்டவிரோதமான வகையிலோ, தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான முறையிலோ எந்தவொரு வைபவமோ, நிகழ்வையோ நடத்த அனுமதிக்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

## சமத்துவமாக

யளிக்கத்தக்க வகையில், சமத்துவமாக நடத்தப்படுவதன் மூலமே, இலங்கையுடனான வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்த முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள சீனாவின் கடன்கள் தொடர்பான வட்டி வீதத்தைக் குறைக்கவும், முதலீடுகளை மேற்கொண்டு உதவவும் சீனா முன்வரவேண்டும் என்று இலங்கை நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளமை குறித்தே சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போதைய அரசு இந்தியாவுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவை சுட்டிக்காட்டியே மறைமுகமாகச் சீனா இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளதாகக் கொழும்பு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். (த-வ)

## ஐ.நா.

விடயங்களையும் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசுக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் நாயகத்திடம் கூட்ட மைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் நாயகம் மிரோஸ்லாவ் ஜென்கா உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ளார். இவர் வந்தகையோடு இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கொழும்பில் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பேச்சின்போதே இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கண்டவாறு வலியுறுத்தினர் என்று கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று உதயனிடம் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தான் அங்கு நேரில் சந்தித்து தமிழருக்கான அரசியல் தீர்வு விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்தியிருந்தேன் என்று அரசியல் விவகாரங்களுக்கான ஐ.நாவின் உதவிச் செயலர் நாயகம் மிரோஸ்லாவ் ஜென்கா எம்மிடம் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெறவுள்ள போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்கு ஐ.நா. தன்னாலான அனைத்து உதவிகளையும் வழங்கும் என்றும் ஜனாதிபதி மைத்திரியிடம் தான் கூறினேன் என்றும் மிரோஸ்லாவ் ஜென்கா எம்மிடம் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் மைத்திரியுடனான சந்திப்பின் தொடராகத்தான் தான் இலங்கை வந்துள்ளேன் என்றும் மிரோஸ்லாவ் ஜென்கா எம்மிடம் தெரிவித்தார்.

இன்றைய (நேற்றைய) சந்திப்பில் நாம் தெரிவித்த விடயங்களை தான் கவனத்தில் எடுத்து அதற்குரிய நடவடிக்கைளை முன்னெடுப்பேன் என்றும் மிரோஸ்லாவ் ஜென்கா எம்மிடம் உறுதியளித்தார் - என்றார். (த-சி)

## இறுதிக்கட்டப்

பேன். தற்போது அவர் விருந்தினராக வந்துள்ளார். அதனால் அது தொடர்பில் எதுவும் பேசவில்லை என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுத் திடீர்ப் பயணம் மேற்கொண்டு வருகை தந்திருந்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் அவரது இல்லத்தில் நேற்று மதியம் சுமார் ஒரு மணி நேரம் சந்திப்பில் ஈடுபட்டிருந்தார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் ப.சிதம்பரத்திடம், இலங்கைப் பயணத்துக்கான நோக்கம் தொடர்பில் கேள்வி எழுப்பியபோது, கொழும்பிலுள்ள ஒரு நிறுவனத்தின் ஆண்டு விழாவில் உரையாற்றுவதற்காகவே வந்ததாகவும், அவ்வேளையில் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கும், முதலமைச்சரைச் சந்திப்பதற்கும் வருகை தந்ததாகவும் குறிப்பிட்டார்.

முதலமைச்சரைச் சந்தித்து, இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகப் பேசிக் கொண்டேன். மிகுந்த பழுத்த அனுபவஸ்தராக முதலமைச்சர் இருக்கின்றார். மிகுந்த அறிவுடனும் - விவேகத்துடனும் அவர் நடந்து கொள்கின்றார் என்பது அவரது பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன். இந்தப் பகுதி மக்கள் வாழ்வுக்காக எங்களால் முடிந்த உதவிகளைச் செய்கின்றோம் என்பதை அவருக்குத் தெரிவித்தேன் - என்றார் சிதம்பரம்.

சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டபோது, சிதம்பரம் அதில் இந்தியாவில் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அளவாவது இலங்கையின் மாகாணங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அப்போதே வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.

இதன்போது முதல்மைச்சரிடம், 2009 ஆம் ஆண்டு இலங்கையில் இறுதிப் போர் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது இந்தியாவில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசில் முக்கிய அமைச்சராக இருந்தவர் சிதம்பரம். ஏன் அன்று இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தவில்லை என்பது தொடர்பில் வினவினீர்களா என்று கேட்டபோது, இல்லை. அவர் தற்போது விருந்தினராக வந்துள்ளார். அவர் அதிகாரத்தில் தற்போது இருந்திருந்தால் நிச்சயம் கேட்டிருப்பேன் - என்றார். (த-5-21-101)

## பரணகமவின்

கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்ஸ்வெல் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழுவைக் கலைக்கவேண்டும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் பரிந்துரைந்துள்ளார். அதனை நாம் வரவேற்றுள்ளோம். அல் ஹூசைனின் அறிக்கை வெளியாவதற்கு முன்னரே, மக்ஸ்வெல் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு தனது பரிந்துரைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தது.

நாங்கள் இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் அவர்களின் பரிந்துரைகளில், எங்களுக்குச் சில சாதக மான விடயங்கள் இருக்கின்றது. எனவே இலங்கை அரசு ஐ.நா. அறிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (த-5)

## ஒஸ்லோ

ததாக ஹம்சாயினி குணரட்ணம் பிரதி முதல்வராகப் பணியாற்ற வுள்ளார்.

ஹம்சாயினி குணரட்ணம், 2011ஆம் ஆண்டு, நோர்வேயின் உடோயா தீவில் நடந்த தொழிற்கட்சியின் கோடைகால முகாமின் மீது துப்பாக்கிதாரி ஒருவர் நடத்திய தாக்குதலில், உயிர் பிழைத்து நீந்திக் கரையேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ)

## இந்திய

வருகின்றது.

நேற்றைய அஞ்சலி நிகழ்வில், யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். கொல்லப்பட்ட வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களின் உறவினர்களும் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர். அங்கு மலர் மாலை அணிவித்தும், சுட ரேற்றியும் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தப்பட்டது.

அங்கு உரையாற்றிய வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரி விக்கையில், கடமையில் இருந்த குறித்த உத்தியோகத்தர்கள் 2 நாளில் கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்களது சாவு மிகவும் அவலமானது. போதனா வைத்தியசாலை அபயமளிக்கும் இடமாக அன்றும் இன்றும் இருந்து வருகின்றது. அத்தகைய வைத்தியசாலையில் மரணம் நிகழ்ந்தது வேதனைக்குரியது. அவர்கள் இதே வைத்தியசாலையில் வைத்து எரியூட்டப்பட்டுள்ளார்கள். அவர்களது இறப்பு, அவர்களது உறவுகள் அடையும் துன்பம் மிக மோசமானது. இத்தகைய தொரு துயரச் சம்பவம் இடம்பெற்றிருக்கக் கூடாது. வைத்தியசாலையில் இவ்வாறான தொரு துயரச் சம்பவம் இடம்பெற்றது மிகவும் கொடுமையானது. அந்த வேதனையான சம்பவத்தை நேரடியாகப் பார்த்தவர்கள்கூட உள்ளனர். மிகக் கடுமையான மனஅழுத்தத்துக்கு உள்ளாகியிருந்தனர்-என்றார். (த-4-106-105)

## புலிகள்

பெருமளவில் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மதிப்புக்குரிய தொண்டர் நிறுவனமொன்று, இறுதிக்கட்டப் போரின் கடைசி 12 மணித்தியாலங்களில், விடுதலைப் புலிகளாலேயே பொதுமக்களுக்கு அதிகளவான இழப்புக்கள் ஏற்பட்டுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கை உள்ளிட்ட அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளதைப் போன்று 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்படவில்லை.

போரின் இறுதிக்கட்டத்தில் 3 லட்சம் முதல் 3 லட்சத்து 30ஆயிரம் வரையிலான தமிழ் மக்கள் போரில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அத்துடன் மக்கள் மனித கேடயங்களாகவும் புலிகள் அவர்களைப் பயன்படுத்தினர். அவர்களை பயணக்கைதிகளாகப் பயன்படுத்திப் பதுங்குகுழிகளைத் தோண்டும் செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தினர்.

சிறுவர்களைப் போர்க்களத்தின் முன்னரங்கங்களில் போரிடுவதற்காகப் பயன்படுத்தினர். மக்களை தம்முடன் வைத்து விடுதலைப்புலிகளின் தலைமையின் பலத்தைப் பாதுகாக்க முயன்றனர். பெருமளவு பொதுமக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இதனால் பல்வேறு உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

புலிகளின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்ட பொதுமக்கள். இறுதி நேரத்தில் தப்பிக்க முயன்றபோது அவர்கள் உயிரிழந்தனர். அவர்கள் இலங்கை இராணுவத்தினர் வீசிய எறிகணைகளால் உயிரிழந்ததாக ஊடகங்களில் பரப்புரை செய்யப்பட்டது. வெளிநாடுகளின் தலையீடுகளை ஏற்படுத்துவதற்காகவும் புலிகள் இதனைப் பயன்படுத்தினர்.

பொதுமக்களைக் கொலை செய்வதற்காகத் தற்கொலைக் குண்டுதாரிகள், நிலக்கண்ணி வெடிகள் மற்றும் ஏனைய வெடிபொருள் சாதனங்களைப் புலிகள் பயன்படுத்தினர். இதனால் பெருமளவிலான பொதுமக்கள் உயிரிழந் தனர்.

ஆயுதம் தரித்தவர்கள் சிவில் உடையை அணிந்திருந்தார்கள். அவர்களின் உயிரிழப்புக்களும் பொதுமக்களின் இறப்புக்களாகக் காண்பிக்கப்பட்டுள்ளன .

இந்தக் காரணங்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியமையாலேயே அதிகளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக ஆணைக்குழு கண்டறிந்துள்ளது.

இதேவேளை, இலங்கை இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதல்களில் குறிப்பிடத்தக்களவு பொதுமக்கள் இறந்துள்ளார்கள் என்பதை ஆணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது. ஆனாலும், பொதுமக்களை தமது கட்டுப்பாட்டிலிருந்து செல்வதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிகாதமையினால் தான், இவ்வாறான தவிர்க்க முடியாததொரு விளைவு ஏற்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, இனஅழிப்புச் செய்யும் நோக்கில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இலங்கை இராணுவத்தினரால் பொதுமக்கள் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டனர் என்ற குற்றச்சாட்டைப் பரணகம ஆணைக்குழுவின் அறிக்கை நிராகரித்துள்ளது. (த-வ)

## பொருளாதார

னம் சீனாவின் கடன்களை அடைப்பதற்காக ஒதுக்கப்படுகின் றன என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, சீன ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது செவ்வியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

சீனாவானது இலங்கை தற்போது எதிர் நோக்கியுள்ள மிகப்பெரிய நிதி நெருக்கடியைக் குறைப்பதற்கு உதவவேண்டும். இதற்காக மேலும் நிதியைக் கடனாக வழங்காது முதலீடு செய்வதற்கு முன்வரவேண்டும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற விரோதங்களைக் களைந்து விட்டுச் சீனா எமக்கு உதவ முன்வர வேண்டும். குறிப்பாகச் சீனா எமது நாட் டுக்காக வழங்கிய கடன்களின் வட்டியைக் குறைப்பதற்கும் அது தொடர்பாக மேலும் விட்டுக்கொடுப்புக்களை வழங்குவதற்கும் எமக்கு உதவவேண்டும்.

சீனாவுடனான எமது உறவை நாம் சரியான பாதையில் கொண்டு செல்வது தொடர்பில் நாம் கவனம் செலுத்தி வருகிறோம். அத்துடன் ராஜபக்சவின் ஊழல் மிக்க அரசால் விரயமாக்கப்பட்ட கடனைச் சரிசெய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் முன்னெடுப்பதற்கு சீனா எமக்கு உதவ வேண்டும் -என்றார்.

கடந்த ஜனவரி மாதம் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் ராஜபக்ச தோற்கடிக்கப்பட்ட பின்னர் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் அரசானது சீனாவால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு பெரியளவிலான திட்டங்களை இடைநிறுத்தியது. குறிப்பாக 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத் திட்டமானது ஊழலுடன் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டது.

இதன் பின்னர் சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் லியு சென்மின் இம்மாதம் இலங்கையின் உயர் மட்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு சுமுகமடைவதற்கான முயற்சிகளை இவர் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவைப் பலப்படுத்துவதற்கு சீனா மேலும் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என சீனத் தூதுவர் உறுதியளித்துள்ளார். இலங்கையில் கடந்த ஆறு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பெரியளவிலான கட்டுமானத் திட்டங்களில் கிட்டத்தட்ட 70 சதவீதமானவை சீனாவால் நிதியுதவி அளிக்கப்பட்டவையாகும்.

எவ்வாறெனினும், ராஜபக்சவின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில் துறைமுகம் மற்றும் சர்வதேச விமான நிலையம் என்பன சீன நிதியில் அமைக்கப்பட்டபோதிலும் இவற்றிலிருந்து போதியளவு வருமானம் ஈட்டப்படவில்லை.

இதனால் சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை அடைப்பதில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. சீனாவானது தனது நிதியை இலங்கையின் கட்டுமானங்களுக்காகச் செலவிட்ட பின்னர் நாடு பெரியளவில் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளதாகப் பொருளியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2010 ஆம் ஆண்டு இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் 36 சதவீதமானவை வெளிநாட்டுக் கடன்களாகும். இது 2013ஆம் ஆண்டில் 65 சதவீதமாகவும், இவ்வாண்டு 94 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது என கிராமிய பொருளாதார அமைச்சின் முன்னாள் பொது இயக்குநர் பாலித எக்கநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான கடன்கள் மற்றும் கடன் வட்டிகள் இலங்கை அரசின் வருமானத்தையும் மீறியுள்ளது. ஏற்கனவே உள்ள கடன்களை அடைப்பதற்கு நாங்கள் மேலும் கடன் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என பாலித எக்கநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள இத்தகைய நிதி நெருக்கடியை ஈடுசெய்வதற்கு வெளிநாடுகள் நேரடி முதலீட்டை மேற்கொள்வதற்கான வழிவகைகள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை இம்மாதத்தின் இறுதியில் சமர்ப்பிக்கவுள்ள நிதி அமைச்சர் ஆராய்ந்து வருகிறார்.

நாங்கள் சமர்ப்பிக்கவுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் நேரடி வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கவுள்ளோம். எமது நாட்டின் அபி விருத்திக்கு இவ்வாறான நேரடி முதலீடுகள் மிகவும் இன்றியமையாதவையாகும். ஆகவே சீன நிறுவனங்கள் இங்கு தமது முதலீட்டை மேற்கொள்வதற்கான நல்லதொரு வாய்ப்பாக இது அமைந்துள்ளது என நிதி அமைச்சர் கருணாநாயக்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எவ்வாறெனினும், புதிய திட்டங்கள் தொடர்பில் உடன்பாட்டை மேற்கொள்வதற்கு முன்னர், ஏற்கனவே சீனா தான் மேற்கொண்டுள்ள திட்டங்களை குறிப்பாக கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது. (த-வ)

## 30 கிலோ

காமம் பகுதியில் காத்திருந்துள்ளனர்.

அவ்வேளையில் தொண்டமானாறிலிருந்து கொடிகாமத்துக்குப் பஸ்ஸில் வந்திறங்கிய இருவரை கண்காணித்த வேளையில் இவர்கள் மிருசுவிலுக்குச் செல்வதை அவதானித்து . இவர்களைப் பின் தொடர்ந்து சென்றுள்ளனர். அங்கு காட்டுப் பகுதியிலிருந்து 3 உரப்பைகளில் கட்டப்பட்ட நிலையில் கொண்டு வரப்பட்ட 30 கிலோவுக்கு அதிகமான கஞ்சாவை நேற்றுமுன்தினம் மாலை பிடித்ததுடன் அதனைக் கொண்டு வந்த இருவரையும் கைது செய்தனர் .

இவர்களை நேற்றுச் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது, இவர்களை நவம்பர் நான்காம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், பெருமளவு கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதால் தொடர் விசாரணைக்காக யாழ்.உயர்நீதிமன்றில் முற்படுத்துமாறும் போதைப் பொருள்கள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பது குறித்து எமது அரசு சிந்திக்கவில்லை

### *முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.22

எமது அரசு எக்காலப்பகுதியிலும் வெளிநாட்டு நிபுணர்களை நீதிபதிகளாக நியமிப்பது குறித்து சிந்திக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பில் உள்ளக விசாரணைக்கு உதவுவதற்காக ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி இலங்கைக்கு வருகை தந்துள்ளார். மோட்டூ நுகுசியை நேற்றுக்காலை தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்த போதே முன்னாள் ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு தொடர்பாக, கொழும்பு ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எனது அரசு எக்காலப்பகுதியிலும் இலங்கைப் படையினர் மற்றும் பொதுமக்கள் மீது நீதி அதிகாரம் செலுத்தக்கூடிய விதத்தில் வெளிநாட்டு நிபுணர்களை நீதிபதிகளாக நியமிப்பது குறித்து சிந்திக்கவில்லை என மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.



இது அரசியல் ரீதியாக எங்கள் மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.மேலும் இது இலங்கையின் அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கு முரணானது எனவும் அவர் கூறினார்.

இலங்கை தொடர்பில் ஜப்பான் வழங்கும் பொருளாதார, வர்த்தக ஒத்துழைப்புக்களை பாராட்டிய மகிந்த ராஜபக்ச ஜப்பானின் முன்னாள் சர்வதேச நீதிபதியின் இலங்கை வருகையையும் வரவேற்றார்.

மேலும் மக்ஸல் பரணகம ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு தம்மை நிபுணத்துவ ஆலோசகராக நியமித்தமைக்குநன்றியைத்தெரிவித்த ஜப்பானிய நீதிபதி மோட்டூ நுகுசி, தனதுகம்போடியவிசாரணைகளின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

இதன்போது பதிலளித்த மகிந்த ராஜபக்ச, இலங்கைக்கும் கம்போடியாவுக்கும் இடையே அடிப்படையில் வேறுபாடுகள் உண்டு.இலங்கை பயங்கரவாதத்தை அழித்து நாட்டில் இன வேற்றுமையை நீக்கியுள்ளது-என்றார். அத்துடன், இந்தஅமைதியானசூழலைஏற்படுத்த மேற்கொண்ட உத்திகள் மற்றும் எதிர் கொண்ட சவால்கள் தொடர்பிலும் எடுத்துக் கூறினார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# ஆயுதக் கப்பல் தொடர்பில் விசாரணைகள் தொடர்கின்றன

### *நாடாளுமன்றில் பிரதமர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.22

அவன்காட் ஆயுதக்கப்பல் தொடர்பிலான விசாரணைகளை நிறுத்துமாறு சட்டமா அதிபருக்கு அழுத்தம் கொடுக்கவில்லை எனவும், சட்டமா அதிபரால் குறித்த விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொள்ளுமாறு குறித்த பிரிவினருக்கு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் 23 (2)பிரிவின் கீழ் அனுர குமார திஸாநாயக்கவால் அனுப்பப்பட்ட கேள்விக்கு நேற்று சபையில், பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது சர்வதேச கடல் பரப்பில் பயணித்த ஆயுதக் கப்பலை காலி துறைமுகத்தில் நங்கூரமிட அனுமதியளித்தது யார் என அனுர குமாரவால் கேள்வி எழுப்பப் பட்டிருந்தது.

இந்தக் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் பிரவேசிக்க பாதுகாப்பு அமைச்சரால் அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக, அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் டீ.எம்.எஸ்.டீ. ஜயரத்னவின் 2012ஆம் ஆண்டு செப்ரம் பர் 18ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்தில் அவன்காட் நிறுவனத்தின் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் அந்தக் கப்பலை காலித் துறைமுகத்தில் நிறுத்துவது குறித்து அனுமதி வழங் கியதாக பாதுகாப்பு அமைச்சிடம் ஆவணங்களில் இல்லை என பிரத மர் பதிலளித்துள்ளார்.

இது குறித்து இலங்கை பொலிஸாருக்கு அறியப்படுத்தப்பட்டதா என்ற வினாவுக்கு, கடந்த ஜனவரி 18ஆம் திகதி பொலிஸாரால் குறித்த கப்பல் கைப்பற்றப்படும் வரை பொலிஸாருக்கு இது குறித்து தெரியப்படுத்தப்பட்டதாக தகவல் இல்லை என அவர் கூறியுள்ளார்.

மேலும் குறித்த ஆயுதக் கப்பல் தொடர்பில் மேற்கொள்ளப்படவுள்ள எதிர்கால நடவடிக்கைகள் குறித்து வினவியபோது, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும் உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என பிரதமர் தெரிவித்துள் ளார். (வ)

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சாரதியாக கடமையாற்றும்

**ஜெயராசா முகுந்தன்**

அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி மதுரைத்தேவி ஜெயராசா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிசங்கம்

பிரதேச செயலகம், தென்மராட்சி.

# சந்திரிகா கொலை முயற்சி வழக்கில் தண்டனை பெற்றோர் மேன்முறையீடு

கொழும்பு, ஒக்.22

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம்சாட்டப்பட்டு 300 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைஅளிக்கப்பட்டுள்ள இருவர், அந்தத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள் ளனர்.

291-ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள வேலாயுதன் வரதராஜா மற்றும் 300-ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட் டுள்ள ரகுபதி சர்மா ஆகிய சந்தேகநபர்கள் மேன்முறையீட்டு நீதிமன் றத்தில் தங்களின் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், பொலிஸாருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை பயன்படுத்தியே அவர்கள் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை, பொலிஸார் சந்தேக நபர்களிடமிருந்து பலவந்தமான முறையில் பெற்றிருந்ததாக வழக்கு விசாரணைகளின்போது சாட்சியங் கள் அளிக்கப்பட்டிருந்தன.

ஆனால் அந்த சாட்சியங்களை நிரா கரித்த நீதிபதி, குறித்த குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் அவர்களின் சுய விருப்பத்தின் பேரிலேயே அளிக் கப்பட்டதாக தீர்ப்பில் தெரிவித்திருந்தார். எனவே, தீர்ப்பு எமது சாட்சிகளுக்கு முற்றிலும் தவறானது என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தங்களுக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை ரத்துசெய்து விட்டு விடுதலை செய்யுமாறு அவர்கள் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொழும்புமாநகரசபைமைதானத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பரப்புரையின் போது, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்குவைத்து தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்தத் தாக்குதலில் சந்திரிகா காயங்களுடன் உயிர்தப்பினார். அந்தத் தாக்குதலை நடத்துவதற்கு உதவியுதாக குற்றம்சாட்டியே சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

15 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த நீண்ட விசாரணையின் பின்னரே கொழும்பு மேல்நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அளித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (வ)

## ஜெனிவாத் தீர்மானத்தை தோற்கடிக்க வேண்டும்

**அதற்கு வீரவன்சவுடனும் இணைய சோமவன்ச தயாராம்**

கொழும்பு, ஒக்.22

ஜெனிவா ஐ. நா மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை தோற்கடிப்பதற்கு ஜே.என்.பி.யின் தலைவர் விமல் வீரவன்சவுடன் கூட இணையத் தயார் என ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரசியல் கட்சியுடனோ, எந்தவொரு அரசியல் வாதியுடனோ இணைந்து ஐ. நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை தோற்கடிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ. நா மனித உரிமைகள் சபையின் விசாரணைப் பொறிமுறைமை தோற்கடிக்கப்பட வேண்டியது அவசியமானது என கூறியுள்ள அவர், கிரமமான ஓர் திட்டத்தின் அடிப்படையில் அதனைச் செய்ய வேண்டுமெனத் தெரிவித்துள் ளார். (வ)

# நாட்டில் மீண்டும் போர் இடம்பெற இடமளியேன்

### *மதப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி உறுதி*

கொழும்பு, ஒக்.22

நாட்டில் மீண்டும் போர் இடம்பெற இடமளிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக மதங்களின் கூட்டமைப்பு பிரதிநிதிகளை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதி இல்லத்தில், மதப் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த புதிய அரசு மேற்கொண்டு வரும் முனைப்புக்கள் பாராட்டுக்குரியன என மதப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இந்த நடவடிக்கைகள் மேலும் மேம்படுத்துவதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீளவும் போர் ஏற்படுத்த சந்தர்ப்பம் ஏற்படுத்திவிடக் கூடாது . நாட்டில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் அரசின் முயற்சிகளுக்கு நாட்டின் அனைத்து மதத்தலைவர்களினதும் ஒத்துழைப்பு அவசியமானது என ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். (வ)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 ★ 09 ★ 1947



மறைவு 12 ★ 10 ★ 2005

**அமரர் கணபதி இராசதுரை J.P (WI)**

(M.A, B.Ed, B.A (Pol.Sc), SLPS-1, SLEAS-1)

(முன்னாள் அதிபர்(1996-2005) யாழ்.மத்திய கல்லூரி)

மத்தியின் மாண்பினை மகத்துவமாக்கிட
சிற்பியாய் மாறிய செம்மலே - எங்கள்
புத்தி தெளிந்திடப் புதுப்பாதை வகுத்தவன்
சக்திமிக்கதோர் மாணவச் சமூகமமைத்தவன்

மும்மொழி வித்தகன் செம்மொழிக் காவலன்-எம்
மண்ணினை எண்ணிய நிலைபெறு சேவகன்
உருவமே உரைக்கும் உன்னுயர் ஆளுமை
இரும்புக் குண்டுகள் அறியுமா உன் சாதனை

அதிபர் சேவைக்கு அளவுகோலானவன் - இன்றும்
அழியா நினைவுடன் எம்முடன் வாழ்பவன்
விதியின் வலியை நொந்து வாழ்கிறோம்-நாளும்
விழியின் வழியே உம்மை நோக்குவோம்

நடையில் நின்றுயர் நாயகனாவன் - நீர்
காட்டிய பாதைகள் சாத்தியமானவை
கர்மவீரனே உம் கழல் போற்றுவோம்
தர்மம் நிலைபெறும் அடைக சாந்தி!!!

(644100)(10.17)

C1,G2, Soysapura Flats, Moratuwa. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச்செயல்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் போதுமானவையல்ல

## *சபையில் எடுத்துரைத்தார் சட்டம் ஒழுங்கு அமைச்சர்*

கொழும்பு, ஒக்.22

சிறுவர் துஷ்பிரயோகங்கள், பெண்கள் பாலியல் வன்புணர்வு மற்றும் போதைப்பொருள்பாவனைதொடர்பாக, போதியளவு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும்,தண்டனைகள் போதுமானவையாக இல்லை என சட்டம் ஒழுங்கு மற்றும்சிறைச்சாலைகள்மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் சட்ட மறுசீரமைப்பு குறித்து அவதானம் செலுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அமைச்சர் திலக் மாரப்பன மேலும் தெரிவிக்கையில்,

2014 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 5,762 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களும், 311 பெண்கள் துஷ்பிரயோக சம்பவங்களும், 67,135 போதைப் பொருள் சுற்றிவளைப்புகளும் இடம்பெற்றுள்ளன.

இதுபோன்ற குற்றச்செயல்கள் தொடர்பில் போதுமான அளவு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றபோதிலும், தண்டனைகள் போதியதாகஇல்லாதசந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. அதனால் சட்டத்திருத்தத்துக்கு உரிய பங்களிப்புச் செய்ய முடியும்.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு 7 வருட சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால், நியமிக்கப்பட்ட இந்த சிறைத்தண்டனைக்கு, உயர் நீதிமன்றத்தின் ஊடாக மாற்றுத்தண்டனை பெறமுடியுமாக உள்ளது. எனவே, தண்டனைச் சட்டம் குறித்து அவதானம் செலுத்தி அதில் திருத்தம்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். (வ)

# பந்துலவைப் பதவி விலகுமாறு கோரினார் ரவி கருணாநாயக்க

கொழும்பு, ஒக்.22

முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தம்மைப்பற்றிய பிழையானதகவல் ஒன்றை வெளியிட்டு மக்களை பிழையாக வழிநடத்த பந்துல குணவர்த்தன முயற்சித்தார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ரவி கருணாநாயக்கவின் முழுப் பெயர் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன, நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தார். நாடாளுமன்ற கன்சப்டில் ரவி கருணநாயக்கவின் பெயர், ரவி கருணாநயக்க ரவிந்திர சந்தோஷ் கணேசன் என உள்ளது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறு பிழையான பெயரை குறிப்பிட்டிருந்தால் பதவியை இராஜினாமா செய்வதாக பந்துல குணவர்த்தன தெரிவித்திருந்தார். எனினும், பின்னர் தாம் பிழையாக பெயரை குறிப்பிட்டு விட்டதாக அவர் நேற்றுமுன்தினமே நாடாளுமன்றில் அறி வித்திருந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. கடந்த காலங்களிலும் பந்துல குணவர்தன இவ்வாறு தம்மை இழிவுபடுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் பந்துல பதவியை ராஜினாமா செய்ய வேண்டுமெனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன மதக் குரோதத்தை தூண்டும் வகையில் பந்துல கருத்து வெளியிட்டுள்ளதாக அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதனால் முரண்பாட்டுநிலைமையைக்கட்டுப்படுத்த, நாடாளுமன்றம் ஐந்து நிமிடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (வ)

# வன்னி, ஜெனிவா மற்றும் நியூயோர்க்:தமிழீழ வீதி வரைபடம்

## *நூலை வெளியிட்டார் விமல் வீரவன்ச*

கொழும்பு, ஒக்.22

தேசிய சுதந்திர முன்னிணியின் தலைவர் விமல் வீரவன்ச வன்னி, ஜெனிவா மற்றும் நியூயோர்க்: 'தமிழீழ வீதி வரைபடம்' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய பயிற்சி நிலைய கேட்போர் கூடத்தில் இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, பேராசிரியர் குணதாச அமரசேகர, தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர் முஹாம்மில், நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, டலஸ் அழப்பெரும, உதய கம்மன்பில மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண



உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை அரசு, மக்ஸ்வல் பரணகமவின் அறிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளரது அறிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளதாக விமல் வீரவன்ச இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் தெரிவித்துள்ளார். (வ)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தலைவர், உறுப்பினர்கள் நியமிப்பு

கொழும்பு, ஒக்.22

அரசமைப்பு சபையினால் தெரிவு செய்யப்பட்ட மனிதஉரிமைகள்ஆணைக் குழுவுக்கு, ஜனாதிபதி அனுமதி வழங்கி நியமனம் வழங்கினார்.

இதன்படிமனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் தலைவராக, பேராதனை பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி தீபிக உடகமவும் உறுப்பினர்களாக, லயனல் பெர்னாண்டோ, சாலியா பீரிஸ்,ஹுசாலி ஹுசைன் மற்றும் அம்பிகா சற்குணா னந்தன் ஆகியோர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பு சபையினால் நான்கு சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்கள்தெரிவுசெய்யப்பட்டு, ஜனாதிபதிக்கு நியமனத்துக்காக அனுப்பிவைக்கப்பட்டது. இதில் இலஞ்சம் மற்றும்ஊழல்குறித்தவிசாரணை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுமற்றும்பொதுச்சேவைகள் ஆணைக்குழு ஆகிய மூன்றுக்கான நியமனங்களை ஜனாதிபதி கடந்த வாரம் வழங்கி வைத்தார்.

எனினும்மனிதஉரிமைகள்ஆணைக் குழுவுக்கான தலைவர், உறுப்பினர்களுக்கான நியமனத்துக்கான அனுமதியை ஜனாதிபதி நேற்று வழங்கினார். (வ)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதிப்பிள்ளை கார்த்திகேசு



பளை, கச்சார்வெளியைப் பிறப்பிடமாகவும் பெருங்குளம் வீதி, சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிப்பிள்ளை கார்த்திகேசு நேற்று (21.10.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசுவின் (ப.நோ.கூ.சங்கம் - பளை ) அன்பு மனைவியும், மஞ்சுளா ( சுவிஸ் ) இளங்கோ (சுவிஸ்) யமுனா (சுவிஸ்) நர்மதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெருங்குளம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (C/15991) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

### துரைச்சாமி ஞானேஸ்வரி



மலேசியாவை பிறப்பிடமாகவும், அராலி மத்தி, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ஞானேஸ்வரி நேற்று ( 21.10.2015 ) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி (மலாயன் பென்சனியர்) அம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் சகாதேவன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், நோர்வே) வாமதேவன் (ஓய்வு பெற்ற பெருந்தோட்ட உத்தியோகத்தர்) பாலதேவன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர், யாழ்ப்பாணம்) ஞானதேவன் (ஓய்வு பெற்ற கணக்காளர், கொழும்பு) ஞானதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜ இராஜேஸ்வரி, பிரேமகுமாரி, நளாயினி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், இராஜ் தேவன் (புள்ளி விபரவியலாளர், நோர்வே) சத்தியா (நோர்வே) லிங்கேசன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) அகிலேசன் (ஆசிரியர், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்) கீர்த்தனா (இந்திய விசா அலுவலகம், யாழ்ப்பாணம்) சரணியா (மருத்துவ பீடம், களனி) சபேசன் (மென் பொருளியலாளர் கொழும்பு) ஜெகாம்பிகா (ஆசிரியை கிளி/இந்துக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் கணஷியாமின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.10.2015) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூனாவடை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
0779370208 (64162)

தகவல்
து.வாமதேவன்
சகோதரன்


# படையினர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளக நீதிமன்ற விசாரணை வேண்டும்

## *நிலைப்பாட்டை மாற்றினார் உதய கம்மன்பில*



கொழும்பு, ஒக்.22

இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க் குற்றம் இழைக்கவில்லை என்பதே எமது நிலைப்பாடு. எனினும், அவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள்முன்வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் உள்ளக நீதிமன்றப் பொறிமுறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் புதிய ஹெல உறுமயவின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, எதையுமே செய்யவில்லை என்று கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று [illegible] நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்து, தன் கன்னத்தில் தானே அறைந்துகொண்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

குற்றங்களுடன் தொடர்புபட்ட பல இராணுவச் சிப்பாய்கள் தண்டிக்கப்பட்ட கடந்த கால வரலாறு உள்ளது. இராணுவம் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியது நியாயமே. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போரின் பின்னர் எதையும் செய்யவில்லை என்று அரசு கூறுகின்றது. ஆனால், சபையில் பரணகம, உடலாகம ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை இதே அரசு சமர்ப்பித்துள்ளது.

மகிந்த அரசில் இறுதிப் போரில் சரணடைந்த 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க் குற்றம் இழைக்கவில்லை என்பதே எமது நிலைப்பாடு. எனினும், அவர்கள் மீது பல்வேறு குற்றச் சாட்க்டுகள்முன்வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் உள்ளகப் பொறிமுறையில் விசாரணை நடத்தப்பட்டு அறியப்பட வேண்டும்.

கடந்தகாலச்சம்பவங்களில் தொடர்புபட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர். பிரேமாவதி மனம்பேரியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தி கொலை செய்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டிருந்த இராணுவச் சிப்பாய்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அத்தோடு, 1997ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் கிரிஷாந்தி துஷ்பிர யோகத்துக்குட்படுத்தி கொலை செய்தஇராணுவச்சிப்பாய்க்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இது போன்ற வரலாறுகள் எம்மிடம் உள்ளன. எனவே, குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக நீதிமன்றக் கட்டமைப் பின் ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும்–என்றார். (வ–சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பலம்மிக்க வகையில் தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால உறுதி

கொழும்பு, ஒக்.22
சகல இனங்கள் மற்றும் சமயங்களுக்கு மத்தியில் நம்பிக்கையையும் பரஸ்பர புரிந்துணர்வையும் உறுதிப்படுத்தி நாட்டில் பலமான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பு மிகச் சரியாக நிறைவேற்றப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மா நாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்கத்தைப் பலப்படுத்துவதற்காக 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக தனியான ஒரு நிறுவனத்தை அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதன் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எமது நாட்டின் தேசிய நல்லிணக்கம் குறித்து நாட்டின் உள்ளிருந்து அல்லது நாட்டுக்கு வெளியிலிருந்து எவரும் குறை சொல்ல முடியாதவாறு அதன் நடவடிக்கைகளைச் சரியாக நிறைவேற்றுவது அரசின் நோக்கமாகும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதற்காக எல்லோரினதும் ஒத்துழைப்பு அரசுக்குத் தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.



முப்படையினருக்குத் தேவையான சகல வளங்களையும் போதுமான அளவு பெற்றுக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

போர் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களை அரசு என்றும் மதித்துக்கௌரவமளிக்கும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, அந்தக் கௌரவத்துக்குப் பங்கம் விளைவிப்பதற்கு எவருக்கும் இடமளிக்கப்போவதில்லை என்றும், போர் வெற்றிக்கு அர்ப்பணிப்புக்களைச் செய்தவர்கள் அவமதிப்புக்குள்ளாவதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

சேர்ஜோன்கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் வேந்தர் மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்த, உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(கு)

# பொலிஸ் மறியலில் கைதி சடலமாக மீட்பு

## கொலையா, தற்கொலையா என விசாரணை

கொழும்பு, ஒக்.22
வெல்லம்பிட்டிய பொலிஸ் விளக்கமறியலில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் 50 வயதுக் கைதியொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை வெல்லம்பிட்டிய, பிரெண்டியாவத்த பிரதேசத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செயப்பட்ட இவர் பொலிஸ் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார். அன்று பிற்பகல் 3.40 மணியளவில் விளக்கமறியலைத் திறந்து பார்த்தபோது அவர் உடுத்தியிருந்த சாரம் கிழிக்கப்பட்டு, அந்தப் பட்டியால் கழுத்தில் சுருக்கிட்டவாறு விளக்க மறியல் ஜன்னலில் தொங்கிக் கொண்டிருந்ததாகருவன்குணசேகரமேலும் தெரிவித்தார்.

கொழும்பு கிராண்ட்பாஸில் உள்ள முகவரி ஒன்றை இவர் பொலிஸாருக்குக் கொடுத்திருந்தபோதிலும் அது பொய்யான முகவரியெனத் தெரிய வந்துள்ளது. இவரது அடையாளம் இன்னும்உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி நிரோ பர்னாந்து சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசார ணையை நடத்தியபின் இது கொலையா? தற்கொலையா? என விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வெல்லம்பிட்டிய பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் எனவும் ருவன் குணசேகர மேலும் தெரிவித்தார்.

(கு)

# யானை தாக்கியதில் உயிரிழந்தார் பாகன்

கொழும்பு, ஒக். 22
கொடக்கவெல, மல்வத்த பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை பன்சாலையொன்றைச் சேர்ந்த யானையொன்று திடீரெனத் தாக்கியதில் அதன் பாகனான மூன்று பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாக கொடக்கவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொடக்கவெல, மல்வத்த பிரதேசத்தைச் சேர்ந்த ஏ.வை. பியசேன எனும் 51வயது நபரே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வழக்கம்போல இந்த யானையைக் குளிப்பாட்டிய பின், தனது வீட்டிலிருந்து சுமார் 30மீற்றர் தூரத்தில் அதனை கட்டிப் போட்டிருக்கிறார். அடுத்த நாள் காலை 6.30 மணியளவில் யானைக்குக் கொடுப் பதற்கு பிஸ்கட் பெட்டியொன்றை எடுத்துக் கொண்டு அவ்விடத்துக்குச் சென்றிருக்கிறார். பல வருட காலமாக இந்தப் பாகனால் பராமரிக்கப்பட்டு வந்த இந்த யானை அன்று ஏதோ காரணத்தால் அமைதி இழந்து காணப்பட்டிருக்கிறது. அதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ளாமல் யானைக்கு அருகில் சென்ற பாகனைத் தும்பிக்கையால் பற்றி நிலத்தில் அறைந்து கொன்றுள் ளது.

சிறிது காலத்துக்கு முன்னரும் இதே பிரதேசத்தில் இரு பிள்ளைகளின் தந்தையொருவரும், இந்த யானையின் தாக்குலில் உயிரிழந்ததாகப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

(கு)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டச் சுற்றுக்குள் நுழைந்தது மேரிஸ் மைலோ கிண்ணத்தில் றோயலை வீழ்த்தி




யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கான ஆட்டமொன்றில் றோயல் அணியைப் போராடி வீழ்த்தி, மாவட்டச் சுற்றுக்கு தகுதி பெற்றது சென். மேரிஸ்.
லீக்கில் இருந்து மாவட்டச் சுற்றுக்கு முன்னேறும் ஆட்டம் என்பதனால் ஆட்டத்தின் ஆரம்பம் முதலே போராட்ட குணம் இருக்கத்தான் செய்தது. இரு அணிகளதும் முயற்சிக்கும் போராட்டத்துக்கும் ஏற்ப இலகுவான வாய்ப்புக்களும் அமையத்தான் செய்தன. ஆனால் எந்தவொரு வாய்ப்பும் கோலாக மாற்றம் பெறவில்லை. 0:0 என்ற நிலையில் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி.
முதல் பாதியின் தவறுகளை சரிசெய்திடும் முனைப்பில் இரண்டாம் பாதிக்காக இரண்டு அணிகளும் களத்தில். இருப்பினும் இலகுவில் கோல் எதுவும் பதியப்படவில்லை. நீண்ட இழுபறியின் பின்னர் 37ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரன் ஜக்சன் தனது அணிக்கான கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். பழிதீர்க்க படாதபாடுபட்டது றோயல். சென்.மேரிஸின் இறுதி நிமிட பந்துப் பரிமாற்றங்களில் றோயலின் போராட்டம் எதுவும் எடுபடாத நிலையில் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாவட்டச் சுற்றுக்கு தகுதி பெற்றது சென். மேரிஸ் அணி. (ம-23)

## அன்ரனிஸ் மாவட்டச் சுற்றுக்கு தகுதி வீழ்ந்தது கலைவாணி வி.கழகம்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கான ஆட்டம் ஒன்றில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்று மாவட்டச் சுற்றுக்கு தகுதி பெற்றது.
அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி அணி மோதிக்கொண்டது. ஆட்டத்தின் 9ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணி சார்பாக முதல் கோல் பதிவானது. வேறெந்தக் கோல்களும் பதியப்படாத நிலையில் முடிவடைந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியிலும் அன்ரனிஸின் ஆதிக்கம் நீடித்திருக்கவே செய்தது. இரண்டாம் பாதியின் 34ஆவது நிமிடத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணி வீரன் கஜினஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். ஆட்டத்தின் 48ஆவது நிமிடத்தில் அன்ரனிஸ் சார்பாக மேலும் ஓர் கோல் பதிவாக, தற்பொழுது 3:0 என்ற நிலைமை. முடிவில் சென். அன்ரனிஸ் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாவட்டச் சுற்றுக்கு தகுதி பெற்றது. (ம-23)

## மைலோ கிண்ணத் தொடரின் மாவட்ட மட்ட ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக நடத்திவரும் தொடரில் லீக்குகளுக்கு இடையிலான ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் மாவட்ட மட்ட ஆட்டங்கள் அரியாலை உதை பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன.
யாழ். உதைபந்தாட்ட லீக்கிலிருந்து பாஷையூர் சென்.அன்ரனிஸ், நாவாந்துறை சென். மேரிஸ் அணிகளும், வலிகாமம் லீக்கிலிருந்து குறிஞ்சிக்குமரன், 5ஸ்ரார் அணிகளும், தீவக லீக்கிலிருந்து துறையூர் ஐயனார், நசரேத் அணிகளும், பருத்தித்துறை லீக்கிலிருந்து வல்வை சென். சேவியர் அணியும் - மருதங்கேணி பிரதேசத்திலிருந்து சத்திவேல், செந்தமிழ் அணிகளும் - வடமராட்சி லீக்கிலிருந்து யங்கம் பன்ஸ், நவஜீவன்ஸ் அணிகளும் இடம்பெறவுள்ள மாவட்ட மட்டச் சுற்றில் மோதவுள்ளன. (23)




யாழ். மாவட்ட மேசைப்பந்தாட்டச் சங்கத்தினால் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்பட்ட திறந்த மேசைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ். பல்கலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.பிரசாதி முதலாம் இடத்தையும், ஆண்கள் பிரிவில் யாழ். பல்கலையை பிரதிநிதித்துவம் செய்த ஏ.கில்பேட் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். (ம)

## யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 22
யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் நடைபெற்ற ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-
கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி 40:27 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 77:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது
செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணி 51:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 66:31 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)



## இன்றைய மோதல்கள்

**மைக்கல் வி.கழக தொடர்**
மாங்குளம், ஒக். 22
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண அணிகளுக்கு இடையில் முன்னெடுக்கப்பட்டு வரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்னார் எவகிறின் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் அணியும் மோதவுள்ளன. (ம-422)

## அரையிறுதிக்கு 786

யாழ்ப்பாணம், ஒக். 22
வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் 786 விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் 786 அணியை எதிர்த்து அல்மாதர் அணி மோதிக் கொண்டது. இதில் 786 அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## நவஜீவன்ஸ் இலகுவெற்றி

மாங்குளம், ஒக். 22
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் வடமாகாண அணிகளுக்கு இடையே நடத்தப்படும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.
நவஜீவன்ஸை எதிர்த்து அல்வாய் பாரதி அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் நவஜீவன்ஸ் அணியின் பந்துப் பரிமாற்றம் மிகச் சிறப்பாக அமைந்தது. இதனால் பந்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பாரதி அணி சற்று சிரமப்பட்டது. தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய நவஜீவன்ஸ் 13ஆவது, 15ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதியில் அவ்வளவு இலகுவாக எந்த அணியாலும் கோலைப் பதிவுசெய்ய முடியவில்லை. 30ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியைச் சேர்ந்த கௌதமன் மேலும் ஒரு கோலைப் போட்டு தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்தார். 37ஆவது நிமிடத்தில் கமலேஸின் உதவியுடன் பதில் கோலைப் பதிவுசெய்தது பாரதி. வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலையில் 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நவஜீவன்ஸ். (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகளை முழுமையாகத் தோற்கடிப்போம்

## இலங்கைத் தலைவர் மத்தியூஸ் தெரிவிப்பு



மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதி ரான டெஸ்ட் தொடரை முழுமையாகக் கைப்பற்றுவோம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ்.

மேற்கிந்திய தீவுகள் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. காலியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை இன்னிங்ஸ் மற்றும் 6 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று அசத்தியது. இரண்டாவது டெஸ்ட் இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் தொடர்பாக மத்தியூஸ் தெரிவித்ததாவது 'கடந்த ஆட்டத்தில் தீவுகளை வீழ்த்தியதைப்போல் இந்த ஆட்டத்திலும் மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தித் தொடரைக் கைப்பற்றுவோம். கேரத் பந்துவீச்சில் தொடர்ந்து அசத்தி வருகிறார். தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்திலும்கேரத்தின்பந்துவீச்சுசிறப்பாக அமையும் என்ற நம்பிக்கை உள்ளது. துடுப்பாட்டத்தில்சந்திமால்தொடர்ந்துமிரட்டிவருகிறார். அவர் ஓர் அற்புதமான வீரர். எதிர்காலக் கிரிக்கெட்டில் சந்திமால் ஒரு பிரதான கதாபாத்திரம் – என்றார். (ம)

## பொம்மர்ஸ், யங்ஹென்றிஸ் அரையிறுதிக்குள் நுழைந்தன

கரணவாய், ஒக். 22

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் எதிரணிகளை இலகுவில்வீழ்த்தியவதிரிபொம்மர்ஸ் விளையாட்டக் கழகம் மற்றும் இளவாலையங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் என்பன அரையிறுதியாட்டங்களுக்குத் தகுதிபெற்றன.

**பொம்மர்ஸ் எதிர் றெட்றேஞ்சர்ஸ்**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ்விளையாட்டுக்கழகமும்மானிப்பாய்றெட்றேஞ்சர்ஸ்விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்திலேயே பொம்மர்ஸ் அணியின்சாரங்கன்முதல்கோலைப் போட்டு தமது அணியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார். வேறெந்தக் கோல்களும் பதியப்படவில்லை.இடைவேளையின்பின்னர் சாரங்கன் மூன்று கோல்களையும் கோபிநாத் மற்றும் உதயராஜ் ஆகியோர் தலா ஓர் கோலையும் பதிவு செய்தனர். ஆட்டம் நிறைவடைய 4 நிமிடங்கள் இருக்கும் போது றெட்றேஞ்சர்ஸ் அணியின் கோகு லன் ஆறுதல் கோலை விளாசினார். முடிவில் 6:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றுஅரையிறுதிக்குள்நுழைந்தது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்.

**யங்ஹென்றிஸ் எதிர் இளைஞர்**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகமும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார் ஹென்றிஸ் அணியின் தனேஸ். மேலதிக கோல்கள் எவையும் பதியப்படவில்லை முதல் பாதியில். இரண்டாம் பாதியின் 2 ஆவது நிமிடத்தில் தனேஸ் மீண்டும் ஒரு கோலைப் பதிவுசெய்ய ஹென்றிஸ் அணியின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாயிற்று. இரண்டாம் பாதியின் 18 ஆவது நிமிடத்தில் மகிபன் மேலும் ஒரு கோலைப் போட 3:0 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றுஅரையிறுதிக்குச்சென்றதுயங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம். (ம-108)

## டுமினி இல்லை, மோர்கலும் விலகலாம்

## நான்காவது ஒருநாள் ஆட்டம் இன்று

தென்னாபிரிக்ககிரிக்கெட்அணியின் சகலதுறை வீரரான டுமினிக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ளதால், சென்னையில் இன்று நடைபெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் அவர் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் மோர்கலும் காலில் ஏற்பட்ட காயத்தால் இன்றைய ஆட்டத்தில் விளையாடுவது சந்தேகம்எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜ்கோட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 3ஆவது ஒருநாள் ஆட்டத்தில் டுமினியின் பந்துவீச்சை டோனி எதிர்கொண்டபொழுது 153 கி.மீ வேகத்தில் அடித்த பந்து டுமியின் இடது கை பெருவிரலைத் தாக்கியது. இதனால் அவருக்கு உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. குறித்த பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தையும் டோனி 161 கி.மீ. வேகத்தில் நேராக விளாச அது மீண்டும் டுமினியின் கையைத்தாக்கிகாயத்தைஏற்படுத்தியது. இதனால் இன்றைய ஆட்டத்தில் டுமினி விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆட்டத்தில் 4 இலக்குகளை வீழ்த்தி தென்னாபிரிக்காவின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்த மோர்கல், 6ஆவது பந்துப்பரிமாற்றத்தை வீசியபோழுது அவருடைய காலில் காயம் ஏற்பட்டது. காயம் குணமடையாத நிலையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோர்கலின் பங்கேற்பும் சந்தேகமாகியுள்ளது. (ம)



கடந்த ஆட்டத்தில் டுமினி காயமடைந்த வேளையில்

## தர்மசங்கடத்தில் இந்திய கிரிக்கெட்

இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடர் தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விவாதிக்க இருந்த கூட்டத்தை சிவசேனா என்ற அமைப்பு தனது ஆர்ப்பாட்டத்தின் மூலம் நடைபெறவிடாமல் செய்ததையடுத்து அடுத்தவருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண ரி–20 தொடரை, பாகிஸ்தான் வீரர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக கைவிடுவதற்குச் சந்தப்பங்கள் உள்ளதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. குறித்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஐ.சி.சி. இந்திய – தென்னாபிரிக்கா தொடரில் தனது பாகிஸ்தானிய நடுவரான அலிம்தாரை திரும்பப் பெற்றது. குறித்த தொடரிலேயே வர்ணனையாளர்களாக கடமையாற்றிய அக்தர் மற்றும் அக்ரம் இருவரும் தமது பாதுகாப்பு உறுதியில்லை எனத் தெரிவித்து நாடு திரும்பினர். நிலைமை தீவிரமடைந்ததையடுத்து அடுத்தவருடம் இந்தியாவில் நடைபெறவுள்ள ரி–20 உலகக்கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் வீரர்களுக்கு பாதுகாப்புச் சிக்கல் இருப்பதா ஐ.சி.சி. தெரிவித்துள்ளது. கிரிக்கெட்டில் பாதுகாப்புப் பிரச்சனை கொண்டுவரப்பட்ட வரிசையில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிம்பாப்வே வரிசையில் தற்பொழுது இந்தியாவும் இணைந்துள்ளது. (ம)

## யுவியின் புறக்கணிப்பு ஏன்?

### மீண்டும் கிளறப்படுகின்றன சர்ச்சைகள்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் யுவராஜ்சிங்கை தேர்வாளர்கள் புறக்கணித்தமை வருத்தம் அளிக்கிறது என்று தெரிவித்த முன்னாள் தலைவர் கவாஸ்கர், ரெய்னா, அக்சர் பட்டேல், ஜடேயா ஆகியோரை விட யுவராஜ் சிறந்த சகலதுறை வீரர் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற்றுவரும் ராஞ்சி கிண்ணத் தொடரில் குஜராத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 187 ஓட்டங்கள் குவித்து தனது திறமையை நிரூபித்தார் யுவராஜ். மேலும், இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைத்தால்தனதுவாய்ப்பைப்பயன்படுத்திக் கொள்வேன் என்றும் யுவராஜ்கூறியிருந்தார்.இதனால்இந்தியா தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையில் மீதமுள்ள இரண்டு ஒருநாள் ஆட்டங்களிலும் டெஸ்ட் தொடரிலும் யுவராஜ் இணைக்கப்படலாம் என்றகருத்து நிலவியது. ஆனால் யுவராஜ் இந்திய அணிக்கு திரும்புவது தொடர்பாக பரிசீலிக்கப்படவே இல்லை.

இந்த நிலையில் யுவியின் புறக்கணிப்பு தொடர்பாக கவாஸ்கர் தெரிவித்ததாவது 'யுவராஜை தெரிவு செய்யாதது எனக்கு வருத்தம் தருகிறது. இருப்பினும் இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இளம் வீரர்கள் மற்றும் அனுபவ வீரர்கள் என்ற கலவைதான் சிறந்தது என்பது என்னுடைய தனிப்பட்ட பார்வை. 5ஆவது இடத்தில் யுவராஜுக்கு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம். யுவராஜ் மிகப்பெரிய மாறுபாடு கொண்டவர். அதே சமயம் 10 வருடமாக விளையாடும் ரெய்னாவை நீங்கள் சரியான நபர் என்று எண்ண முடியாது.' என்றார். (ம)

## ஹென்றிஸ் – கொற்றாவத்தை இறுதியில் இன்று மோதல்





மாங்குளம், ஒக். 22

யாழ்.மாவட்டப்பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டத் தொடரில் இளவாலை ஹென்றிஸ் அணியும், கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையும் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளன. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணிக்கு கொலின்ஸ் வி.கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலைதனது அரையிறுதி ஆட்டத்தில் 4:1 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. இளவாலை ஹென்றிஸ் கல்லூரி தனது அரையிறுதி ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியை 4:0 என வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெற்ற சேவாக்கிற்கு பிரபலங்கள் புகழாரம்

சர்வதேச ஆட்டங்களில் இருந்தும், ஐ.பி.எல். ஆட்டங்களில் இருந்தும் ஓய்வினை அறிவித்த சேவாக்கிற்கு கிரிக்கெட் பிரபலங்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

**சச்சின்:–** சேவாக் பற்றி முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின், 'தனது அசாத்தியமான ஆட்டத்தால் சேவாக் முத்திரை பதித்தவர். அவர் எப்போதும் தனது உள்ளுணர்வின்படியே ஆடக் கூடியவர். அவர் மேலும் நம்மை மகிழ்விக்கும் விடயங்களில் ஈடுபடுவார் என்று நம்புகிறேன்.' என்று ருவீட் செய்துள்ளார்.



**டோனி:–** இந்திய அணித்தலைவர் டோனி, 'நாங்கள் ரிச்சர்ட்ஸ் ஆட்டத்தை பார்க்கவில்லை. ஆனால் நல்ல பந்துவீச்சாளர்களின் பந்துகளை சிதறடித்த சேவாக்கின் அதிரடி ஆட்டத்தைப் பார்த்திருக்கிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

**ரெய்னா:–** ரெய்னா தனது ருவிட்டில் 'சேவாக்குடன் விளையாடியது எனது அதிர்ஷ்டம் அவருடன் விளையாடிய நாள்களை மறக்க முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார்.

**சகீர் கான்:–** சில தினங்களுக்கு முன் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெற்ற சகீர் கான் தனது பதிவில் 'சேவாக், எப்படிப்பட்ட பந்து வீச்சினையும் எதிர்கொள்ளக் கூடிய சிறந்த துடுப்பாட்ட வீரராக இருந்தார்.' என்று குறிப்பிட்டுள்ளார்.

**யுவராஜ்:–** யுவராஜ் தனது பதிவில் 'தலை சிறந்த வீரர்களில் சேவாக்கும் ஒருவராக உள்ளார். அது மட்டுமல்லாது அவர் எனக்கு சிறந்த நண்பர்' என்று தெரிவித்துள்ளார்.

**பிரட் லீ:–** முன்னாள் ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் பிரட் லீ தனது ருவிட்டில் 'உங்களுக்கு எதிராக விளையாடியது மகிழ்ச்சியளிக்கி றது. சில சமயம் நான் உங்களை வீழ்த்தியிருக்கிறேன். ஆனால் எப்போதும் அது நடந்தது இல்லை. பல தடவைகள் அடி வேண்டியிருக்கிறேன் வாழ்த்துக்கள் சேவாக்' என்று தெரிவித்துள்ளார்.

(ம)




# ரியோ ஒலிம்பிக் தொடருக்கான நுழைவுச் சீட்டு விற்பனை தீவிரம்

பிரேஸிலின் ரியோ நகரில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடருக்கான நுழைவுச்சீட்டு விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. விற்பனை தொடங்கிய 8 மணி நேரத்திற்குள் 2 லட்சத்து 40 ஆயிரம் சீட்டுக்கள் விற்று தீர்ந் துள்ளதாக ரியோ ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கால்பந்து, கூடைப்பந்து, வலைப்பந்து உள்ளிட்ட தொடர்களுக்கான நுழைவுச்சீட்டுக்களை வாங்குவதில் ரசிகர்கள் மிகுந்த ஆர்வம் காட்டியதால் முதல் ஒரு மணி நேரத்தில் மட்டும் 1 லட்சத்து 20 ஆயிரம் டிக் கெட்டுகள் விற்பனை ஆகின.

மூன்றாம் கட்ட நுழைவுச்சீட்டு விற்பனையில், முதலில் வருவோருக்கு முதல் முன்னுரிமை என்ற அடிப்படையில் உள்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு 20 லட்சம் சீட்டுக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பிரேசில் அல்லாதவர்கள் தங்கள் நாட்டில் உள்ள மறு விற்பனையாளர்கள் மூலம் சீட்டுக்களைக் கொள்வனவு செய்ய முடியும்.

(ம)

# மிர்சாவுக்கு சிக்கல்



இந்திய சுழற்பந்து வீச்சாளர் அமித் மிஸ்ரா பெண் ஒருவரை பாலியல் ரீதியாகத் தாக்கியதாக அவர் மீது வழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளது. அடுத்த 7 நாள்களுக்குள் அவர் பெங்களூர் பொலிஸில் விளக்கம் கொடுக்க வேண்டும் எனவும் தவறின் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வழக்குப் பதிவுசெய்துள்ள பெங் களூர் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இந்தியா – தென்னாபிரிக்கா தொடருக்கு முன்னதாக கடந்த செப்ரெம்பர் மாதம் இந்திய அணி பெங்களூரில் பயிற்சி முகாமில் கலந்து கொண்டது. அந்த பயிற்சி முகாமில் பங்கேற்ற அமித் மிஸ்ரா, பெங்களூர் விடுதியில் தனது தோழியுடன் தங்கியிருந்தார். இந்நிலையில் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் அமித் மிஸ்ரா அந்த பெண்ணை தாக்கியுள்ளார். இதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட அந்த பெண் பொலிஸில் முறையிடபொலிஸாரும் வழக்குப் பதிவு செய்துள்ளனர். நடந்த சம்பவங்களுக்கு விடுதியின் ஊழியர்கள் சாட்சியமளித்ததாகவும் இதனால் மிர்சாமீது நடவடிக்கை எடுக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

# இங்கிலாந்து- பாகிஸ்தான் இரண்டாவது டெஸ்ட் இன்று



இங்கிலாந்து பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று டுபாயில் ஆரம்பமாகிறது.

ஏற்கனவே முடிவடைந்த முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிக்கு மிக அருகில் வந்திருந்தபோதிலும் மங்கலான வெளிச்சத்தின் காரணத்தினால் ஆட்டம் சமநிலையானது. இதனால் இந்த ஆட்டத்தில் கட்டாயம் வெற்றிபெற வேண்டும் என்ற நிலைமை எந்தவொரு அணிக்கும் இல்லை. ஆனால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கு அடுத்த ஆட்டத்தின் முடிவு எதுவாக அமைந்தாலும் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதால் ஆட்டத்தை தமக் குச் சாதகமாக்க இரு அணிகளும் முனைப்புக் காட்டும்.

(ம)



காலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக சில வாரங்களாக ஓய்வில் இருந்து வரும் மெஸ்ஸி தனது படம் ஒன்றை முகப்புத்தகத்தில் பதிவுசெய்துள்ளார். படத்துடன் இணைந்த முறையில் எனது இழப்பு நெய்மரின் சிறப்பான செயல்பாட்டால் அணியில் உணரப்படவில்லை என்றும் விரைவில் மைதானத்துக்கு திரும்புவேன் என்றும் பதிவிட்டுள்ளார். (ம)

# இந்துக்களுக்கு வெற்றி

யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ.விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகிறது.

குறித்த தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் கொக்குவில் இந்துக்கல்லூரி அணி 48:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது இதில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 64:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

அமெரிக்க லொத்தர் விசா
நீங்கள் கூட அதிஷ்டசாலியாகலாம்
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892
வல்வெட்டித்துறை 0776697960

AL பெறுபேறு வரும் வரையான காலத்தை, வெட்டுப்புள்ளி வரும் வரையான காலத்தை பயனுள்ளதாக்கும் வகையில்
இலவசக் கணினிப்பயிற்சி
இ.நா. அபிவிருத்தி திட்ட ஆதரவுடன் 2000ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் மாணவர்களிற்கு பயிற்சியினை வழங்கிய நிறுவனம், இன்று 15 வது ஆண்டு நிறைவில் உலகின் தரமானதும் அதிக வேலைவாய்ப்பினை உடைய நிறுவனங்களாகிய
Oracle Campus, Microsoft IIT academy, Cisco Academy, CIMA
மற்றும் கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு
என்பனவற்றுடன் இணை நிறுவனமாகதொழிற்படும் MCS IT CAMPUS இலவசக்கணினிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.விரும்பின்
Type<FREE><Name><DOB><District>sendTo 772395895
MCS IT CAMPUS
34 Sir Pon Ramanathan rd, near University of Jaffna
சிறந்த பெறுபேற்றுக்கா கொழும்பு பல்கலைக்கழகம்,
CIMA-UK விருதுகளை வென்ற நிறுவனம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.